# தெசிணி-யின்
# தமிழாக்கப் பாடல் திரட்டு



(கவிஞர் தெசிணி)
தி.வ. தெய்வசிகாமணி

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# ‘தெசிணி’ - யின்
# தமிழாக்கப் பாடல் திரட்டு

(கவிஞர் தெசிணி) தி.வ. தெய்வசிகாமணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை — 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Desini's Anthology of Tamil Versions of Selected Poems** |
| Author | : | T.V. Deivasigamani (DESINI),<br>Retd. Director, Tamil Cell,<br>Law Department, Secretariat. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai 600 113.<br>Ph.: 2254 2992 |
| Publication No | : | 446 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2003 |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | xii + 188 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 50/- (Rupees fifty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004. |
| Subject | : | (Tamil) Translation of Poems. |

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

மொழிபெயர்ப்பு என்பது ஓர் அரிய கலை. ஒரு நாட்டின் சிந்தனைச் செல்வத்தைப் பெருக்குவதற்கும், மொழியை வளப்படுத்துவதற்கும் ஒரு மொழியில் உள்ள செய்திகளைப் பிற மொழியினர் அறிந்துகொள்வதற்கும் பயன்படுவது மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பு என்ற சொல் மிகப் பழமை வாய்ந்தது. தொல்காப்பியம் 'மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல்' என மொழிபெயர்ப்புப் பற்றிச் சுட்டுகின்றது.

ஒரு மொழி இலக்கிய வளம் செறிந்த மொழி என்பதை அறுதியிட்டுக் கூறும் அளவுகோல்களுள் மொழிபெயர்ப்பும் ஒன்றாகும். மொழி பெயர்ப்பு என்பது அறிவு சார்ந்த வினையாக அமைவதோடு மொழிபெயர்ப்பாளர்களுக்கும், அறிஞர்களுக்கும் பெரிய சவாலாகவும் அமைந்துவிடுகிறது. ஏனெனில் ஒரு மொழியில் அமைந்துள்ள செய்திகளை, கருத்துகளை, உணர்வுகளை அப்படியே பிறிதொரு மொழிக்குக் கொண்டுசெல்வது என்பது இயலாததாகும். செய்திகளைத் தரமுடியும்; கருத்துகளைக் கூடத் தர முடியும்; ஆனால் ஒரு படைப்பாளியின் உணர்வுகளைப் பிறிதொரு மொழியில் அப்படியே தருவது மொழிபெயர்ப்பாளரால் முழுமையாகச் செய்ய முடிந்த காரியமன்று. மூலப்படைப்பின் உணர்வுகளுக்கு மிகவும் நெருங்கிய உணர்வுகள் மொழிபெயர்ப்பில் கிடைக்கும்போதுதான் அந்த மொழிபெயர்ப்புச் செம்மையானதாகவும் முழுமையானதாகவும் அமையும் என்று மொழிபெயர்ப்பு அறிஞர்கள் கருதுகின்றனர். அவ்வாறு செய்வதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர்க்கு மொழியின் மீது ஆர்வமும், போற்றத்தக்க தேர்ச்சியும், மொழிபெயர்ப்புத் திறனும், படைப்பாற்றலும், மொழியெயர்ப்புக்கெனக் கடினமான உழைப்பும், அர்ப்பணிப்பு உணர்வும் இன்றியமையாதனவாகும். இத்தகைய தகுதிகளோடு கூடிய ஒருவரால் செய்யப்படும் மொழிபெயர்ப்பு மூலப்படைப்புப் போன்றே காலந்தோறும் பாராட்டப்படுவதாக அமைந்துவிடுவதுமுண்டு. இவ்வகையில்

மொழிபெயர்ப்புப் பணியில் திறம்பட ஈடுபட்டுத் தமிழுக்கு வளம்சேர்த்த அறிஞர்கள் பலருண்டு. இவ்வரிசையில் கவிஞர் தெசிணி என்று அனைவராலும் அழைக்கப்பெறும் தி.வ. தெய்வசிகாமணி அவர்கள் சட்டத்துறையில் தமிழ்ப்பிரிவில் இயக்குநராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குமாகப் பல நூல்களை மொழிபெயர்த்து அளித்துத் தமிழ் வளர்ச்சிக்கு அரிய தொண்டாற்றியுள்ளார். இவர் செர்மன், துருக்கி, கொரியா முதலிய நாடுகளின் கவிஞர்களின் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இத்தொகுப்பில் இக்கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இக்கவிதைகளை வெறும் மொழிபெயர்ப்பாக மட்டும் செய்யாமல் தமிழ் யாப்பிலக்கணக் கூறுகளுக்கு ஏற்பத் தமிழ்க் கவிதைகளாக வடிவமைத்துத் தந்துள்ளார் என்றுதான் கூறவேண்டும். இக்கவிதைத் தொகுப்பை ஒருமுறை பயில்வார்க்குப் பிற நாட்டுக் கவிதைகளின் மொழிபெயர்ப்பைப் படிக்கும் உணர்வு ஏற்படாமல், தமிழ்க் கவிதைகளைப் படிக்கின்ற உணர்வே மேலோங்கி நிற்பதைக் காணலாம். இந்நிறுவனம் இவருடைய கவிதைத் தொகுப்பைத் 'தெசிணியின் தமிழாக்கப் பாடல் திரட்டு' என்ற பெயரில் மகிழ்ச்சியுடன் வெளியிடுவதை தன் கடமையாகக் கருதுகிறது.

சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் இந்நூலை வெளியிட நிதியுதவி வழங்கிய தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கும், அதன் இயக்குநர் முனைவர் மா. இராசேந்திரன் அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.** அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன். இந்நூலினை ஒளியச்சுக் கோப்புச் செய்த நிறுவனக் கணிப்பொறியாளர் திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
22-04-2003

**இயக்குநர்**

# என்னுரை

என் இளமைப் பருவத்திலேயே பிறந்த மண்ணுக்கும் தாய் மொழிக்கும் என்னால் இயன்ற அளவு பணி செய்ய வேண்டும் என்கின்ற நோக்கம் என் நெஞ்சில் உருவெடுத்திருந்தது. அதிலும் குறிப்பாக, நம் தமிழ் மொழியின் தனிச்சிறப்பைத் தரணி முழுவதும் அறியுமாறு செய்ய வேண்டும் என்கின்ற உந்துதல் உணர்வு, உள்ளத்தில் ஊற்றெடுத்துக் கொண்டே இருந்தது. சங்க இலக்கியப் பாடல்கள் முதலியவற்றை, இன்று உலகளாவிய மொழியாக வளர்ந்துவிட்ட ஆங்கிலத்தில் பெயர்த்துத் தருவது, மேற்சொன்ன நோக்கத்தை எய்துவதற்கான சிறந்த வழி என்று கருதினேன். ஆனால் அடுத்தடுத்து ஊர்ந்த சோதனைகளாலும், போதிய பொழுது அமையாததாலும், அத்தகைய படைப்புகளை அவ்வாறு முழுமையாகப் பெயர்க்க இயலாமற் போயிற்று; எனினும், அவ்வப்போது பண்டைய, இடைக்கால, தற்காலத் தமிழ்க் கவிதைகளில் தேர்ந்த சிறந்த சில தனிப்பாடல்களை, ஆங்கிலத்தில் ஆக்கி வந்தேன். அவை பல நாளேடுகளிலும் பருவ இதழ்களிலும் என்னுடைய 'கவிதை' ஏட்டிலும் வெளியிடப்பட்டு வந்தன. பின்னர், அவை 'AMBROSIA' என்னுந் தலைப்பில் ஒரு தொகுப்பு நூலாகப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தது. அவையன்றிச் சிறு சிறு இலக்கியங்களான கார் நாற்பது, களவழி நாற்பது, இனியவை நாற்பது, இன்னா நாற்பது ஆகியவற்றையும் நன்னெறி என்னும் நீதி நூலையும் ஆங்கிலத்தில் ஆக்கி, யான் முன்னர் நடத்தி வந்த 'கவிதை' என்னும் ஏட்டில் தொடர்ந்து வெளியிட்டு வந்தேன்; அவை விரைவில் நூல் வடிவம் பெற்று வெளிவரவுள்ளன.

இருவழிப் பாதை போன்று ஆங்கிலத்தின் மூலம் பிற நாடுகளின், மொழிகளின் கவிஞர்கள் இயற்றிய தனிப்பாடல்கள்

பலவற்றை நம் தமிழில் ஆக்கி வந்தேன்; அவை 1950களிலிருந்து **'கவிதை' 'யுனெஸ்கோ கூரியர்'** முதலிய ஏடுகளிலும் சில நூல்களிலும் வெளிவந்தன. அவற்றின் தொகுப்புத்தான் **'தெசிணியின் தமிழாக்கப் பாடல் திரட்டு'** என்னும் இந்த நூலாக இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

இத் தொகுப்பில் மொத்தம் 76 கவிதைகள் உள்ளன. இவை பல்வேறு சீன, ஆங்கில, செர்மானிய, பிரெஞ்சு, அமெரிக்க, உருசிய, கொரிய, ஸ்பெயின், துருக்கிய நாடுகளின் கவிஞர்களின் பாடல்களின் தமிழாக்க வடிவங்களாகும். தாகூர் முதலிய பாரத நாட்டுப் பாவலர்களின் பாடல்கள் சிலவும் தமிழாக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளன. இத் தொகுப்பின் முதல் பாட்டு, இற்றைக்கு 47 ஆண்டுகட்கு முன்னர் அதாவது, 1956இல் வெளியிடப்பட்டது. அது, தலவகார உபநிடதத்தின் தமிழாக்கப் பாடலாகும்; தலை சிறந்த தத்துவக் கவிதை அது. இறுதிப் பாடல், கன்னடக் கவிஞரான பேண்ட்ரேவின் பாடல்களில் 66 பாடல்களின் தமிழாக்கங்களாகும்.

இத் தமிழாக்கப்பாடல் திரட்டிலுள்ளவற்றில் பெரும் பாலானவை, தமிழ் மரபுக் கவிதை வடிவத்திலேயே ஆக்கப்பட்டுள்ளன; எஞ்சிய சில இக்காலப் பாடல்கள் உரை வீச்சு வடிவத்தில் தரப்பட்டுள்ளன. அதற்குக் காரணம் அத்தகைய பாடல்களின் மூலங்களின் பாடுபொருளும் பாடிய முறையும் அளவுமே ஆகும்.

இத் தொகுப்பின் மூலம் உலகின் பல நாடுகளையும் பலமொழிகளையும் சேர்ந்த பாவலர்களின் கருத்துகளையும் பாடுபொருள்களையும் தமிழ் அறிந்தோர் படித்து உணரலாம்.

மொழிபெயர்ப்பு ஒரு ரசவாதக் கலை; அதில் எளியேனால் இயன்ற மட்டும் மூலத்தின் கருவும் உருவும் சிதையாமல் அதே நேரத்தில் தமிழுக்கு ஆக்கமாக அமையும் வகையில்

இப் பணியைச் செய்துள்ளேன். இதில் எந்த அளவிற்கு யான் குறிக்கோளை எய்தியுள்ளேன் என்பதை, இத் திரட்டினைப் படிப்போர்தாம் முடிவு செய்தல் வேண்டும். மொழிபெயர்ப்புத் துறை ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இத் தமிழாக்கப் பாடல்திரட்டு ஒரு புதிய வரவாக அமையும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இத்தமிழாக்கப் பாடல்திரட்டினை, பாடல்களின் வகைப் பாட்டிற்கேற்ப எளியேன் அமைத்துக்கொடுத்தவாறு, மிக்க அழகாக வெளியிட்டுள்ள, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும் குறிப்பாக அதன் இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும் எளியேனின் பணிவார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ப.எண். 4/2, புதுஎண். 9,
மல்லீசுவரர் கோயில் தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ 24984703

– தி.வ. தெய்வசிகாமணி
(தெசிணி)

# ‘தெசிணி’-யின்
# தமிழாக்கப் பாடல் திரட்டு

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | தலவகார உபநிடதம் | 1 |
| 2. | காலத்திற்கு அறைகூவல்! | 10 |
| 3. | ரோஜாவுக்குப் பாடற்பரிசு! | 15 |
| 4. | தோணிப் பயணம் | 16 |
| 5. | அழைப்பாயே! | 17 |
| 6. | தலைவன் சிறைபிடித்தான்! | 18 |
| 7. | இறுதிப் பாடல்! | 19 |
| 8. | காதலைக் கூறாதீர்! | 20 |
| 9. | யாருக்கு அன்னையிடம் அதிக ஆசை! | 21 |
| 10. | என் நல்நட்பினர் | 23 |
| 11. | எழுமின் கவிஞர்காள்! | 24 |
| 12. | காலத்தால் அழியாதவை! | 25 |

| | | |
|---|---|---|
| 13. | 'நம்பிக்கை' எனும் பறவை! | 26 |
| 14. | காட்டில் ஒருநாள்... கார்கால அந்தியிலே....! | 27 |
| 15. | தலைசிறந்த படைப்பு | 28 |
| 16. | ஏதோ கொஞ்சம் பேச்சாம்! | 29 |
| 17. | தகுமோ, ஐயா? | 30 |
| 18. | குருடர்கள் கண்ட 'யானை'! | 31 |
| 19. | அரிப்பியல் | 33 |
| 20. | உயிரோவியக் காட்சி | 34 |
| 21. | கழுகு | 35 |
| 22. | கேண்மின், மறவ! | 36 |
| 23. | சூடுக, மகுடம்! | 37 |
| 24. | போரும் உட்போரும்! | 38 |
| 25. | நினைத்தபடி நான் நடக்க முடிந்திடாதோ? | 39 |
| 26. | மின்னுஞ் சிறகுகள் மட்டும் இருந்திடின்... | 42 |
| 27. | நாமோ, கொடுங்கோன்மையைப் புகழ்கின்றோம்! | 43 |
| 28. | மகிழ்ச்சிதரும் ஒருமித்த முடிவு வேண்டும்! | 44 |
| 29. | ஒலிம்பஸ் சார்ந்த உயர்ந்த இனம் இதுதானோ? | 45 |
| 30. | வந்த மடலுறை! | 46 |

| | | |
|---|---|---|
| 31. | 'நான்' என்னும் மாயை! | 47 |
| 32. | சின்னஞ் சிறியவைதாம்......... | 48 |
| 33. | மீண்டும் முயற்சிசெய்! | 49 |
| 34. | இன்றும் நாளையும்! | 50 |
| 35. | உண்மையான பெருந்தன்மை! | 51 |
| 36. | மின்னி மினுக்கும் விண்மீனே! | 52 |
| 37. | கற்றுக்கொடுத்தவர் யார்? | 53 |
| 38. | உணர்ச்சிப் பாடற் பாங்கு | 54 |
| 39. | ஆன்மாவின் பாடல் | 55 |
| 40. | உம்பர் உலகின் கவிகை மாடமே! | 57 |
| 41. | தேனீக்கள் | 58 |
| 42. | கண் | 59 |
| 43. | புகைப்படத்தில் 'புவி'! | 60 |
| 44. | உன்னை நான் (இப்படியாக்கிட) விரும்புகிறேன்! | 61 |
| 45. | எழுந்திரு, ஏபல்! | 63 |
| 46. | வட்டாரம், மாற்றிக்கொள்ளத்தக்கது! | 65 |
| 47. | ஜீன் அனோவிலின் இறப்புக்குப் பின், வார்விக் பிரபுவுக்கு ஏற்பட்ட எண்ணம்! | 66 |
| 48. | ஆறு வாத்துகள் | 72 |

| | | |
|---|---|---|
| 49. | குவியல் | 74 |
| 50. | சித்திரவதை! | 77 |
| 51. | புளூட்டோனியம் பற்றிய பாடல் | 81 |
| 52. | உட்கூரப்புகளுக்கு ஒரு விடைகொடுப்பு! | 87 |
| 53. | வரைமொழி (நிபந்தனை) உடன்படிக்கை! | 89 |
| 54. | அதுதான் என் முகவரி! | 94 |
| 55. | காற்பந்து ஆட்டக்காரர் | 95 |
| 56. | கோயா | 96 |
| 57. | நான் ஒரு மனிதனுங் கூட! | 98 |
| 58. | நான் ஒன்றும் முட்டாள் அல்லன்! | 99 |
| 59. | 'மனிதர்கள்' என்று அழைப்பீர்! | 100 |
| 60. | 'மௌனம்' என்பது எங்கே உள்ளது? | 102 |
| 61. | சாந்தா மார்த்தா குன்றில் பொலிவார்! | 103 |
| 62. | நீங்கள் உண்மையிலேயே கருதுவது அதுதானா? எனக்குச் சொல்லுங்கள்! | 106 |
| 63. | 'கூண்டுவண்டியில் இருந்தவன் குப்பன்'! | 109 |
| 64. | நாஜிகள், அவரது வீட்டை எரித்துச் சாம்பலாக்கினர்! | 112 |
| 65. | அந்தப் பூர்ச்ச மரம்! | 115 |

| | | |
|---|---|---|
| 66. | கல்லின்மீது காதல் மலர்! | 116 |
| 67. | வையம் முழுவதும் ஒன்றே! | 118 |
| 68. | வானவில் | 119 |
| 69. | ஸ்பெயின் துறைமுகம் | 120 |
| 70. | தீவுக் கூட்டங்கள் | 122 |
| 71. | அபூபென் ஆதம் குலம் தழைத்திடுக! | 123 |
| 72. | விறகுவெட்டியே, விட்டுவிடு அந்த மரத்தை! | 125 |
| 73. | ஒரு வேட்கை! | 127 |
| 74. | இல்லம், இனிய இல்லம்! | 129 |
| 75. | பெரு மலையும் சிறு அணிலும் | 130 |
| 76. | (கன்னடக் கவிஞர்) தத்தாத்ரேய இராமச்சந்திர பேண்ட்ரேவின் கவிதைகளில் சில | 132 |

# 1. தலவகார உபநிடதம்

## முதற் காண்டம்

**மாணாக்கர் கேட்கின்றார்:**

"எதனுடைய விருப்பமிது, விடுக்கப் பட்ட
மனமிங்கே தன்பயணம் நோக்கிச் செல்லல்?
எதனுடைய கட்டளையால், உயிர்த்தல் இங்கே
முதன்முதலில் நடக்கிறது? உரைப்பீர், ஐயா!

"எதனுடைய விருப்பத்தால், இந்த வாக்கும்
நிகழ்கிறது நம்நாக்கில்? விளங்க வைப்பீர்!
விதிப்பதென்ன கடவுள்தான் விழிக்கே? அன்றி,
பணிப்பதென்ன செவிக்கென்று பகர்வீர், ஐயா!"

**ஆசான் விடையளிக்கின்றார்:**

"காதிற்கே காதாக இருப்ப தஃது;
செவியினையே ஏவல்கொள்ளும் பிரம்மம் அஃதாம்!
ஓதிடிலோ, மனத்திற்கே மனமாம்; அஃது
உயிர்ப்பிற்கே உயிர்ப்பாம்;வாக் கிற்கே வாக்காம்!

"ஆதியந்த மற்றதஃது; கண்ணின் கண்ணாய்
அமைந்ததுவும் அஃதாமால், புலன்கள் வென்ற
கோதில்மெய் யறிவாளர் புவியாம் கோளை
நீத்ததுமே, 'இறவாமை' எய்து கின்றார்!

"அவ்விடத்தே செல்வதில்லை விழியும் வாக்கும்;
மனமுந்தான்! அதனால்,யாம் அறியோம்! ஆக,
எவ்விதந்தான் அதைஎவரும் கற்பித் தற்கே
இயலுமென்றும் எங்களுக்கு விளங்க வில்லை!

"அறிந்ததினும் வேறுபட்ட தஃதாம்; ஆமாம்,.
அறியாத வற்றிற்கும் மேலே ஓங்கி
இருப்பதுவும் அஃதாமாம்" – இவ்வா றிஃதைக்
கற்பித்த முன்னோர்கள் சொல்லக் கேட்டோம்!

"எதுவொன்றை வாக்கிங்கே விளக்கி டாமல்,
எதுவொன்றால் வாக்கின்பொருள் விளங்கு மாமோ,
அதுவொன்றே பிரம்மமென அறிக; மற்று,
மக்களிங்கே போற்றுவரே,. அஃதன் றாமே!

"எதுவொன்றை மனமிங்கே எண்ணி டாமல்,
எதுவொன்றால் மனம்பற்றி எண்ணு வோமோ,
அதுவொன்றே பிரம்மமென அறிக; மற்று,
மக்களிங்கே போற்றுவரே, அஃதன் றாமே!

"எதுவொன்றை விழியாலே பார்த்தி டாமல்,
எதுவொன்றால் விழியைஒருவர் காண்கின் றாரோ,
அதுவொன்றே பிரம்மமென அறிக; மற்று,
மக்களிங்கே போற்றுவரே, அஃதன் றாமே!

"எதுவொன்றைச் செவியாலே கேட்டி டாமல்,
எதுவொன்றால் செவிகள்தாம் கேட்கு மாமோ,
அதுவொன்றே பிரம்மமென அறிக; மற்று,
மக்களிங்கே போற்றுவரே, அஃதன் றாமே!

"எதுவொன்றை உயிர்மூச்சால் உயிர்த்தி டாமல்,
எதுவொன்றால் உயிர்மூச்சே கிடைக்கு மாமோ,
அதுவொன்றே பிரம்மமென அறிக; மற்று,
மக்களிங்கே போற்றுவரே, அஃதன் றாமே!"

## இரண்டாம் காண்டம்

**ஆசானின் கேள்வி:**

"யானதனை நன்கறிவேன் எனநீ எண்ணின்,
நீயுமதை உறுதியாக அறிவாய், சீட!
நாணற்க, குறைவாய்நீ அறிந்த போதும்;
நீயறிந்த பிரம்மத்தின் வடிவம் தானென்?"

**மாணாக்கரின் விடை:**

"நன்கறிவேன் அதையான்என் றெண்ணேன் ஐயா,
அறிந்திலன்நான்; அதையென்றும் அறியேன் யானே!
நன்குநம்மில் இதையறிந்தோர் அறிவர் அஃதை;
அதைஅறிவார் இருப்பரெனில், அறியா தோரே!

"எவரொருவர் பிரம்மத்தை எண்ணி டாரோ,
அவரேதான் அதைஎண்ணு பவராம்; ஆனால்,
எவரொருவர் அதைஎண்ணு பவரோ, ஐயா!
அவர்தானாம் அதைஎண்ணார் உண்மை யாக!

"அதைப்புரிந்து கொண்டவர்க்கோ அதுயா தென்றே
புரிவதில்லை; உண்மையிலே புரியா தோரே,
அதைப்புரிந்து கொண்டோராய் விளங்கு கின்றார்;
அதுதான்அப் பிரம்மத்தின் பொருளு மாகும்!

"விழிப்புநிலை யாலதனை அறிவ தாகக்
கருதுகிறோம்; '**இறவாமை**' எய்து கின்றோம்!
விழுமியதாம் பிரம்மத்தால், வலிமை பெற்றே
அறிவாலே '**இறவாமை**' எய்து கின்றோம்!

"ஈங்கிதனை ஒருமனிதன் அறிவா னாயின்,
அதுவேதான் உண்மையுமாம்; வாழ்வி னுக்கே
ஆங்குவரும் முடிவுநிலை அதுவே! அஃதை
அறியானேல், தொடர்பிறப்பாம் அழிவைக் காண்பான்!

"தேங்கிடுமெய் யறிவாலே இவற்றை எண்ணித்
தம்முளத்தே அப்பிரம்மம் உணர்ந்த சான்றோர்,
வீங்குபுகழ் இவ்வுலகை நீத்தி டுங்கால்,
'**இறவாமை**' எய்துகின்றார், வினையி னாலே!"

## மூன்றாம் காண்டம்

பிரம்மந்தான் தேவர் கட்கே
    வெற்றியைப் பெற்றுத் தந்தும்,
பிரம்மத்தின் வெற்றி யாலே
    தேவர்கள் செருக்குக் கொண்டார்;
பிரம்மத்தை மறந்தே, வெற்றி
    தமதென்றும், பெருமை கூட
பிரம்மத்தா லன்றே என்றும்
    பிதற்றினர், தாம்பெற் றாற்போல்!

உணர்ந்தது **பிரம்மம்**; பாடம்
    தேவர்கட் குணர்த்திக் காட்ட,
நினைத்தது; நினைத்த ஞான்றே,
    மெய்யுரு மறைத்த தம்மா!
கனத்திட்ட தலைச்செ ருக்கால்,
    தேவர்கள் காட்சி கெட்டுத்
திணறினர் மருண்டே, "ஈதென்
    மாயமாப் பூதம்?" என்றே!

"பூதம்போல் தோன்றும் இஃதோ,
    யாதென்றே புரிய வில்லை;
யாதுநாம் செய்வோம்?" என்றே
    விட்டனர் நோட்டம் யாண்டும்!
ஏதிலார் ஆன அன்னோர்,
    **அக்கினி** நோக்கிக் கேட்பர்:
"பூதமாய்த் தோன்றும் இஃதை
    என்னெனப் புகல்வீர்!" என்றே!

அக்கினித் தேவன் அந்தப்
    பூதத்தை நோக்கி ஒட,
அக்கணம் "யார்நீ!"" என்றே
    பிரம்மமும் அவனைக் கேட்க,
"அக்கினி என்பர் என்னை!"
    என்றனன் அவனும்; "உன்றன்
சக்திதான் யாதாம்? சொல்வாய்!"
    எனவின விற்றே, பிரம்மம்!

"எரித்திட முடியும் எந்தப்
பொருளையும் என்னால்!"-என்றே
உரைத்தனன் நெருப்புத் தேவன்;
பிரம்மமும், "ஓகோ, வா,வா!
எரித்திடு இதனை!" என்றே,
துரும்பொன்றை எடுத்துப் போட,
எரிதேவன் உடனே பொங்கி
யெழுந்தனன், சக்தி காட்ட!

திரட்டினன் சக்தி யெல்லாம்;
தீய்த்திட முயன்று, தோற்றுப்
புறப்பட்ட இடமே மீண்டான்,
புகையெலாங் கக்கி! பொல்லாச்
செருக்கெலாம் கருகிச் சோர்ந்தே,
"இஃதென்ன பூதம் என்றே,
அறியவே முடிய வில்லை!"
எனநவின் றடங்கிப் போனான்!

அன்னவன் மீண்ட பின்னர்,
தேவர்கள், வாயு நோக்கி,
"என்னிது பூதம் என்றே
கண்டுநீர் வருக, காற்றாம்
அண்ணலே!" என்று ரைக்க,
"ஆகாகா, இந்தப் போதே!"
என்றார்த்தே அதனை நோக்கி,
எழுந்தனன், காற்றுத் தேவன்!

"வந்தவன் யாவன்?" என்றே
பிரம்மமும் வினவ, காற்றும்
தன்பெயர் மொழிந்து நின்றான்;
"சரி"யென்ற பிரம்மம், "காற்றே,
நின்னிடம் உள்ள சக்தி
நவில்கநீ!" என்றே கேட்க,
"மண்ணிலே எதையும் என்னால்
தூக்கிட முடியும்!" என்றான்!

துரும்பொன்றை எடுத்துப் போட்டே,
"தூக்குக, இதனை!" என்றே
பிரம்மமும் கூறத் தன்னின்
பெருவலி யாவுங் கூட்டி
நிரம்பவும் முயன்றும் சற்றும்
முடியாமல் நெளிந்த 'வாயு',
திரும்பினன் தோற்றே; "ஒன்றும்
தெரிந்திட வில்லை!" என்றான்!

நொந்தனர் இதனைக் கேட்டுத்
தேவர்கள்; பின்னர் தங்கள்
**இந்திரன்** வலியை எண்ணி,
அவனிடம் சென்றே, "ஐய,
இந்திரத் தலைவ, இந்தப்
பூதந்தான் யாதாம்? கண்டு
வந்திடல் வேண்டும் தாங்கள்!"
என்றனர் வணங்கி வேண்டி!

இந்திரன், அதனை நோக்கிச்
சென்றனன்; என்னே மாயம்!
இந்திரன் கண்முன் அஃது
மறைந்ததே; என்னே செய்வான்?
அந்தமில் விசும்பில் மேலே
சென்றனன்; அவன்முன் ஆங்கே,
தந்தனள் காட்சி, **அன்னை**
அணிமணிக் கோலம் பூண்டே!

மேகத்தின் மகளாம், ஈசன்
மேனியிற் பாதி யான
ஆகத்தாள் **உமையாள்** அன்னோள்!
அவளிடம், "அம்மா, என்றன்
தாகத்தைத் தணிக்க வேண்டும்;
யாதிந்தப் பூதம் என்றே
ஊகிக்க முடிய வில்லை;
உண்மையை உரைப்பாய்!" என்றான்!

## நான்காம் காண்டம்

"பிரம்மமே அஃதாம், அந்த
பிரம்மத்தின் வெற்றி யால்தான்
பெருமையே உங்கட் கெல்லாம்!"
என அன்னை சொன்ன பின்தான்,
பிறிதொரு பூத மென்று
நினைத்தது பிழையே என்றும்,
பிரம்மந்தான் அஃதாம் என்றும்
இந்திரன் புரிந்து கொண்டான்!

அதனாலே "அக்(கி)னி, வாயு,
இந்திரன் எனும்முத் தேவர்
முதன்மையர் ஆவர், மற்றைத்
தெய்வங்கட் கெல்லாம் மேலே!
எதனாலே என்றால், இந்த
மூவர்தாம் பிரம்மந் தன்னை
அதிகமாய் நெருங்கிச் சென்றே,
தொட்டனர் என்ப தாலே!

ஏனைய தெய்வங் கட்கும்
மேற்பட்டோன் இந்தி ரன்தான்;
ஏனெனில் அவன்தான் மற்ற
தெய்வங்கள் எல்லார்க் கும்மேல்
போனவன்; பிரம்மந் தன்னை
மிகமிக நெருங்கித் தொட்ட
வானவன்; முதற்கண் அஃதை
அறிந்தோனும் அவனே யாவான்!

தொடர்ந்துபோ திப்ப தென்ன
பிரம்மந்தான், தெய்வங் கட்கே?
அடர்ந்திடு கரிய வானில்
அனல்தங்கக் கோலம் போட்டுச்
சுடர்ந்திடும் மின்னல் போன்றே
இக்கணம் ஒளிர்ந்து, பின்னர்
திடுமென இமைக்கும் முன்னே
மறைவதைப் போன்ற தென்றே!

மனத்தைப்போல் செல்வ தாகத்
  தோன்றுவ தெதுவோ, மற்றும்
இனங்கண்டே கற்ப னைதான்
  எதனாலே மீண்டும் மீண்டும்
நினைத்துக்கொள் கிறதோ, அஃதே
  பிரம்மமாம்; உடலைப் பற்றி,
மனவியல் வகையில் பிரம்மம்
  போதிக்கும் பாடம் இஃதே!

அதற்கொரு பெயரும் உண்டாம்,
  **'தத்வனம்'** என்று; பிரம்ம -
மதனைஅப் பெயரி னால்தான்
  தியானித்தல் வேண்டும்! ஆமாம்,
அதன்பொருள் என்ன வென்றால்,
  'அதன்விருப்பம்' என்ப தாகும்;
இதையறிந் தோனை, எல்லா
  உயிர்களும் வாழ்த்தி நிற்கும்!

ஆசானின் முடிவுரை:

"அருகினில் கீழ மர்ந்தாய்;
  "அறிவுரைத் தருள்வீர்!" என்றாய்;
பருகிட ஞானம் தன்னைப்
  பணிவுடன் கேட்ட, சீட!
கருத்துள்ள மறைஞா னத்தைக்
  கழறினேம் உனக்கே இக்கால்;
விருத்திசெய் இஞ்ஞா னத்தை;
  விழைந்தவா றுணர்வாய், சீட!

"உரைத்தனம் பிராமி என்னும்
உபநிட தத்தை; அஃதோ,
நிறைதவம், பொறுமை, ஈகம்!*
எனும்மூன்று கால்கள் பெற்றும்,
மறையெலாம் உறுப்பாய்ப் பெற்றும்,
உண்மையே தான்உ றையும்
உறையுளாய்ப் பெற்றும் நிற்கும்
என்பதை உரைத்தோம்; கேட்டாய்!

"இவ்வுப நிடதந் தன்னை
அறிந்தவன் எவனோ, அன்னோன்
இவ்வுல கிடையே மண்டுங்
கேடெலாம் களைவா னாயின்,
தெவ்வரால் வெல்ல வொண்ணா
அந்தமில் உலகாம் விண்ணின்
அவ்வுல கெய்தி, ஆங்கே
பேரின்பந் துய்த்து நிற்பான்!"

❁ ❁ ❁

* ஈகம் - தியாகம்

- சமற்கிருத மூலம்: ஆங்கில ஆக்கம் வாயிலாகத் தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'சிலம்பு'**- திங்களேடு, *1956*, ஏப்பிரல். மறுவெளியீடு: (**தெசிணி**-யின் **'திருமெய்ப்பொருட்பா'** நூல் *(2001)* பக்.*18-26)*.

# 2. காலத்திற்கு அறைகூவல்!

காலம்முன் னேறும் மேலே;
　　காண்போமோ மீண்டும் அஃதை?
காலமா காத்தி ருக்கும்?
　　கடுகியே நடையைப் போடக்
காலடி எடுத்து வைக்கும்
　　திங்களும் ஆண்டுஞ் சேர்ந்து!
காலையாம் புலரும் போழ்தும்,
　　கண்ணாடிப் புனலின் நீரும்

நேற்றுப்போல் தோன்று மின்றும்
　　நிலையிது உண்மை! ஆனால்,
சாற்றுவேன், கேளீர்: ஆண்டோ,
　　சிட்டெனப் பறக்கும்; திங்கள்,
காற்றென வந்தே வாழ்வைக்
　　கவர்ந்திடும்; இவையோ கள்வர்!
கூற்றெனக் கொள்ளைச் செல்வம்
　　சுருட்டிக்கொண் டோட்ட மாக,

ஒருவர்பின் ஒருவ ராக
　　ஓடும்இத் திருடர்க் கூட்டம்,
திரும்பியே பார்த்தி டாது!
　　சிறுபிஞ்சுப் பருவம் அஃதோ,
நறுமலர்ப் பூங்கா போலும்!
　　'நலி'வெனுஞ் சிறக டிக்கும்
பறவையோ, பழம்ப ழுக்கா
　　மரமதோ இல்லை ஆங்கே!

அழுக்கிலாப் பிஞ்சுப் போழ்தோ,
புதுமையாம் வாழ்வின் காலம்!
செழிக்கும்அப் பருவத் தின்பம்
சேர்ந்தாற்போல் தொடர்வ தில்லை!
கிழிக்கின்ற நாள்கு றிப்புத்
தாளினை வாழ்வில் பிய்த்துக்
கழிக்கின்ற உண்மை காணீர்;
பூவிதழ், இளமை காட்டும்!

ஆண்டொடு திங்க ளென்னும்
அலைகின்ற காற்று வீசும்;
மாண்டுதிர் இலைகள் வீழ்ந்தே
மண்ணினை மூடும்; ஆங்கே
பூண்டதோர் தனிமைத் தோற்றம்,
அம்மண மரங்கள் காட்டும்;
வேண்டிடும் பரிசைக் காலம்
விரும்பியே குவித்துச் செல்லும்!

சுருக்கங்கள் காணும் மெல்ல,
செல்வியர் முகங்க ளெல்லாம்;
கிறுக்கெலாம் செய்யும் கேடில்
இளைஞர்தம் முகங்கள் கூடப்
பெருக்கியே வளர்க்கும் தாடி!
காலத்தை ஏவல் கொண்டே,
நறுக்கிடும் ஆற்ற லுந்தான்,
நவில்வீரே, நமக்கிங் குண்டோ?

நம்மாலே இயல்வ தென்ன?
நீண்டிடும் காலந் தன்னைச்
சும்மாவே பார்த்தி டல்தான்,
செல்வழி செலட்டு மென்று!
முன்னரே விதித்த வாறு
செல்கின்ற தென்று சொல்லிச்
சென்றிட விடுமோ, இந்த
வையந்தான், காலந் தன்னை?

பனிமலர்ப் பூங்கா வாக
    மணல்நிறை பாலை யையும்
மனிதரின் இருக ரங்கள்
    மாற்றிடும்; கருணை யோடு,
நனிபல வாய்ப்பை நல்கும்,
    காலமாம் திங்கள், ஆண்டும்!
பனிவெள்ளக் குறுக்கே நிற்கும்
    மலைஏதும் பார்த்த துண்டோ?

கையினை ஊன்றிக் காலால்
    நடந்திடாக் குழந்தை, இன்று
கையினை வீசி யாடல்
    காண்பீரே! வாழ்க்கை யோடு
தொய்வில்லாச் சண்டை நாளும்
    தொடரட்டும் மற்றோர் என்று,
பையத்தாம் மட்டும் காலம்
    போம்வழி போவார், பாரீர்!

உடல், பொருள், ஆவி-மூன்றும்
    உலகினுக் கீந்தே மாண்டோர்
அடல்வீர நடுகல் மீதோ,
    கொத்துப்பூ கவரும் கண்ணை!
விடேனெனத் திங்களோ(டு) ஆண்டும்
    முதியோனாய் ஆக்கி னாலும்,
பிடியினிற் சிக்கி என்றும்
    நடைப்பிணம் ஆக மாட்டேன்!

தப்பியே செல்லப் பார்த்த
    காலத்தின் கையைப் பற்றி,
ஒப்பிலாக் கவிதை மாலை
    அணிவித்தேன் கழுத்தில், ஆமாம்
செப்பட்டும் என்பே ரென்று!
    கண்டேனா தோல்வி? காலம்
எப்படிப் பட்ட தேனும்,
    இயலாதே முதியோ னாக்க!

நீலத்து வானில் மின்னும்
    தாரகை கோடி போன்று,
காலத்தின் ஒளியைக் காட்டும்
    கவிதையாம் என்றன் செல்வம்!
காலத்தோ டிட்ட போரோ,
    காட்டிற்றே திகிலை, சாவை!
ஞாலத்தில் வெல்ல வேண்டின்,
    உறுதிதான் நெஞ்சில் வேண்டும்!

கையினைக் கொடுப்பா ரோடு
    கையினைச் சேர்க்கத் திண்மைக்
கையினை உடையேன்; கட்டிக்
    காத்திடும் வன்மை கொண்டேன்,
வெய்யிலில் மழையில் நம்மின்
    மணிக்கொடி தன்னை; ஆமாம்,
மெய்யிது! மேலே நீளும்
    பாதைகள், போர்க்க ளங்கள்

இவற்றிலே ஒருபோ தும்நான்
    சளைத்திடேன்; இடுக்கண் நேரின்,
அவற்றோடும் மற்போ ரிட்டே
    அழிப்பேன்யான்; தலையைத் தூக்கும்
எவற்றையும் வெற்றி கண்டே,
    முன்னேறிச் செல்வேன் மேலே;
இவற்றன்ன வெற்றி கண்டே,
    நகைப்பீரோ, திங்களோ(டு) ஆண்டே?

முழங்காலை மடக்கி உன்முன்
    மண்டியிடேன் ஒருபோ தும்,நான்!
கிழங்கட்டை யாக என்னைக்
    காலம்நீ ஆக்கி னாலும்,
புழுங்கிநான் தளர மாட்டேன்;
    நீயேதான் புழுத்துச் சாவாய்!
விழுங்கவோ பார்ப்பாய்? என்றன்
    பிள்ளைகள் உளரே, பின்னால்!

ஊர்ந்திடும் முடிவுப் போரில்
அவரெலாம் எதிர்ப்பர் உன்னை!
ஓர்ந்திடு, திங்களோ(டு) ஆண்டே!
இருவரும் கடல்நீர் போன்றீர்!
ஆர்க்கும்உம் அலைக ளாலே,
எமக்குள திறலைச் சற்றும்
தூர்த்திட இயலா தென்பேன்;
காலமே! தெளிக, உண்மை!

புரண்டாங்கே பெருகிப் பாயும்
பேரலைச் சக்தி யெல்லாம்
திரண்டெம்மை அச்சு றுத்த
முயலுதல், முயற்கொம் பாகும்;
உருண்டிடும் காலம் உன்முன்
எம்மனோர் நிலைப்ப டைப்பு,
சுருண்டிடா தெதிர்த்து நிற்கும்;
அறைகூவல் ஏற்பா யோ?நீ!

❁ ❁ ❁

மூலம்: **இலட்புல்லா முட்டாலெப்பு** (சீனக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: 'பத்மஜோதி' (சுடர் 2: கதிர் 8:: 16-2-1959).

# 3. ரோஜாவுக்குப்பாடற் பரிசு!

என்னவளுக் கின்று
பிறந்தநாள் வந்ததனால்,
பரிசென்ன தருவதெனப்
பலவாறு நான்எண்ணிப்

"பண்குயிலுக் கேற்றதொரு
புதுமைச்சொல் பாட்டேனும்
புகன்றிடுவாய் என்நெஞ்சே,
போற்றிடுவேன் உனைநாளும்!"

என்றேநான் கேட்டதற்கு,
எழுந்தபதில் இதுதானாம்:
"இப்போ துனக்குக்
கிளர்ந்தெழும் சந்தங்களில்

உன்றன் 'அன்பு'க்கு
மிகஉரிய(து) எதுவென்றே
அறிவால் தேர்ந்தெடுப்பாய்;
அதனையே அளித்திடுவாய்!"

இன்புற்றேன்; நான்தேர்ந்த
அப்பரிசை என்னென்பேன்!
இறவாத தென்சந்தத்
துடன்சொற்கள் இழைந்துவர,

பண்ணொன்று பிறந்ததுகாண்;
என்றன் பரிசாக
என்காதலி ரோஜாவிற்
கனுப்புவேன்,என் பாடலையே!

❋ ❋ ❋

மூலம் : 'சிட்னி லேனியர்' (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: 'பத்மஜோதி', ..............1958.

# 4. தோணிப் பயணம்

தோணிப் பயணஞ்செல்வோம்; -ஒரு
தேசம் முனையறியோம்!
நீணில மாந்தர்யாரும் - வரும்
நாளின் நடப்பறியார்!

வேலைப் படகுதன்னில் - நமக்கு
வழித்துணை நாமேதானாம்!
மாலைப் பொழுதிருக்கும்; - இப்படிக்
கேட்டனன் செய்தியொன்று!

நீலத் திரைஅலைக்கோ - சற்றே
நிற்கக் கரைஇல்லையாம்!
கோலக் கடற்பின்னணி - அமைழியைக்
காட்டியே நீசிரிப்பாய்!

பொங்கிடும் உன்சிரிப்பு; அதில்என்
பாடல்கள் தோய்ந்துபொங்கும்!
பொங்கும் அலைகளைப்போல்-சொற்கள்
பிடிப்பினை மீறிவரும்!

நேரந்தான் வந்ததுவோ? - உனக்கு
நீங்கா வேலைமிகவோ?
பேரந்தி வந்ததந்தோ! - கரையில்
பொன்னொளி குறைந்ததம்மா!

வானிற் கடற்பறவை -கூடு
விரைந்தது, பொழுதாகி;
தோணியைப் பிணித்திருக்கும் - தளைதான்
அறுந்திடல் எப்போது?

தேய்ந்திடும் மாலைக்கதிர் - தன்னில்
தோயும் அழகாய்த்தோணி
ஒய்ந்திடா அலைகிழித்தே - இருளினில்
மறைந்திடல் எப்போது?

❁ ❁ ❁

மூலம்: **தாகூர்** (வங்கக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த ஏடு: **தமிழ்நாடு**-நாளிதழ் ..................(1959)

# 5. அழைப்பாயே !

உன்னையே எண்ணி, எந்தாய்,
உனக்கேநான் பாட வுள்ளேன்!
உன்பெரும் அரங்கின் மூலை
ஒன்றெனக் கிருக்கை யாமாம்!
உன்றனின் உலகந் தன்னில்
எனக்கெந்தப் பணியு மில்லை;
மன்னிய நோக்க மின்றிப்
பாடிடும் வாழ்க்கை பெற்றேன்!

இருட்டெனும் கோயில் முன்னர்
அமைதியாய் இறைஞ்சி நிற்கத்
திருமணி அடிக்கும் போது
அழைத்திடு, தேவே, என்னை!
திருமேனி காணும் தீரா
வேட்கையால் துடித்து வந்தே
பொறுமையாய் முன்னே நிற்பேன்;
பாடல்கள் இசைப்பேன், போற்றி!

காலையும் புலரும்; மென்மை
இளங்காற்றை மூங்கில் வாங்கி
ஒலைபோல் இசையைத் தீட்டி,
எழுப்பிடும்; ஓரை தன்னில்,
தோளையே தட்டி என்னைத்
திருமுன்னர் அழைப்பாய்; தோய்ந்துன்
தாளையே வணங்கிப் பாடும்
பேற்றினைத் தருவாய், எந்தாய்!

❁ ❁ ❁

மூலம் : **தாகூர்** (வங்கக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த ஏடு: **'தினச்செய்தி'**-நாளிதழ், . . . *1959.*

# 6. தலைவன் சிறைபிடித்தான்!

நானுந்தான் பார்க்கின்றேன்,
நீண்டதொரு அமைதியுடன்;
ஊனுருகப் பாடுகின்றாய்;
எப்படியோ, நானறியேன்!

பேரிசையால் உலகமெலாம்
பெற்றிடுங்கொல் பொன்னொளியை?
மாரியன்ன இசைமூச்சும்
வானுக்குத் தாவிடுமோ?

பொங்கிஎழும் உன்றன்இசைப்
பேரின்பப் புனல்பாய்ந்தே,
இங்கிருக்கும் கல்தடைகள்
அனைத்தையுமே அழித்திடுமோ?

ஓட்டமாய்ப் பெருக்கெடுக்கும்
உயர்பழச்சாற் றிசையினிலே,
நாட்டமுடன் கலந்துவிடத்
துடிக்கின்ற தென்உள்ளம்!

வேட்கையுண்டு – என்னபயன்?
வாய்விட்டுக் கேட்கவில்லை;
கேட்டாலும் பதில்வருமோ? –
என்றுமனம் போராடும்!

பேசிடுவேன்; என்றாலும்
பிறந்திடுமோ பாட்டாக?
கூசிடுவேன் தோல்வியினால்;
உளம்நொந்து கதறிடுவேன்!

தலைவ,நீயோ? ஓகோகோ!
தொடர்ந்துவரும் உன்பாட்டின்
வலைப்பின்னல் கண்ணியிலே
என்உளத்தைச் சிறைபிடித்தாய்!

❁ ❁ ❁

மூலம் : தாகூர் (வங்கக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: 'பேரிகை'-வாரஇதழ், . . . 1958.

# 7. இறுதிப் பாடல்!

போரென வளர்ந்த புல்லிடை உலகம்
பாய்ந்தோடக் காணும் களிப்பும்;
நேரெனச் சாவும் வாழ்க்கையும் உலகில்
நர்த்தன மாடிடுங் களிப்பும்;

பேறெனும் வாழ்க்கையை எழுப்பியும் அசைத்தும்
புயலெனச் சிரித்திடும் களிப்பும்;
சீரென அமர்ந்தே நோயெனுந் தாமரை
மீதுகண் ணீர்விடுங் களிப்பும்;

தான்பெற்ற தனைத்தையும் வாரியே தூக்கித்
தூசியில் எறியும் களிப்பும்;
தான்மட்டும் யாரெனச் சொல்லிடு தற்கே
சொல்லொன் றறிந்திடாக் களிப்பும்;

தேன்போலும் இத்தனைக் களிப்பெலாம் சேர்ந்து
திறம்பல பெற்றன - அல்லவா ?
ஏன்பின் இவற்றைஎன் இறுதிப் பாடலில்
கலந்தொ லிக்கச் செய்யேன்?

❁ ❁ ❁

மூலம் : **தாகூர்** *(வங்கக் கவிஞர்)*
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'பேரிகை'**-வார இதழ், *10-5-1961.*

# 8. காதலைக் கூறாதீர் !

கூறமுடி யாததொன்று
காதல்; ஆமாம்,
கூறிடவே விழையாதீர்
உங்கள் காதல்!
கூறிவிட்டா வருகிறது
காற்றும்? அன்றி,
கூறுங்கள், கூர்விழிக்கும்
தெரிவ துண்டோ?

கூறினேன்நான், என்காதல்
கூறி நின்றேன்;
அவளிடம்என் நெஞ்சமெலாங்
கூறி நின்றேன்!
மாரியிலே மான்போலே
நடுங்கி அஞ்சி,
மிகநாணி அவளோடிப்
பிரிந்தே விட்டாள்!

எனைப்பிரிந்தே அவள்சென்ற
உடனே, ஆங்கு
எங்கிருந்தோ ஒருபயணி
அருகில் வந்தான்!
எனைத்தொட்டான்; தென்படவே
இல்லை; 'காற்று',
என்னவளைப் பெருமூச்சோ-
டழைத்துப் போனான்!

❁ ❁ ❁

மூலம் : டபிள்யூ. பிளேக் (W. Blake) (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிருமுறை),
(சுவடி 1: ஏடு 5 :: 15-06-1962).

# 9. யாருக்கு, அன்னையிடம் அதிக ஆசை ?

"உன்மீ(து) ஆசை, அம்மாவே!" -
என்றான் சிறுவன் முருகனவன்;
அன்னை இட்ட வேலையினை
அறவே மறந்தான்; தோட்டத்தின்
கண்கவர் ஊஞ்சல் தனிலாடப்
பறந்து சென்றான்; அதனாலே,
அன்னையே விறகு கொண்டுவர
நேர்ந்தது, முருகனின் மறதியினால்!

"உன்மீ(து) ஆசை, அம்மாவே!"-
என்றாள் சிறுமி தமிழரசி;
"என்றன் நாவால் உரைத்திடவே
முடியா தததனை! "-என்றிட்டாள்!
பின்னரோ தொல்லை மிகத்தந்தாள்
நாளெலாம்; உதட்டைப் பிதுக்கினளே!
அன்னவள் ஆடப் போனபின்தான்,
அன்னையும் மகிழ்ச்சி எய்தினளாம்!

"உன்மீ(து) ஆசை, அம்மாவே!"-
என்றனள் குட்டி மலரரசி;
"என்னா லான உதவியெலாம்
செய்வேன் உனக்கு இன்(று)!"-என்றாள்!
பின்னர் மெல்ல தொட்டிலுக்கே,
ஊர்ந்து சென்றாள் பதமாக;
கண்மணிக் குழந்தை தன்னையவள்
ஆட்டித் தூங்கிட வைத்தனளே!

பின்னர் மெதுவாய் நடைபோட்டுத்
துடைப்பந் தன்னை எடுத்தனளே;
கண்ணாடி போலத் தரையினைத்தான்
கூட்டினள்; அறையில் நிறைந்திருந்த
மண்ணொடு தூசியும் நீக்கினளே;
இயங்கினள் நாளெலாம் சுறுசுறுப்பாய்!
தன்னால் முடிந்த உதவியெலாம்
செய்தே மகிழ்வுடன் இருந்தனளே!

"உன்மீ(து) ஆசை, அம்மாவே!"-
என்றனர், குழந்தைகள் மூவருந்தாம்;
பின்னர் சென்றனர், படுக்கைக்கே!
இப்போ துங்களைக் கேட்டிடுவேன்:
அன்னையின் ஊகம் எதுவாக
இருக்கும் என்றே சொல்லுங்கள்;
உண்மையில் மிகுந்த ஆசையினைக்
கொண்டவர் யாராம், கூறிடுவீர்!

❁ ❁ ❁

மூலம் : **ஜாய் அல்லிசன்** (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிருமுறை),
*(சுவடி 1: ஏடு 6 :: 29-06-1962).*

# 10. என் நல்நட்பினர்

வறுமைச் சுமையுடன்
முன்னேற,
வாழ்வின் ஒவ்வொரு
திருப்பத்திலும்
அருமைத் துணையாய்க்
கைகொடுப்போர்
அடைந்திடக் காணக்
களிக்கின்றேன்!

என்பால் பொன்இல்லை
தருவதற்கு;
ஈடாய் அன்பொன்றே
உள்ளதனால்,
உன்பால் இறையே,
வேண்டுகிறேன்;
அவர்கட்(கு) உரியனாய்
எனைஆக்கு!

❋ ❋ ❋

மூலம் : **ஜினீவா ஹான்ஸ்** (Geneva Hance) (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிருமுறை),
*(சுவடி 1: ஏடு 6 :: 16-07-1962).*

# 11. எழுமின், கவிஞர்காள்!

எழுமின் கவிகாள்,
நாவலர், பாணரீர்!
இசைவல்லு நர்காள்,
யாவரும் எழுமினே!
விழுமியஎன் குறிக்கோள்
நிறைவேறும் உறுதியாய்
இன்றில்லை யெனினும்;
நீங்கள் முயல்கவே!

பச்சை (அ)ரத்தப்
பொலிவு மேனியின்
வலிவும், பிறந்த
மண்ணின் பாசமும்
கச்சை கட்டிய
உங்களுக் குண்டே;
குறிக்கோள் நிறைவெய்-
திடவே, எழுமினே!

எழுதினேன் குறிப்பாய்
ஒன்றோ இரண்டோ;
தொட்டு வைத்தேன்;
தொடர்ந்திட வாரீர்!
பொழுது காணேன்;
எனினும் சாதனை
நீங்கள்தாம் நிகழ்த்திட
வேண்டும், எழுமினே!

☸ ☸ ☸

மூலம் : **வால்ட் விட்மன்** (Walt Whitman) (அமெரிக்கக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிருமுறை),
(சுவடி 1: ஏடு 8 :: 30-07-1962).

# 12. காலத்தால் அழியாதவை!

விண்ணில் ஒருகணை எய்திநின்றேன் - மணல்
வெளியினில் எங்கோ விழுந்ததடா!
மண்ணில் விரைந்த வேகத்திலே, - அது
மறைந்ததால் காணக் கூடவில்லை!

காற்றில் மிதந்திடப் பண்ணொன்றைப் - பின்னர்
காட்டு வெளியினில் நானிசைத்தேன்!
கீற்று மின்னலின் வேகத்திலே - பாட்டின்
கீறலைத் தேடுவார் எவரே?சொல்!

நாள்பல நகர்ந்ததும் அக்கணையை - மீண்டும்
கண்டேன் மரமொன்றில்; மழுங்கவில்லை!
தோள்படு தோழன் ஒருவனிடம் - முன்னைப்
பாட்டையும் முழுமையாய்க் கேட்டேனே!

❁ ❁ ❁

மூலம் : ஹென்றி வாட்ஸ்வொர்த் லாங்ஃபெலோ (Henry Wadsworth Longfellow) (ஆங்கிலக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிருமுறை),
(சுவடி 1: ஏடு 11 & 12 : 1-12-1962).

# 13. 'நம்பிக்கை' எனும் பறவை!

'நம்பிக் கை'எனும் 'பறவை' - என்றன்
இதயம் நாடியே வந்தது;
தெம்பினை ஊட்டுமோர் பாட்டினை - நாளும்
இசைத்தது, சொற்க ளின்றியே!

புயலிலும் இன்பம் பயப்பதாய் - பாட்டின்
பொருள்இருந் ததனால் போலுமோ, - அதைட்
புயலெழுந் தழித்ததே அம்மா; - பலபேர்
பொன்முகம் கறுத்ததே அம்மா!

பனியிலே மீண்டுங் கேட்டேன்; - பறவைப்
பாட்டினைக் கடலிலே கேட்டேன்!
துணிவுடன் முடிவிலுங் கூட, - என்பால்
துளிஇரை கேட்டிட வில்லையே!

❋ ❋ ❋

மூலம் : **எமிலி டிக்கின்சன்** (Emily Dickinson) (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிருமுறை),
(சுவடி 1: ஏடு 13 & 14 :: 01-11-1962).

# 14. காட்டில் ஒருநாள்.... கார்கால அந்தியிலே.....!

கார்கால அந்தியிலே ஒருநாள், அந்தக்
காட்டுவழி பரிமீது சென்றேன்; வெள்ளிப்
போர்வையெனப் பனிமூட்டம் அடர்ந்த காட்டில்,
பொருட்காட்சி போல்ஏரி ஒன்றும் கண்டேன்!

எவருடைய காடென்றே எண்ணிப் பார்த்தேன்;
சிற்றூரில் உள்ளவர்தான் நினைவில் வந்தார்!
எவருடைய வீடிந்தக் காட்டில் காண்போம்?
இதுஅறியா தென்குதிரை கனைத்த தேனோ?

வழிஏதோ தவறிவிட்டேன் என்றே எண்ணி
என்குதிரை மணிக்கழுத்தை அசைத்த வேளை,
குழிபறிக்கும் கொடுங்காற்றின் ஒலியில் ஏரிக்
குளிர்நீரின் ஒலிகேட்டுக் கொண்டி ருந்தேன்!

அடர்ந்துள்ள அழகான இருண்ட காடு;
எனினும்என் வாக்கைநான் காக்க வேண்டும்;
நெடுந்தொலைவு செலவேண்டும் துயிலும் முன்னே;
நெடுந்தொலைவு செலவேண்டும் துயிலும்
முன்னே!

❋ ❋ ❋

மூலம் : இராபர்ட் ஃப்ராஸ்ட் (Robert Frost) (அமெரிக்கக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: '**கவிதை**' (திங்களிருமுறை),
(சுவடி 1: ஏடு 22 & 23 :: 14-03-1963).

# 15. தலைசிறந்த படைப்பு

ஒருபோதும் தீட்டிலேன்
ஓவிய மொன்றை;
ஒருபோதும் யாத்திலேன்
ஒருபாட் டதனை!
தீட்டி முடித்திடில்,
'ஞானி' தோன்றுவார்;
பாட்டு பிறந்திடில்,
'சிந்தனைப் பறவை'யாம்!

முயல்கிறேன்; பிறந்தநாள்
முதலே வேதனை;
உள்மனந் திறந்தே
காட்டிடத் தவறுவேன்;
வண்ணமோ சிதறி,
வான்மழை கலக்கும்;
சொற்களோ ஓடைநீர்க்
குமிழிக ளாகும்!

வண்ணங் களேஎனக்குக்
கிடைக்க வில்லையே;
வார்த்தைகள் தொடக்கமுதல்
சதிசெய் கின்றனவே! - ஆம்,
அந்த '**ஓவியம்**'என்
சிந்தையில் இருந்திடும்;
அந்தப் 'பாடலோ'என்
நெஞ்சினில் இருந்திடுமே!

❁ ❁ ❁

மூலம் : **அன்னா எம். பிரீஸ்ட்லே** (Anna M. Priestley) (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: '**கவிதை**' (திங்களிருமுறை),
(கவடி 2: ஏடு 1 :: 14-04-1963).

# 16. ஏதோ கொஞ்சம் பேச்சாம்!

கதவொன் றிருந்தது;
ஆனாலும்
திறந்திடத் திறவுகோல்
காணேனே!
முகத்திரை போர்த்திய
உன்னைத்தான்
பார்த்திட என்னால்
முடியவில்லை!

என்னையும் உன்னையும்
பற்றித்தான்,
ஏதோ கொஞ்சம்
பேச்சாமே;
பின்னர் அதுவும்
இல்லையாமே,
உன்னையும் என்னையும்
மறந்தாற்போல்!

❁ ❁ ❁

மூலம் : **உமர்கய்யாம்**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** *(திங்களிருமுறை),*

*(சுவடி 2: ஏடு 4 & 5 :: 15-06-1963).*

# 17. தகுமோ, ஐயா?

இத்தீவில் வந்திருந்த புதிதில் நீங்கள்
எவ்வாறெல் லாம்என்னை அடித்தீர், ஐயா!
எத்தனையோ விதமென்னை வதைத்தீர் வாட்டி;
இருந்தாலும் சுவைபானம் தந்தீர் அன்றோ?

பகலொளியைப் பரப்புகின்ற பெருவி ளக்கை,
இராக்குளிரும் சிறுவிளக்கை, என்ன பேரால்
புகல்வதெனக் கற்பித்தீர்; 'ஞாயிற்' றோடு
'திங்களை'யும் அறிந்தேன்;பின் உமைநே
சித்தேன்!

புதுப்புனலாம் நீரூற்றை; தீவின் உப்பங்
கழிகளொடு, வயல்வெளியை; பொட்டல் காட்டை -
இதுபோலும் இத்தீவின் தன்மை யாவுங்
காட்டினனே; அதற்கெனக்கு இன்னும் வேண்டும்!

உம்காதில் என்அன்னை சைக்கோ ராக்சின்
அழுகைச்சொல் வீழாதோ? உங்கள் நெஞ்சில்
பொங்காதோ பெருங்கருணை? வௌவா லோடு,
தேனீயும் தேரையும் புகன்றி டாவோ?

எனைத்தவிர்த்து வேறெவரும் இல்லை இங்கே
என்பதனால் எனைவாட்டு வீரோ? ஐயா!
நினைத்திடுவீர், முன்னர்யான் மன்னன் இங்கே;
நீள்தீவும் என்னுடைத்தே - மறந்திட் டீரோ?

தனித்திங்கே இன்னலுறும் கலியன் என்னைப்
பன்றியைப்போல் இம்முரட்டுப் பாறை தன்னில்
பிணித்தடைத்துத் தீவினின்றே எனைப்பி ரித்தே,
பெருங்கொடுமை செய்கின்றீர்; தகுமோ ஐயா?

❁ ❁ ❁

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** :: 1971 பிப்ரவரி :: பக். 29.

# 18. குருடர்கள் 'கண்ட' யானை!

இருட்டை நீக்கி அறிவுபெற
இந்துஸ் தானத் திருமூவர்,
ஒருநாள் யானை தனைக்காண
ஒன்றாய்ச் சேர்ந்தே சென்றனராம்!

குருடர்கள் பாவம் அனைவருமே;
எனினும் குன்றா வேட்கையினால்,
பொருளைத் தொட்டுப் பார்த்தேனும்
ஆசை தணிக்கப் போந்தனர்காண்!

முதலில் சென்ற அந்தகனோ,
முட்டிக் கொண்டான் யானையின்பால்;
அதனுடல் பகுதியைத் தடவியவன்,
"ஆகா! கண்டேன் வெற்றி!"யென்றே

புதிரை நீக்கிய பூரிப்பில்,
கூவிச் "சுவர்போல் உள!"தென்றான்;
அதற்குள் அடுத்த ஆள்சென்றே,
யானையின் தந்தத் தைத்தொட்டான்!

"ஓ,இது வென்ன வழுவழுப்பாய்,
முனையில் மட்டும் கூர்மையதாய்!
ஆ,இதை யறிவேன், யானையெனில்
ஈட்டி யேதான்!" என்றுரைத்தான்!

மூன்றாம் ஆளோ, முகபடாத்தின்
கீழே தொங்கிய துதிக்கையினை
ஏந்திக் கைகளில் அஞ்சாமல்,
"அடடே, பாம்புபோல் உள!"தென்றான்!

நான்கா மவனோ குனிந்துகொண்டே
களிற்றைச் சுற்றி நடந்துவந்தான்;
காண்ப தற்கே கண்ணிலையால்,
முழங்கால் தன்னில் மோதினனே!

"என்னே, இந்தப் பெருவிலங்கு,
சமவெளி போன்றதோ!" எனவியப்பான்;
பின்னர் சொல்வான்: "யானையெனில்,
மரம்போல் உள!"தெனப்
பெருமைகொள்வான்!

காதைத் தொட்ட ஐந்தாம்ஆள்
களிப்பில் சொல்வான்: "இதுதானா,
பேதை கூடச் சொல்வானே,
பெருங்குரு டனுக்கும் விளங்கிடுமே!

"வியப்பிற் குரிய யானைஇது,
விசிறி போன்றே உளதென்பேன்;
மயக்க மில்லார் ஒப்பிடுவர்;
மறுப்பா ருண்டோ? சொல்!"என்றான்!

இதற்குள் யானையின் வாலினையே
இறுகப் பற்றிய ஆறாம்ஆள்,
இதயங் குளிர்ந்தே, "மதவேழம்,
கயிறு போல்இருக் கிற!"தென்றான்!

இவ்வித மாக, அறுகுருடர்
இரைந்து நெடிதே வாதிட்டார்;
எவ்வகை நோக்கினும் தன்கருத்தே
சரியென ஒவ்வொரு வனும்குதித்தான்!

அவனவன் பார்த்த அளவினிலே
அவனவன் கருத்து சரியெனினும்,
எவனுமே முழுமை மெய்ப்பொருளை
அறியும் 'பார்வை' பெற்றிலனே!

❁ ❁ ❁

மூலம் : **ஜான் காட்ஃப்ரே சாக்ஸே** (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** :: (1971 மே).

# 19. அரிப்பியல்

(முன்கண்ட கட்டுக்கதைக் கவிதையைத் தொடர்ந்து, 'அரித்தல்' குறித்து ஆய்வு நடத்திவரும் **டாக்டர் பெஞ்சமின் ஃப்ளாய்டு பிரெளன்** அவர்களின் எண்ணப் பிரதிபலிப்பிலிருந்து உருவான கவிதை வரிகள் பின்வருமாறு)

'அரித்தல்' குறித்து முக்கியமாய்
ஆய்வோர், படிப்போர், நண்பர்கட்கு
அரிய நீதி புகட்டிடுமே,
அந்தகர் யானை கண்டகதை!

ஒருபுறம் சின்னஞ் சிறுபொருள்கள்;
உதிர்ந்(து)இடம் பெயர்ந்தவை, இன்னொருபால்;
வருத்தி மெய்யைத் தடந்தோளர்,
வனைந்தே பொறியைச் சீர்செய்வார்!

அறிவியல் அறிஞர் கரங்களிலே,
இயற்பிய லோடு வேதியியல்
புரிந்திடும் வித்தைப் புதுமையிலே,
ஒன்றை யொன்று விழுங்கிடல்காண்!

இதனால் ஏற்படும் விளைவுகளைத்
தடுக்கும் படங்கள் காண்பீரே!
உதய எதிர்வாய் மின்சக்தி
காண்பீர்; உருக்கும் 'ரசவாதம்'!

சுருங்கச் சொல்லின் 'அரிப்பியலே'
இதுதான் என்பார் ஃப்ளாய்டுபிரெளன்;
நிறுத்தியே நெஞ்சில் இக்காட்சி,
நினைத்துப் பார்ப்பீர் அக்கதையை!

இதனால் அறியக் கிடப்பதென்ன?
எந்தப் பொருளையும் அறியுமுன்னே,
அதனது உறுப்பைத் தனித்தனியாய்
ஆய்ந்தால் ஒன்றும் விளங்காதே!

புதிரை நீக்கிக் கொள்வதற்கே,
பொருளை முழுமையாய்ப் பார்த்திடுக;
எதிலும் குறிக்கோள் எய்துதற்கே,
எதையும் மொத்தமாய் ஆய்வோமே!

❁ ❁ ❁

கரு : **டாக்டர் பெஞ்சமின் ப்ளாய்டு பிரெளன்**
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** :: *(1971* மே.*)*

# 20. உயிரோவியக் காட்சி

பின்தொடர்ந்தான் ஆண்மானை
இடாத்தோப் பிற்குள்;
நெடிதுயிர்த்தும் பின்வாங்கான்;
அந்நே ரத்தில்,
விண்ணிருந்தே இரைதேடி
இறங்கி வந்த
வியாழனெனும் கடவுளது
பறவை யொன்று,

கண்ணிமைக்கும் பொழுதிற்குள்,
வளைந்த மூக்கால்
காளையினைக் கொத்திக்கொண்
டுயர்ந்தே கிற்றே!
மண்ணிலந்த பேரழகன்
**கனிமீட்ஸ்** என்பான்,
மறைகின்றான் விழியினின்றும்;
கையை நீட்டி

அன்னவனின் துணைவரெலாம்
வாய்பி ளக்க,
அருநன்றி குக்கலெலாம்
குரைத்து நிற்கும்;
கண்களிலே நீர்துளிர்க்கச்
செய்யும் இந்த
உயிரோவக் காட்சியினைக்
காண்பீர் இங்கே!

❁ ❁ ❁

மூலம் : **வர்ஜில்** (ஏனெய்ட் - நூலின் ஐந்தாம் தொகுதி : (ஆங்கில ஆக்கம்,
**(ட்ரைடென்)**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - 1970, சூலை.

# 21. கழுகு

மலைமுகட்டின் பனிப்போர்வை
விண்ணின் நீலம்,
தொலைத்தூரப் பசுங்காட்சி
விழியின் கோலம்!

❁ ❁ ❁

மூலம் : **தாமஸ் காம்ப்பெல்** (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: '**யுனெஸ்கோ கூரியர்**', 1970, சூலை.

# 22. கேண்மின், மறவ!

கேண்மின், மறவ! கேடில்நின் இதயத்தே,
வேண்டும், கண்ணியத் திண்மை வேண்டும்!

உணர்வு மட்டுமே உயர்வெனின், அஃது
குணச்சிறப் பன்றே, கண்ணியங் குன்றிடின்!

சிறகுதிர்ப் புள்ளின் சிறப்பென முடிப்புகழ்ச்
சிறப்பாங் கண்ணியம் செத்தநெஞ் செற்றுக்கோ?

சிறந்தவன் நீயே; நோக்கினா லேயே,
பிறந்ததும் தலைவனாய்ப் பீடுற வன்றோ?

நின்பெருந் தன்மை தாழாமல், மேலே
விண்ணார்ந் துயர்க, வீர! ஒருசொல்:

நற்குணத் தோடும் கருணைநெஞ் சோடும்,
அற்றோர் பால்நீ இரங்கி யருள்க!

துயருறு ஏழையர் விழிநீர் துடைத்தே,
அயரா தென்றும்நீ கண்ணியங் காக்கவே!

❁ ❁ ❁

மூலம் : **ஃபல் ஃப்ரம் ஃபன் ஷன்பாக்** (ஜெர்மானியக் கவிஞர்)
('பார்சிவல்' காப்பியம்) (கி.பி. 1200-1210)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்'**
(1971) (பக். 7)

# 23. சூடுக, மகுடம்!

நீர்ப்பெருக்கு சலசலப்பை, நீந்தும் மீனை,
நிலத்திலுள பொருளையெலாம் பார்த்து வந்தேன்;
வேர்த்தண்டில், இலைகளிலே, வயலில், காட்டில்,
வேய்ம்புல்லில் படர்வனவுங் கண்டேன்; இன்னும்,
பார்த்திட்டேன் பறப்பனவும்; இங்கே மண்ணில்
நடக்கின்ற படைப்பையெலாம் அறிந்து வந்தேன்!
ஆர்த்துநிற்கும் பகையின்றி வாழ்வ தில்லை
எப்படைப்பும் என்பதனை உணர்ந்தேன்; ஆமாம்!

மிகக்கொடிய விலங்கென்ன, பறவை யென்ன;
விலக்கில்லை, இப்பகைக்கு எறும்பும் ஈயும்!
தகவுடைய ஓரரசைத் தங்கட் கென்றே
உருவாக்க வில்லையெனில், பயனும் இல்லை;
தகுதியில்லை தாம்வாழ்தல் என்றுங் கூட
விலங்குகளே கருதுகிற தகைமை காணீர்!
தகுதியுள்ள மன்னருண்டு; ஏவல் உண்டு;
தமைத்தாமே அவைஆண்டு கொள்ளல் பாரீர்!

அத்தகுதி யும்இழந்தீர்; தகுமோ தேய்தல்?
ஜெர்மனியீர்! தேனீக்கும் இராணி உண்டே!
இத்தருண மேதிரும்பிப் பார்ப்பீர்! உங்கள்
பழம்பாதை மாற்றிடுவீர்! மகுடஞ் சூடி
நித்திரையில் அன்னியரோ? அடிமை மன்னர்,
இடைமறித்தால் தள்ளிடுக; நீசர் அன்னோர்!
இத்தரையின் பேரரசாய் மகுடந் தன்னை
பிலிப்,ஐய! சூடுக,எம் மானங் காத்தே!

❁ ❁ ❁

மூலம் : **வால்த்தர் ஃபன் ஃபேகல்வைதே** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்'**
*(1971) (பக். 8,9).*

# 24. போரும் உட்போரும்

மடமட வெனக்கிளை
முறிய,பேய்க்
காற்றில்
ஆங்கே
சடசட வென'ஒக்'
சாய்ந்தது
மண்ணில்;
அதுபோல்
உடன்பிறந் தாரையே
கொன்றிடும்
போரும்உட்
போரும்
தடம்புரட்டு கிறதே
தரணியை;
வாழ்வையே
அழிக்கிறதே!

☸ ☸ ☸

மூலம் : கவிஞர் ஹேன்ஸ் ஜேக்கப் கிரிஸ்டாஃபல் ஃபன் கிரிமெல்ஷாசன் (ஜெர்மானியக் கவிஞர்) 'சிப்லிஷியஸ் சிம்ப்ளிஷிசிமஸ்' - புதினத்திலிருந்து.

தமிழாக்கம் வெளிவந்த நூல்: 'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்' *(1971)* (பக். 22).

# 25. நினைத்தபடி நான் நடக்க முடிந்திடாதோ?

நினைத்தபடி நான்நடக்க முடிந்தி டாதோ?
நினைத்திட்டால், பின்வாங்கல் இனியு முண்டோ?
நினைத்திட்டேன் இவ்வாறு என்ப தாலே,
அச்செயலை நான்செய்தல் வேண்டு மாமோ?

இஃதென்ன அலைக்கழிப்பு நெஞ்சிற் குள்ளே?
இன்கனவோ? நடக்காதே என்ற றிந்தும்,
அப்போதும் வாய்ப்புக்கு வாயில் தன்னைத்
திறந்துவைக்க அறிந்தேனா? இலையே எண்ணம்!

சுதந்தரமும் ஆற்றலுமென் சிந்தை சூழக்
கற்பனையில் சுகித்திருந்தேன்; வேறொன் றில்லை!
இதந்தந்த நம்பிக்கை 'ராஜ பார்வை' -
இன்பத்தில் திளைத்திருந்தேன்; தவறோ அஃது?

திரும்பிவரத் திறந்திருந்த அந்தப் பாதைத்
திக்கினைநான் காண்கிலையோ? இருந்தும் யாரோ,
விரும்புகிற பக்கம்யான், அவர்க்குப் பின்னே
விரைந்துகொண்டே இருப்பதையும் உணர்கி லேனோ?

மறைகிறதே என்பின்னே பாதை யெல்லாம்;
மாறுகிறேன் வழியென்றே தடுப்ப தற்கோ,
மறைகின்ற கோபுரம்போல் என்றன் சொந்த
மாளிகையின் சுவரொன்றே உயர்தல் கண்டேன்!

*(மீண்டும் அசையாமல் நிற்கின்றான்)*

நிற்கின்றேன் குற்ற வாளியாய், வாழ்வின்
வெற்றுத் தெளிவிலாக் குழப்ப விளைவினால்!

தூயவர் செயலையும் தவறாய்த் தூற்றியே
ஐயப் பட்டிடில், நஞ்சென ஆகுமே!

காட்டிக் கொடுக்கும் கயவன் என்றெனை
காட்டிட முயல்கிறார்! அங்ஙன மாயின் -

தினமும் சிறந்து திகழ்ந்திருப் பேனே;
உணர்ச்சிக்கும் உளையா திருந்திருப் பேனே;

ஆனால், யானோ அறிவன்றென் றறிந்தும்
ஏனோ உணர்ச்சிச் சிறுமைக் கிறங்கினேன்!

உணர்ச்சிமே லீட்டால் குதூகல உணர்வும்
சினமுஞ் சேர்ந்திட வெடித்த சொற்களோ,

வன்மை யாகவே சிதறின! ஆம்,ஆம்!
உண்மையில், என்செயல் அவ்வா றில்லையே!

எண்ணாம லேயே நடந்த தென்னவோ
அன்னவற்றின் விளைவே சதியாய் அமைய,

என்றன் சொற்களே, எனக்கெதி ராக
என்அழிவுக் கென்றே பின்னி யெழுந்தனவோ!

வலையின் இடையே வாயினைப் பொத்தி,
வலையது எழுப்பிடும் குற்றச்சாட் டுக்குத்

தலைகுனிய வேண்டும்நான்; வன்முறை யதுதான்
வலையினை அறுத்தே விடுதலை வழங்குமோ?

*(அறைவழியாக விரைந்து நடையை ஓட்டும்போது,*
*மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தவனாய் இடைநிறுத்தி)*

உத்வேகச் சுதந்தரத்தால் செய்தேன் முன்னர்
அஞ்சாமல்; அதுவேறு! ஆனால் இன்றோ,
அத்தகைய அச்சமிலாச் செய்கை செய்ய
தற்காப்பு எனைநெருக்கும் நிலைக்கென் செய்வேன்?

செய்தாக வேண்டுமென ஆகி விட்டால்
செப்புவதென்? அதற்குப்பின் விதியின் மீதே,
கைதாக்க நேர்ந்தாலும் வியத்தற் கில்லை;
பிணச்சாம்பற் கலயத்தும் கைகள் தோயும்!

இந்தச்செயல் மட்டுமென்றன் நெஞ்சை விட்டே
இறங்கிவிட்டால், இவ்வுண்மை வெளியே சென்றால்,
தந்திரத்தில் வல்லவர்கைச் சேரும்; பின்னர்
செய்தவன்நான் என்றாலும் எவரும் நம்பார்!

உன்முயற்சி தானென்ன? அதனை யேனும்
நேர்மையுடன் ஒப்புக்கொண் டிருக்கின் றாயா?
எண்ணுகிறாய் கவிழ்த்துவிட அதிகா ரத்தை,
ஆயிரங்கால் வேர்கொண்ட சிக்கல் தன்னை!

முடிமட்டும் இருக்குமங்கே; உள்ளீ டில்லை;
முளைக்கின்ற பிராயத்துத் தூய்மை யான
துடிப்போடு, பழக்கத்தால் ஊன்றிப் போன
துரைத்தனத்தைச் சாய்ப்பதுதான் அந்தப் போரோ?

வலிமைக்கும் வலிமைக்கும் இடையே அன்று
என்பதனால், எனக்கில்லை அச்ச மேதும்;
வலிவுள்ள பகைவனெனில் அவன்கண் ணுக்குள்
நான்பார்க்க, அவனுமெனைத் தூண்ட வேண்டும்!

அதைவிடுத்தே, முதுகின்பின் என்னை ஏசி
எதிர்த்துவரும் கோழையென அவனி ருப்பின்—
அதற்கேயான் அஞ்சுகிறேன்; அழிவுக் கோட்டின்
எல்லையிலே வாழ்வுபற்றி அச்ச முண்டோ?

நேற்றென்னும் வீண்பொழுது; இன்றும், நாளை
நேற்றாகும், நிரந்தரமாய்! நினைத்தால் நெஞ்சும்
கூற்றாகும்; பழக்கத்தால் மனிதன் கூட
உற்சாகம் அற்றியங்கும் 'அடிமை' தானே!

முன்னோரின் முடிமயிரைக் கூடக் காக்கும்
அவனுக்கோ, 'பழங்குப்பை', மதிப்புச் சொத்தாம்;
முன்நோக்கும் 'ஆண்டு'எனுங் காலம், அன்னோன்
'முதுபொருளை'த் தீவிரமாய்த் தூய்மை யாக்கும்!

முதுமையினால் நரைத்திட்டால் என்ன? தொன்மைப்
பொருளெல்லாம் அவனுக்குப் 'புனிதம்' தானே?
முதுபொருளை உடையோனாய் இருந்தால், மக்கள்
புனிதமுடன் உனக்காக அவற்றைக் காப்பர்!

❁ ❁ ❁

மூலம்: **'ஷில்லர்'** (ஜெர்மானியக் கவிஞர்) (வாலன்ஷ்டைன் மரணம்) (1799)
(மூன்று நாடகத் தொடரில் இறுதி நாடகம்).
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப்-பகுதிகள்'** (1971) (பக்.126-128).

# 26. மின்னுஞ் சிறகுகள் மட்டும் இருந்திடின்.....

சின்னஞ் சிறியதோர் காட்டுப் பறவையாய்
நானிருந் தால்,அதைப் பாடிடுவேன்;
மின்னுஞ் சிறகுகள் மட்டும் இருந்திடின்,
விண்வெளி யெல்லாம் பறந்திடுவேன்!

❁ ❁ ❁

மூலம் : **'ஐஹென்டோர்ஃப்** (ஜெர்மானியக் கவிஞர்) *(உதவாக்கரையின் நினைவுக் குறிப்புகள்) (ஏழாவது அதிகாரம்)*

தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்'** *(1971) (பக். 189).*

# 27. நாமோ, கொடுங்கோன்மையைப் புகழ்கின்றோம்!

வித்தகம் யாவற்றையும் வெறுத்துத் துறந்தே,
சித்தத் தெளிவினைச் சபித்திடு கின்றோம்!

ஒளியினைத் துறந்தோம்; உலக மைந்த!
தளைகள் உறுத்தலைச் சபித்தான் தலைவன்!

அன்னவன் இருக்கை அணிநலம் எழவே,
இன்னே துயில்க; இறைஞ்சித் தொழுகவே!

எங்கள் கருத்தோ, இறைவன் தருபவை;
வெங்கொடுங் கோன்மையைப் பழிப்பது வன்றே!

ஒன்று மட்டும் சிந்திக்க நமக்கு
நன்று என்பது, நாயகன் கட்டளை;

கொற்றத் தலைவனின் கோலும் பீடும்
பற்றிய அஃதொன்றே சுதந்தரச் சிந்தனை!

இங்கே சுதந்தரமாய்த் தனியே இருப்பவனை
அங்கே பழிக்குப் பழிவாங்கக் காத்துளது -

நிரந்தரமாய் என்றென்றும் நெடுமலைக்கும் மேலே!
வரம்பெற்றார், கவியறியார்; சிந்தனையில் வறியர்!

கொடுத்து வைத்தவர்கள் அவர்கள்; நாமோ,
கொடுங்கோன்மை புகழ்கின்றோம்; தொழுகின்றோம்; ஒப்கிறோமே!

❁ ❁ ❁

மூலம் : **ஆதோல்ப் கிளாஸ் பிரன்னர்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்'**
*(1971) (பக். 233).*

# 28. மகிழ்ச்சிதரும் ஒருமித்த முடிவு வேண்டும்!

**நடிகர் கூறுகின்றார்:**

நாடகத்தைக் காணவந்த பெரியீர், மற்றும்
தாய்க்குலத்தீர்! ஏமாற்றங் கொள்ளல் வேண்டா!
நாடகத்து முடிவுகண்டே உம்மில் சில்லோர்
முகஞ்சுளித்தீர்; நலக்குறைவைப் புரிந்து கொண்டோம்!

பொன்னான புராணத்துக் காதை ஒன்றை
வழங்கத்தான் நினைத்ததெலாம்; முடிவோ வேறாய்
நின்றதுபோல் இடைநடுவே ஆன தென்றால்,
நிலையினையாம் சமாளித்த தறிவீர் அன்றோ?

பார்ப்பவர்கள் ஏமாற்றம் அடைய நேர்ந்தால்,
படுத்திடுமே தொழிலெமக்கு; உண்மை சொன்னால்,
பார்ப்பவர்கள் ஏற்கவில்லை என்றால், எங்கள்
நாடகமும் பரிதாபத் தோல்வி தானே?

அரங்கத்தின் அச்சந்தான் அனைத்தும் எம்மை
மறக்கச்செய் தனவென்றால், அதுவும் உண்மை!
சிறப்பாக விளங்குதற்கே இன்னும் என்ன
மாற்றங்கள் செய்திடலாம் - கருத்தைச் சொல்வீர்!

கலைஞர்தம் நடிப்பையின்னுங் கூட்ட லாமா?
அன்றி,இந்த உலகைமாற்றிக் காட்ட லாமா?
இலை,அந்தக் கடவுளரை மட்டும் மாற்றி
ஒருவருமே இலாதபடி செய்ய லாமா?

குறைவின்றி உழைத்திட்ட உணர்வெங் கட்கு;
நல்முடிவு கொண்டகதை வழங்கு தற்கே,
உரையுங்கள் வழி;நாங்கள் பிழைப்ப தற்கே
உள்ளவழி இதுவொன்றே; புரந்த ருள்வீர்!

பெருமக்காள், தாய்க்குலத்தீர்! உம்மை நாங்கள்
பெரிதாக நம்பியுள்ளோம்; நீங்கள் சொல்லும்
ஒருமித்த மகிழ்ச்சிதரும் முடிவெங் கட்கு
வேண்டும்ஐயா, வேண்டும்அம்மா, வேண்டும், வேண்டும்!

☸ ☸ ☸

மூலம் : **பிரெஹ்ட்** (ஜெர்மானியக் கவிஞர்) ("ஸெட்ஸுவானில் ஒரு நல்ல பிறவி" - நாடகம்)

தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்'** *(1971) (பக். 439-440).*

# 29. ஒலிம்பஸ் சார்ந்த உயர்ந்த இனம் இதுதானோ?

நம்முடைய தெய்விகத்து
நெறிமேற் கொண்டே,
உள்ளபடி ஒழுகியிவன்
நடப்போன் தானா?
நம்முடைய சிறப்புயர்த்தும்
ஒலிம்பஸ் சார்ந்த
உயர்ந்தஇனம் இதுதானோ?
சொல்வீர்! அன்னோன்,

நம்மிடத்தில் நிலங்கேட்டுப்
பெறவில் லையா,
தன்வீட்டை அமைப்பதற்கே?
கடைசி யாக,
நம்மைவிட்டே அயல்மண்ணில்
தனித்துச் சுற்றும்
கதிதானோ அவனுடைய
முடிந்த தெல்லாம்?

❁ ❁ ❁

மூலம் : **ஷில்லர்** (ஜெர்மானியக் கவிஞர்) **(எல்யூஸியன் திருவிழா)**
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்'**
*(1971) (பக். 530-531).*

# 30. வந்த மடலுறை!

புயல்வளிக் காலம், ஓர்..... நள்ளிராப் போழ்தில்......
இயற்றினேன் ஒருபா, உளத்தீ எழுச்சியால்!
ஒருமுறை திடுமென் றோங்கிய காற்றலை,
உருவிற்றுப் போலுமென் பாடலை; உருவியே,
உலகம் முழுவதும் உலவிடச் செய்தது!
பலநாள் பறந்ததால்,அப் பாட்டையே மறந்தேன்!

ஃ ஃ ஃ

ஒருநாள் காலை..... வந்த மடல்களில்,
ஒருவித ஐயமும்நான் உறாத நிலையினில்,
உறையொன்று கண்டேன்; அதனின் றுதிர்ந்தன,
இலைகள்போல், ஏட்டின் வெட்டிய துண்டுகள்
ஒன்றன் பின்னே ஒன்றென; ஆங்கே,
கண்டேன், மீண்டுமென் கவிதையைக் கண்டேன்!
அது,
முன்னர் நன்னிராப் போழ்தில் முகிழ்த்த
என்றன் கற்பனை ஈன்ற பாடல்தான்!

இப்போதோ-
பிறநில மொழிகளில் பெயர்த்திருந் தார்கள்,
திறத்திற் கேற்பவும் தெரிந்த அளவிலும்!
ஆனால், அதுநான் இயற்றிய பாடல்
தானா? அன்றி,மூலக் கருத்தினைத் தாங்கிப்
புரிந்த நிலையில் பிறந்த ஆக்கமா,
செறிந்த திட்பஞ் சேர்ந்ததா என்றால்,
'ஆம்' என அறையு மாறு
தாமவை தரமுடைத் தென்பதற் கில்லையே!

❁ ❁ ❁

மூலம் : **லியோனிடு மார்ட்டினோவ்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 14: ஏடு1:: 1975, ஏப்பிரல்).

# 31. ‘நான்’ என்னும் மாயை!

செய்தாக வேண்டியவை யாவுஞ் செய்தேன்,
    தரவேண்டி யிருந்தவெலாம் தந்தேன்; வேண்டும்
மெய்யான கவனிப்பும் ஈந்து வந்தேன்;
    தொடர்ந்தின்னும் செய்கின்றேன், வேண்டும் யாவும்!

செய்தவன்யார்? ‘**நான்**’என்றா சொன்னேன், ஆமாம்,
    ‘நான்’என்றால், அவ்வாறு நான்ஏன் செய்தேன்?
எய்தகணை போல்கிளர்ந்த கேள்வி தைக்க,
    என்னையேநான் ஐயமுற்றேன்; உணர்ந்தேன் ‘**மாயை**’!

ஆண்டுபல வாகியும்என் அறியா மையோ
    அகலவில்லை; என்செய்வேன்? இன்னுஞ் செய்ய
வேண்டியுள்ள பணிபெரிது; பொழுதும் உண்டாம்;
    எனினும்யான் பணிமுடிக்க வல்லே னாமோ?

என்னஇது மீண்டுமென்னுள் மற்றோர் ஐயம்!
    செய்வதெல்லாம் மானிடனா செய்கின் றான்,சொல்?
என்**இறைவன்** அவனன்றோ செய்விக் கின்றான்
    எனத்தெளிந்தேன்; செயல்முனைந்தேன்; ‘**ஆற்றல்**’ பெற்றேன்!

❋ ❋ ❋

மூலம் : **ஜான் பெர்ரிமேன்** (அமெரிக்கக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: ‘**கவிதை**’ (திங்களிதழ்) (சுவடி 14: ஏடு2:: 1975, மே).

# 32. சின்னஞ் சிறியவைதாம்....

சின்னஞ் சிறிய நீர்த்துளிகள்
சேர்ந்தே பெருங்கட லாகிறது!
சன்ன மான அரிமணலால்
இனிய நிலம்உரு வாகிறது!

இதுபோல் சிறிய மணித்துளிகள்
குறுகின வாய்அவை இருந்திடினும்,
புதுப்புதுப் பெரிய 'யுகங்'களையே
நிலைபெறப் படைக்கும் பொழுதுகளாம்!

இதுபோல் நம்சிறு பிழைகளெலாம்
அறநெறி பிறழ்ந்தே, 'ஆன்மா'வை
எதற்கும் துணிந்தே பாவத்தில்
அடிக்கடி அலைய வைத்திடுமே!

கனிவு மிகுந்த சிறுசெயல்கள்,
அன்பு நிறைந்த சிலசொற்கள்,
இனியவிண் ணுலகுபோல் இப்புவியை
ஆக்கிடும் ஏடன் பூங்காவாய்!

❁ ❁ ❁

மூலம் : ப்ரூவர் (Brewer) (ஆங்கிலக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** *(திங்களிதழ்) (சுவடி 33: ஏடு5:: 1994*, ஆகத்து).

# 33. மீண்டும் முயற்சிசெய்!

கேட்டிடுவாய் பாடமிதைக் கவனத் தோடுநீ:
'மீண்டும் முயற்சிசெய்!'
ஈட்டவில்லை வெற்றியென்றால் முதல்மு றையிலே,
'மீண்டும் முயற்சிசெய்!'

பின்னரேநீ நெஞ்சுரத்தைக் காட்டிடல் வேண்டும்;
விடாமல் முயன்றிடில்,
வென்றிடுவாய்; அஞ்சிடாதே எந்த நாளுமே;
'மீண்டும் முயற்சிசெய்!'

ஒருமுறையோ இருமுறையோ தோற்க நேரினும்,
'மீண்டும் முயற்சிசெய்!'
இறுதியிலே வெற்றியினைக் காண வேண்டுமா?
'மீண்டும் முயற்சிசெய்!'

உண்மையாக நாமுழைத்தே தோற்றுப் போயினும்
மானம் போகுமா?
என்னசெய்ய வேண்டும்நாம், அந்தப் போதிலே?
'மீண்டும் முயற்சிசெய்!'

உன்றன்பணி கடினமென்றே உனக்குத் தோன்றிடில்,
'மீண்டும் முயற்சிசெய்!'
உன்றன்பரிசு, காலமுனக்குக் கொண்டு வந்திடும்;
'மீண்டும் முயற்சிசெய்!'

மற்றமக்கள் செய்கையிலே நீயும் பொறுமையாய்ச்
செய்ய இயலுமே;
உற்றவிதியாம் இதனைமட்டும் கருத்தில் வைத்திடு:
'மீண்டும் முயற்சிசெய்!'

☸ ☸ ☸

மூலம் : டபிள்யூ. இ. ஹிக்சன் (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 18: ஏடு2::
1979, மே).

# 34. இன்றும் நாளையும்!

நாளைக் கென்றே நவிலாதே!
'இக்கணம் செய்வேன்' - எனச்சொல்லும்
ஆளை என்னிடம் அனுப்பிவிடு;
நடக்கும் நற்செயல் இக்கணமே!

காத்திருக் காமல் ஒருகணமும்
செயற்படில், நிகழ்நாள் நம்கையில்;
தாழ்த்தி விட்டே வருந்துவதால்,
தாண்டிய காலம் மீண்டிடுமோ?

இன்றே செய்திடப் பலபணிகள்
இருக்கும் போது, நாளைக்கேன்?
என்றும் செய்திட முடியாதே,
இருக்கும் பொழுதினை வீணாக்கின்!

கடமை யுண்டே கணந்தோறும்;
கணிப்பார் எவரே எதிர்நாளை?
மடமை, நாளைக் கெனத்தள்ளல்;
இன்றே செய்தல் மதியுடைமை!

❁ ❁ ❁

மூலம் : ஜெ. இ. கார்ப்பென்ட்டர் (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 18: ஏடு6:: 1979, செப்டம்பர்).

# 35. உண்மையான பெருந்தன்மை!

பரம்பரை பற்றிநான் கேட்கவில்லை;
அவன்திருப் பெயரையுங் கேட்கவில்லை;
உரமுடன் ஆண்மை அவன்நெஞ்சில்
இருந்திடில், அவனே உயர்பிறப்பாம்!

இந்த உலகின் செல்வத்தில்
அவனுக் குள்ளது குறைவெனினும்,
அந்தப் பொருள்ஒரு பொருட்டன்றே,
அன்னவன் வாய்மை யாளனெனில்!

எந்த நிலத்தைச் சேர்ந்தவனோ?
இளமையில் எங்கே வளர்ந்தவனோ?
எந்த இடத்தில் தோன்றிடிலென்?
ஓடி வரும்நீர் தூய்மையதா?

அவன்தான் பிறந்தது அரண்மனையா,
அன்றி எளிய சிறுகுடிலா?
அவற்றைப் பற்றிநான் கேட்கவில்லை;
அவனொரு நேர்மை யாளனா,சொல்!

❁ ❁ ❁

மூலம் : யாரோ

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: 'கவிதை' (திங்களிதழ்) (சுவடி 18: ஏடு7:: 1979, அக்டோபர்).

# 36. மின்னி மினுக்கும் விண்மீனே!

மின்னி மினுக்கும் விண்மீனே,
யார்நீ என்றே வியக்கின்றேன்!
விண்ணில் வயிரம் போலேநீ
ஒளிர்கிறாய் உச்சியில், வியப்பாமே!

எரிக்கும் கதிரோன் மறைந்ததுமே,
அவனொளி இல்லாப் போதில்தான்,
சிரிக்கும் சிற்றொளி காட்டுவாய்,நீ;
மின்னி மினுக்குவாய் இரவெல்லாம்!

இருட்டில் செல்லும் வழிப்போக்கன்
இயம்புவான் நன்றி, சிறுபொறியே!
சிறுவிண் மீன்நீ மினுக்காக்கால்,
செல்வழி அன்னவன் அறியானே!

கரிய வானில் தொடர்ந்திருப்பாய்;
காண்பாய் எட்டி என்திரைக்குள்!
சிறிய விழியை மூடாய்நீ,
கிழக்கே சிவக்கும் வரையிலுமே!

ஒளிவிடும் உன்றன் சிறுபொறிதான்,
இருட்டில் உதவும் வழிகாட்டி!
எளியேன் உனையார் என்றறியேன்,
மின்னி மினுக்கும் விண்மீனே!

❁ ❁ ❁

மூலம் : **ஜேன் டேலர்** (ஆங்கிலக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: '**கவிதை**' (திங்களிதழ்) (சுவடி 18: ஏடு10:: 1980, சனவரி).

# 37. கற்றுக் கொடுத்தவர் யார்?

வைக்கோலும் பாசியும் உரோமமும் வைத்தே
கூட்டினைக் கட்டுதற்கே - பறவைக்குக்
கற்றுக் கொடுத்தவர்யார்?

மிக்கவும் நேர்த்தியாய் எப்படி வேய்வது
என்பதைச் சொன்னவர்யார்? - குறுக்கே
குச்சியை வைப்பதைப்பார்!

தித்திப்புத் தேனை உறிஞ்சிட மலரிடைச்
சுற்றிப் பறப்பதற்கே - வண்டுக்குக்
கற்றுக் கொடுத்தவர்யார்?

இத்துணை விழிப்பாய், மழைநாளில் சாப்பிடச்
சேமித்து வைப்பதற்கே - அதற்குச்
சொல்லிக் கொடுத்தவர்யார்?

குறுகிய துவாரம் தொளையிட ஊர்ந்தே
வழியினைச் செய்வதற்கே - எறும்புக்கு
வகுத்துக் கொடுத்தவர்யார்?

பொருளினைச் சேகரம் செய்திடக் கோடைப்
பொழுதினைச் சொன்னவர்யார்? - இனிமைப்
பொழுதினைத் தந்தவர்யார்?

இந்த வழியெலாம் காட்டி அவற்றிற்குத்
திறமையும் அளித்தவர்யார்? - கருணையாம்
இறைவனார் அவரல்லரோ?

அந்த இறைவனார் புனித விருப்பம்போல்
நடந்திடக் குழந்தைகட்கே - புத்தி
அளிப்போரும் அவரல்லரோ?

☸ ☸ ☸

மூலம் : **யாரோ**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 19: ஏடு2:: 1980, மே).

# 38. உணர்ச்சிப் பாடற் பாங்கு

பெய்துகொண் டிருந்தது;
அந்தப் பெயலில்,
பிய்ந்துவிட் டாற்போல்
பிரிய உளமின்றிச்
சென்றது, மரத்தில் சிக்கிய
காற்று!
நீயோ -
என்றன் கரத்தைப்
பற்றிக்கொண் டிருந்தாய்;
இரவில் நங்கூரம்
இடப்பெற் றிருந்த
குறுஞ்சந் தில்,மழை
கொட்டிக்கொண் டிருந்தது.

இரவின் வீங்கிய
இருட்டில், உன்றன்
கரங்களால் என்றன்
முகத்தை மூடியே
என்னென்ன கேள்விகள்
கேட்டாய் என்னிடம்,
மென்மைக் குரலிலே,
நடுங்குங் குரலிலே!

❁ ❁ ❁

மூலம் : **சான் டாங் கான்** *(கொரியக் கவிஞர்)*

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** *(திங்களிதழ்) (சுவடி 19: ஏடு6:: 1980, செப்டம்பர்).*

# 39. ஆன்மாவின் பாடல்

விண்ணகத்தை விட்டிறங்கி உன்னிடத்தே வந்துதங்கும்
பொன்னகத்துப் புறாஅதனின் பொலிவுரைக்க மொழியுண்டோ?

அதனியல்பைத் துருவியாய்வோர் கூர்விழிக்கும் தெரியாமல்
அதைமறைத்தார் எவரே?சொல்! இத்தனைக்கும் அஃதொன்றும்,

மூடும் முகத்திரையாய் ஏதும் அணிந்ததுண்டா?
நாடும் மனிதர்க்கோ, என்றும் புலப்படுங்காண்!

விருப்பமின்றித் தான்,உன்னை நாடிற்று மேலிருந்து;
விருப்பமின்றி 'விதி'யென்றே உன்னோ டிணைந்ததுவும்!

முட்டி முணகிடினும், உன்னுடலாம் தோல்கூட்டை
விட்டுப் பிரியமட்டும் விருப்பமே இலையதற்கு!

எதிர்த்துப் போராடி எல்லாமும் செய்ததஃது;
அதிவிரைவில் அதைப்பழக்கிக் கொண்டுவர இயலாதே!

இருந்தும் உன்னிடத்தே இணைந்தது;பின் மெலமெல்ல
திருந்தியிந்தப் பாழ்வெளிக்கும் பழகி வளர்ந்ததுகாண்!

தன்வீட்டை, தனக்கிருந்த நிம்மதியை எண்ணுங்கால்,
தன்கண்ணில் நீர்ததும்ப, தாங்காமல் அழுகிறது!

நிறுத்தாமல், ஓயாமல், நெஞ்சைப் பிழிந்துகொண்டு
கருத்தழிந்து கதறுங்காண், தன்வீட்டுப் பசும்நினைவில்!

தன்வீட்டை, தான்ஆண்ட இனியபொன் நினைவுகளை
வன்காற்று சுவடுகளாய் வழங்கிப் பறந்திடவும்,

உழன்றமனம் உட்கார்ந்தே யோசனையில் ஆழ்கிறது,
இழந்துவிட்ட ஒருவரைப்போல் யாதுசெய்வ தினியென்றே!

தடித்த வலைகள் அதைத்தடுத்தே வைத்திருக்க,
விடுத்தே, மிகவுயர்ந்த- மிகப்பரந்த விண்நோக்கிச்

செல்ல முடியாமல் செறிவாய்ப் பிடித்துவைக்கும்
வல்ல சிறுகூண்டோ வழியடைத்து நிற்கிறது!

பொன்வீடு புறப்படவே பொழுதும் மிகநெருங்க,
பொன்னாம் அக்கணம் வரைதான்,இப் புன்மையெலாம்!

தன்விரிந்த எல்லைக்குத் தான்திரும்பும் திருக்கணமும்
நண்ணியது; ஆம்,இதோ நண்ணியது அதற்குந்தான்!

பாடி மகிழ்கிறது பரவசத்தில் திளைத்தஃது;
மூடி நின்ற திரையும் மேல்தூக்கப் படுகிறது!

திறந்திருந்த கண்ணாலும் பார்க்கமுடி யாதிருந்த
பொருளையெலாம் இப்போது புலன்ஆய்ந்து பார்க்கிறது!

மேனிலைக்கு விரைந்தேகித் தன்போற்றிப் பாடல்களைத்
தானிசைத்தே நிற்குங்காண் நடுங்கும் தளிர்க்குரலில்!

மிகத்தாழ்ந்த உயிர்கூட அறிவை உயர்த்திடும்;ஆம்,
மிகத்தாழ்ந்த உயிர்கூட உயர்த்திடுமே அறிவுதன்னை!

மிகவுயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்த மேன்மையுயிர்
மிகத்தாழ்ந்த கீழெல்லை இருண்ட வெளியினுக்கே

தூக்கி யெறியப் படுவானேன்? அறிவார்ந்த
நோக்கம் எதனையேனும் நோக்கி, ஆண்டவன்தான்

வீசியஃதை எறிந்தானோ, மிகநுணுகி ஆய்வோர்தம்
ஊசிமுனைக் கண்களுக்கும் மறைத்ததுவும் அதனாலோ?

அவ்வித மாயின், கேளாத வற்றையெலாம்
இவ்விதம் கற்றுக் கொள்ளட்டும் என்றோ,

இறைவன் அதனை இறங்கவைத் தான்கொல்?
அறிவார்ந்த ஒழுங்குப் பயிற்சிதான்; ஆயினும்,

தக்க,கீழ் இறக்கத் தண்டனைப் பயிற்சிஇது,
மிக்க கடுமை விதி.

❁ ❁ ❁

மூலம் : **அவிசென்னா**
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** *(1980,* திசம்பர்*).*

# 40. உம்பர் உலகின் கவிகை மாடமே!

உம்பர் உலகின் கவிகை மாடமே!
வான வெளியே, உரைப்பாய் ஒன்று!
எங்கள் தலைக்குமேல் சுழல்கின் றாயே,
உன்றன் சொந்தத் திட்டத்தின் படியா?
அன்றி, நிரந்தர மாக இயங்கப்
பிறிதொரு வர்தம் சக்தி தந்திடும்
கட்டாய த்தில் இயங்குகின் றாயா?
படைத்தவன் பெயரால் பகன்றிடு நீயும்;
இறப்புடை மனிதர்க்கு முடிவிலா எல்லைநீ!
எந்த அரிய அமைப்பிற் குள்ளாக
உன்றன் சுழற்சிகள் வைக்கப்பட் டுள்ளன -
என்றே குழம்பி வியந்து நிற்கிறோம்!
ஒருகால் இப்படி இருந்திட ஒல்லுமோ?
உனக்கும் மேலே 'கடவுள்' ஒருவர்
இருக்கின் றாரா, இயம்பிடு நீயே!
ஆன்மாக்க ளெல்லாம் திரும்பி வருகிற
புகலிடம் நீயோ? புகல்வாய்! அன்றி,
அழிந்திடும் எங்கள் மானுட வாழ்வெனும்
புயலுடன் அவையும் அழிந்தே போகுமோ?
வானகப் பால்வீதி மண்டலம் அஃது,
வானமாக் கடலினில் புரள்பே ரலையோ?
அன்றி, அஃது பளபளப் பாக
மார்புக் கவசத்தில் பிரதி பலித்திடும்
கத்தியின் பிம்பமோ? கழறுக, விண்ணே!
விண்மீன்கள்....... அவைதாம் கெட்டி முத்துகளோ?
மிகப்பெரும் கப்பற்பாய் போலே, இரவில்
வெளிப்படும் நெசவு வேலைப்பா டெல்லாம்
பகலொளி வருங்கால் சுருட்டல் போலே,
மடங்கிடும் பேரலை களுக்குப் பொங்கி
முடிசூட்டு கின்ற நுரைக்கும் குமிழிகளோ!

❁ ❁ ❁

மூலம் : **அவிசென்னா**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** *(1980,* திசம்பர்).

# 41. தேனீக்கள்

பழமொழி பல,இவை பற்றிப் பகர்ந்திடும்;
உழைப்பில் இவற்றிற் கீடு முண்டோ?
'இன்ன உழைப்பிற் கின்ன உயிரினம்'-
என்றே படைப்பில் அமைந்த ஏற்பாட்டிற்-
கெடுத்துக் காட்டாம் இச்சிறு உயிர்கள்;
முடிமுதல் அடிவரை குறுமென் மயிர்த்தோல்,
வெயில்மழை தாங்கும் வியப்புப் போர்வை;
மெய்யதன் கீழோ மேவிய கவசம்;
இவற்றின் கருவிகள், துல்லிய மானவை;
இவற்றின் செயற்றிறன், இணையிலா அற்புதம்!
நொடிக்கு நூறு முறைதம் சிறகுகள்
அடித்திடும் இவை,முன்னர் வனத்தில் வாழ்ந்தவை!
வீடுவாழ் விலங்காய் வசப்படுத்தப் படாமல்,
பாடுபட்டு நம்மருங்கில் வாழ்வதைப் பார்க்கலாம்!
சோம்பித் திரிவோர், சூறையர், கலைநயம்
ஓம்பித் துய்ப்பவர் ஒருவ ருக்குமே
இரக்கங் காட்டா இவற்றை, ஒவ்வோர்
அரசும், 'நிலைப்படை' ஆக்குதல் வேண்டும்!
மனிதனைப் போன்றில் லாமல், இவையோ,
இனிவரும் காலத்துத் தேவைகட் கேற்ப,
அனைத்தும் அமைந்தவை யாக உள்ளவை;
'வினையுண்டு தாமுண்டு' என்றுதம் வேலையில்
ஊறி உழன்றிடும் இந்த உயிரினம்,
மீறி உணர்ச்சி வசப்படல் இல்லையே!
விண்ணில் ஒன்றும் இல்லையென விளம்பல்போல்,
மண்ணிற் கியைந்தே மாப்பணி ஆற்றிடும்!
மறுப்பாய் 'வினா'எதும் எழுப்பாமல்,
இறப்பையும் ஏற்றிடும், இத்தே னீக்களே!

❁ ❁ ❁

மூலம் : **ஹெய்ன்ஸ் பியான்ட்டெக்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானியப் புத்திலக்கியம்'** *(1981, பக். 215-216).*

# 42. கண்

அச்சிடப் பெற்ற அடையாளச் சீட்டில்,
இச்சிறு உறுப்பின் எழில்நிறங் காணலாம்!
நம்மையே மறைக்கும்; இன்னும் நவின்றால்,
நம்மையுங் காட்டிக் கொடுத்திடும் நயனம்!

படைப்பின் மென்மை பகர்ந்திடும் வாழ்வின்
இடையே, நாள்தொறும் தட்டி யெழுப்பிடும்!
அழிக்கப் பெற்ற எல்லைக் கோட்டினை
விழித்துப் பார்க்கவே, இமைகளைத் திறந்திடும்!

இதனின் குருதிக் குழாய்களோ, ஒளியின்
கதிரைச் சிதறிடச் செய்யும் பகுதியை
நன்றாய்ச் சுற்றிலும் கழுவித் தூய்மைசெய்
முன்கண் நீர்நிறை குருதி நாளங்கள்!

இருந்தும் -

கண்மருத் துவக்குடில் களிலோ, கூட்டம்
கண்படு மளவில் நிரம்பி வழிகின்றது!

வரவுள பற்பல வாரங் களுக்கு,
அறைகள் ஆங்கே பதிவாகி யுளவே!

❁ ❁ ❁

மூலம் : **வால்ட்டர் ஹெல்மட் ஃபிரிட்ஸ்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானியப் புத்திலக்கியம்'** *(1981, பக். 217-218).*

# 43. புகைப்படத்தில் புவி!

ஆங்கே அதோ,இப் புவிபுலகம்
　　முதன்முறை யாகக் காண்கின்றோம்!
ஆங்கே புயலாம்; அதோ,பார்நீ,
　　முகிலின் கூட்டம் தெரிகிறதே!
பாங்காய் இடமும் புரிகிறதே,
　　பார்த்தால் ஆண்டெசு மலைமுகடு
ஓங்கி நிற்பதும் தெரிகிறதே;
　　உலகம் நன்றாய்த் தெரிகிறதே!
புவியுல கிங்கே தெரிகிறதே;
　　வாழ்வின் புகலிடம் இங்கேதான்!
அவித்தே வாழ்வை மறைப்பதுவும்
　　இந்த அவனிதான், ஐயமில்லை!
'தவித்திடும் சடப்பொருள் துயருறவே
　　வாட்டிடும் பிணி'யென இப்புவியை
சுவெவோ சரியாய்த் தானழைத்தார்;
　　சுவைத்துப் பார்த்தால், புரிந்திடுமே!
தெரிகிற தாங்கே, வைகறையின்
　　தெளிந்த ஒளிதான், அடடாவோ!
சொரிகிற ஒளிர்வின் பளபளப்புச்
　　சுடரின் அழகை என்னென்போம்!
பெறுகிற இரவல் ஒளியதுவாம்;
　　தொலைவில் இருந்தே பெற்றதுவாம்;
செறிவுறு ஒளித்திரள் கண்பறிக்கும்;
　　செப்புவோம் நன்றியைக் கடனொளிக்கே!

❁ ❁ ❁

மூலம் : **வால்ட்டர் ஹெல்மட் ஃப்ரிட்ஸ்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானியப் புத்திலக்கியம்'** *(1981, பக். 218)*
மறு வெளியீடு: **'மஞ்சரி'** இதழ்: *(மலர் 44: இதழ் 12 :: 1991 திசம்பர்)*

# 44. உன்னை நான் (இப்படியாக்கிட) விரும்புகிறேன்!

நன்றாய் உனைநயந்து நக்கிப் பலர்சுவைக்க,
இன்று வழுவழுப்பாய் ஆன விடுதலையே!
இந்த விடுதலையைக் கேட்டது எதிலிருந்தோ,
அந்தக் 'கொடுமை' அகன்ற விடுதலையே!

இன்னும் உரைப்பின், எதற்காக அஃதையாம்
நண்ணினோமோ, அந்த நலஞ்சார் விடுதலையே!
என்றன் விடுதலையே! எங்கள் விடுதலையே!
உன்னைத்தான் சுட்டி உரைக்கின்றேன்; கேட்பாய்,நீ!

நாகரிக மான 'குரங்கே'! நளினமாம்உன்
ஆகத்தை 'உப்புத்தாள்' ஆக்க விரும்புகிறேன்!

பல்வேறு நாக்கு நுனிகளைப் பன்னாளாய்ப்
பல்வேறு வண்ணம் அழுத்தழுத்தி நக்கிவர,
எந்தத் துணிமீதும் நில்லாத, மேடைக்கோல்
பந்தாய்[1] உருண்டாய், 'விடுதலை'ப் பாவி,நீ!

ஃ ஃ ஃ

'விடுதலை' எனுஞ்சொல்லே! உன்னை முரடாய்க்
கடுமையதாய் ஆக்கக் கடிதே விரும்புகிறேன்!

கண்ணாடிச் சில்லுகளை ஆயிரங் கண்களென
உன்மீது குத்தி ஒட்டிவைக்க ஆசையுற்றேன்!
அப்போ துனைநக்க அண்டுபவர் யாரே?சொல்!
அப்போது யார்க்கும்,நீ பந்தாய் அமையாயே!

சீனத்துக் கன்பூசியஸ் ஆணையைச் சிரமேற்றேன்!
ஈனமில் லாத விடுதலையே, உன்மீதும்
உன்போல் உதவா வெறுஞ்சொற்கள் மீதும்நான்,
கண்ணாடிச் சில்லுகளைக் குத்தத் துடிக்கின்றேன்!

ஃ ஃ ஃ

---

1. மேடைக்கோல் பந்து - 'பில்லியர்ட்ஸ்' ஆட்டப்பந்து

"உங்களது கிண்ணத்தைச் 'சதுரம்' எனவுரைப்பின்,
எங்கே அதற்குரிய நான்குமூலை?" என்றிடுவார்!

"இன்றேல் அரசே அழியும்!" எனஉரைப்பார்;
கன்பூசியஸ் வேறெதையும் வேண்டுமெனக் கேட்கவில்லை!

"கூறவந்தால் 'வட்டத்'தை 'வட்டம்'என்றே கூறுங்கள்;
கூறத் துணிந்தே 'சதுரம்'எனக் கூறாதீர்!;

"உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள்; இல்லாக்கால்
எள்ளுவோம்!" என்பார் இடித்து.

❋ ❋ ❋

மூலம் : ஹில்டே டொமின் (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: 'ஜெர்மானியப் புத்திலக்கியம்' (1981)
(பக். 219-220).

# 45. எழுந்திரு, ஏபல்!

எழுந்திடுவாய் ஏபல்!நீ, அதனை மீண்டும்
புதிதாக அரங்கேற்றிக் காட்டல் வேண்டும்!
எழுந்துவாநீ, மீண்டுமதை நடத்திக் காட்ட
வேண்டுமிங்கே நாள்தோறும்! 'முடியும்' என்னும்
அழுத்தமுடன் அந்த'விடை' எம்முன் தோன்ற
வேண்டுமிங்கே, நாள்தோறும்! எழாஅ விட்டால்,
விழுதுபோன்ற ஒரேவிடையாம் இதனால் மாற்றம்
விளைவதேது? எண்ணிப்பார், எழுவாய், ஏபல்!

எமக்குரிய ஒரேகேள்வி: அதற்கு யாரோ
ஈந்துவிட்ட தவறான விடையை மட்டும்
எமக்காக நீஎழுந்தே செல்லா தாக்கின்,
ஆலயங்கள் ஏன்எமக்கு? அழிப்போம் இன்றே!
எமக்கிங்கே புவியிலுள்ள மொழியி லெல்லாம்
நடமாடும் சட்டங்கள் எதற்கோ? ஆமாம்,
நமனிடத்தே உனைவிடுத்த கெய்னாம் உன்றன்
உடன்பிறந்தோன் உனைக்காக்க வருதல்
திண்ணம்!

அட!இனிமேல் குழந்தையெலாம் எவர்க்கும் அஞ்ச
வேண்டாமே; காரணத்தைச் சொல்வ தென்றால்,
உடன்பிறந்தே உனைக்கொன்ற கெய்ன்என் பாரும்
இனிஅவ்வா றிருக்கமாட்டார்; உண்மை, ஏபல்!
மடமடவென் றே,நாளும் எழுவாய் நீயும்!
அப்போது தானெமக்கும் வலிமை ஏறும்;
உடன்பிறப்பாம் நான்தான்;ஆம் ஏபல்! உன்னைத்
தானிங்கே அழைக்கின்றேன்; எழுவாய் இன்னே!

நானாக எழுகின்றேன்; சொன்னால், நானும்
ஏபலின்ஓர் குழந்தையே! ஒவ்வோர் நாளும்
நானுந்தான் அஞ்சுகிறேன் 'விடை'யை எண்ணி;
அவ்'விடை'க்கே காத்திருக்க, காத்தி ருக்க,
ஏனோஎன் மூச்சுப்பைக் காற்றும் மெல்லக்
குறைகிறது! எழுந்திடுவாய், ஏபல், ஆமாம்!
தேனாக வேறொருநல் தொடக்கம் வேண்டும்,
எமக்கெல்லாம்; அதற்காக எழுவாய், நீயே!

எரிகின்ற தீநாக்கு, புவியின் மீது
எரிகின்ற தீநாக்கு, ஏபல் வைத்த
எரியாக இருந்திடவே வேண்டும்; இன்னும்
ஏவுகணை வால்களிலும், ஏபல் வைத்த
எரிநாக்கு கொழுந்துவி ட்டே எரிதல் வேண்டும்,
எங்கெங்கும் ஏபலின்தீ பரவல் வேண்டும்!
எரிந்திடட்டும் கொலைவெறியும், குருதி தன்னைக்
குடித்திடவே அலைகின்ற வெறியும் ஆங்கே!

❀ ❀ ❀

மூலம் : ஹில்டே டொமின் (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: 'ஜெர்மானியப் புத்திலக்கியம்' *(1981)*
*(பக். 221-222).*

# 46. வட்டாரம், மாற்றிக்கொள்ளத்தக்கது!

இந்தவட் டாரம், எப்போதும் பேன்கள்
வந்துமொய்க் கின்ற வாசத் தலமாம்!
இதற்குக் காரணம், இயம்பவும் வேண்டுமோ?
பொதுவாகவே நமக்குப் பூனைக ளிடமும்
நாய்க ளிடமும் நாட்டமும் பாசமும்
போய்த்தொலை யாத அளவிற் கதிகமே!

ஃ ஃ ஃ

பார்த்துப் பார்த்துச் சலித்துப் போனவை,
ஆர்த்திடும் அந்தக் 'காலைப் பொழுதுகள்'!

மனித னொருவன் மடிந்தனன் இங்கே;
இனிதே ஆங்கே மரம்நடு கின்றனர்!
இறப்பென் றால்,அது இத்துணை 'இளப்பமா'?
இறப்பினுக் கிரங்கலும் அரியதாய் ஆனதோ?

நேற்று,அப் போதுதான் பள்ளிவிட் டிருந்தனர்;
நாற்றினை யொத்தஓர் சிறுவனின் மீது
வண்டியொன் றேறிட, வாழைபோல் துவண்டே
மண்டி வீழ்ந்தனன் மணிப்பயல் அவ்விடம்!

கிடந்தான் முக்கால் மணிப்பொழு தளவும்,
நடைபாதை யோரத்தில் நாதியே யற்று!

என்னை எல்லாரும் கவனிக்கின் றனரே
என்னும் 'அச்சம்' எனக்கிலா திருந்திடின்,
அந்தப் பையனுக்குப் போர்வை கொணர்ந்தே
எந்தமொய்ப்பு மிலாமல் மூடி இருப்பேனே!

❀ ❀ ❀

மூலம் : **ஹோர்ஸ்ட் பிங்கெல்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானியப் புத்திலக்கியம்'** *(1981) (பக். 223-224).*

# 47. ஜீன் அனோவிலின் இறப்புக்குப் பின் வார்விக் பிரபுவுக்கு ஏற்பட்ட எண்ணம்!

குறிக்கோள்:

1) "சோப்பை நானே வாங்கிக்கொள்ள வேண்டுமா,
என்ன? அதைவிட துவைப்பதையே நான்
விட்டுவிடுகிறேன்!"

2) "நான் உறைந்தே போனாலுங்கூட, அது என்
அன்னையை வருத்தாது; அதனால்தான், அவள்
எனக்குக் கையுறையும் போடுவதில்லை"

(இரு ஜெர்மானியப் பழமொழிகள்)

பசுமை நிறைந்த டாம்ரெமிக்குப்
பக்கத் திருந்த வயல்வெளியில்,
பசும்பொற் கிண்ணப் பூப்பறிக்க
விரும்பினாள் **ஜோன்**எனும் பாவையவள்!
பசுமை ததும்பும் புல்வெளிக்கே
வந்து பார்த்த அவள்தந்தை,
"பசுங்கிளி போன்ற என்மகளே,
பணிஎன்ன உனக்கே இங்(கு)?"என்றார்.

விண்ணை நோக்கி மென்கனிவாய்
விழியால் அளந்த **ஜோன்**அவளும்,
தன்னை மறந்தே தந்தைமுன்
முழங்கா லிட்டே அமர்ந்திட்டாள்;
"என்றன் குரலைக் கேட்பதற்கே,
அமர்ந்துளேன் ஈண்டு யானுந்தான்;
என்னை யீன்ற முதுஉழவர்
எங்ஙனம் அறிவார் இதை?"என்றாள்!

முதியவர் மொழிந்தார்: "பெண்ணே,நீ
என்றன் மகள்தான் என்றாலும்,
உதிர்ந்திடும் உன்றன் குரலினையே
இன்னும் நம்பிட வில்லைநான்!
மதிப்புறு உழவர் குடியினர்நாம்;
நீயோ மாயப் பிசாசோஓ?
மதிகெட் டலையும் 'பைத்தியம்'தான்;
இதிலே ஐயம் இலை!"என்றார்.

"புறப்பட வேண்டும் காண்பதற்கே,
பியூட்ரி கோர்ட்டுக் கோமானை;
திறமுடை வீரர்ப் படையொன்றைத்
திரட்டி எனக்கவர் தரவேண்டும்!
சரசர வென்றே பின்னர்,யான்
செல்வேன் 'சார்லஸ்' மன்னன்பால்!"–
சரமழை போன்றே இவ்விதமாய்
வாதுரை பொழிந்தாள் ஜோன்அணங்கு!

"கண்டேன் இக்கணம் மகளே,உன்
இழிமை கலந்த இச்சைகளை;
கண்டது முண்டோ எங்கேனும்,
கன்னியை வீரர் முகாமினிலே?
கண்டிப் பாய்,அது நடக்காதே,
கன்னிநீ உயிரோ டுள்ளவரை;
என்கை யாலே அடித்துன்னை
இறக்கச் செய்வேன்!" என்றாரே!

"வேண்டாம், அப்பா, வேண்டாமே!
ஃபிரெஞ்சின் பெருமை தனைநினைப்பீர்!
வேண்டிய குதிரையும் ஆண்உடையும்
பெற்றதும் விரைவேன்; எழிலெல்லாம்
பூண்டநம் ஆர்லியன்ஸ் திருநகரை
விடுவிப் பேன்நான்! புல்லர்தமைப்
பூண்டோ டாங்கிலக் கால்வாய்க்கே
விரட்டி யனுப்புவேன்!" என்றாளே!

"வெட்கம், வெட்கம்! பெண்இவட்கே
மதிதான் கெட்டுப் போனதுவோ?
வெட்க மின்றிக் கன்னிப்பெண்
ஆணுடை தரிக்க விழைகின்றாள்!
மிக்க கடைநிலைப் பெண்ணொருத்தி
மிகவும் உயர்ந்த நிலையெய்தத்
தக்கவள் என்றே நினைத்தாளோ?
மதியிழந் தேதடு மாறினளோ?

"தெய்வக் கட்டளை மீறுவதோ?
தெய்வ நிந்தனை ஆகிடுமே!
மெய்யை உணர்வாய் மகளே,நீ
உழவனின் பெண்தான், அவ்வளவே!
பொய்யிலா ஞானம் பூத்தவர்தாம்
மன்னர் அவையில் நிறைந்துளரே;
செய்யத் தகுந்ததை ஃபிரெஞ்சுக்கு,
அறிவர் அவர்கள்!" என்றாரே!

"அப்பா, என்சொல் கேட்டிடுவீர்,
அக்குரல் 'செய்'எனச் சொல்கிறதே!
அப்பா, நான்தான் அரசர்தம்
படைத்தள பதியாய் இருப்பேனாம்!
அப்பா, கடவுளின் விருப்பத்தைப்
பாதிரி யார்க்கும் அறிவிப்பேன்!
அப்பா, அரசரின் முடிபுனைவில்
பட்டம் பெறுபவள் நான்,அப்பா!

"இங்கி லாந்தின் இரும்புநெஞ்சர்
கரங்களில் நான்விழ வேண்டுமப்பா!
அங்குள அன்னையின் ஆலயத்து
மன்றத் தின்முன் ஓராண்டு
பொங்கும் உணர்ச்சி யடக்கியே,நான்
புழுவாய் நிற்பேன்; சமயத்தைப்
பொங்கி எதிர்த்ததாய் எரிப்பரெனை;
துறவியாய் ஆவேன்!" என்றாளே!

"குழந்தாய், பகுத்தறி விலையோ? நான்
கூறு வதனைக் கேளாயோ?
பழுத்தவள் என்னும் நினைப்புனக்கு,
சமயத் தலைவர் பலரைவிட!
புழுத்த பெரிய பாவமெல்லாம்
உன்வாய் புகன்றிடக் கேட்கின்றேன்;
அழுத்த மாகவே உரைக்கின்றேன்,
இனியான் உன்றன் தந்தையல்லன்!

"அதுமட்டு மன்று, என்மகளே!
உன்வழி, தக்கதும் ஆகாதே!
அதுஉனை நரகத் தில்ஆழ்த்தும்;
அதனினும் யானே உனைக்கொல்வேன்!
இதுதான் இப்போ துள்ளவழி,
இப்படிச் செய்தால் தான்உன்றன்
விதிமுடிந் துன்னுயிர் மோட்சத்தை
அடைந்திடும்; வேறு வழியில்லை!"-

இவ்விதம் இயம்பி அவள்தலையில்
தன்குறுந் தடியால் அடிக்கின்றார்;
எவ்விதம் சொல்வோம் அக்காட்சி?
எழில்பொற் கிண்ணப் பூக்களெலாம்
செவ்வண்ணக் குருதிக் குளத்தினிலே;
சேல்விழி யோ,அதன் நடுவினிலே!
இவ்விதம் ஈரத் தரையினிலே
உயிரிழந் தவளோ, இமைக்கவில்லை!

ஃபிரெஞ்சு மண்ணைக் காப்பதற்கே
பெரிதும் விழைந்தாள் பேதையவள்;
ஃபிரெஞ்சு மானம் மீட்பதற்கே
பெரிதும் முனைந்தாள் கன்னியவள்!
நிறைந்த நெஞ்சின் நினைப்பெல்லாம்
'உரிமை வேட்கை' எனத்துடித்தே,
விரைந்த இளையவள், அய்யய்யோ,
வீழ்ந்து கிடக்கிறாள், உயிர்பிரிந்தே!

ஃ ஃ ஃ

ஐய மின்றி வையத்தை
அழித்த முதற்போர் நடப்பதற்கு
பைய நெடுநாள் முன்னரேயே,
பழுத்த உழவன் தன்தலையை
நையப் பிய்த்துக் கொள்கின்றான்;
நங்கை நகைமுகங் காண்கின்றான்;
கையைப் பிசைந்தே நீர்மல்கக்
கலக்க முற்றே எண்ணுகின்றான்:

"அவளது பயணந் தன்னை,நான்
அனுமதித் திருக்க லாமே;ஆம்,
அவளை வீரர்ப் படையுடனே
அணிவகுத் தேகிச் செல்வதற்கும்,
அவள்தான் ஆணின் உடையணிய,
இன்னும் அன்னோள் விரும்பியதைத்
தவறென் றெண்ணா மல்,பாவி
அனுமதித் திருக்க லாமே,நான்!

"அன்னவள் பியூட்ரிக் கோமான்பால்
சென்றிருப் பாளே; அவரிடந்தான்
அன்னவள் வாளொடு பரியினையும்
பெற்றிருப் பாளே; அம்மட்டோ!
அன்னவள் பெரிதும் மதிக்கின்ற
சார்லஸ் மன்னரைக் கண்டிருப்பாள்;
அன்னவள் உறுதியாய் ஆர்லியன்சில்
வெற்றியும் அடைந்தே இருப்பாளே!

"அவர்கள் தலைமீது பாய்ந்திருப்பாள்;
மின்னி யிருக்குமே அவள்வாளும்!
தவறா தவளும் இங்கிலாந்தின்
தளபதி யர்களைத் தீர்த்திருப்பாள்!
அவளிது போது சார்லசுக்கும்,
ரெயிம்சில் முடிசூட்டி யிருப்பாளே!
அவள்பிடி பட்டே ஓராண்டு
விசார ணையும் நடந்திருக்கும்!

"அவளை எலும்பாய் எரித்திருப்பர்,
இதயத்தை எரிக்க முடியாமல்!
அவளைப் பற்றி விரிவாக,
எழுதி யிருப்பர் பலபேர்கள்!
அவளைப் பற்றிய நூல்களுக்கோ,
நூலக அறைகள் போதாவே;
அவளோ துறவியாய் ஆயிருப்பாள்;
ஆனால், நான்அவ் வாறிலையே!

"என்னே அறியா உழவன்யான்,
உலகின் போக்கையே குலைத்துவிட்டேன்;
அன்னைத் துறவி போன்றவளாம்
கன்னிப் பெண்ணைநான் நம்பவில்லை!
என்னே வீரம்! அவளுணர்ச்சி!
அதனை அமைதியாய்ப் பார்த்திராமல்,
கண்ணை மூடி அழித்தேனே;
கனவாய் முடிந்ததே!" என்றழுதான்!

❁ ❁ ❁

மூலம் : **பீட்டர் ஓ. சோட்ஜேவிட்ஸ்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானியப் புத்திலக்கியம்'** *(1981)* (பக். *225-229)*.

# 48. ஆறு வாத்துகள்

மூன்றும் மூன்று மாய்,மடுவில்
ஆறு வாத்துகள் நீந்தினவே!
மூன்று, சூட்டு உடம்பினவாம்;
மூன்றோ, சீதள வகையினவாம்!

மூன்று, பணமில் லாதவையாம்;
மூன்றோ, பெரும்பணம் உடையவையாம்!
மூன்று, மிகவும் ஒல்லியவை;
மூன்றோ, பானை வயிறுடைத்தாம்!

மூன்று, கணவர் உடையனவாம்;
மூன்றுக்கு மனைவியர் இருந்தார்கள்;
மூன்று, மந்த புத்தியின;
மூன்றுக்கோ, கத்திபோல் கூரறிவாம்!

மூன்று, கோபமாய் இருந்தனவாம்;
மூன்றோ, தண்மையாய் இருந்தனவே!
மூன்று, இளமை யுடையனவாம்;
மூன்றோ, முதுமை எய்தியவை!

மூன்று, கருமை நிறமுடைத்தாம்;
மூன்றோ, வெண்மை நிறமாமே!
மூன்று, அமைதி விரும்புபவை;
மூன்றோ, சண்டைக் கிழுப்பவையாம்!
மூன்று, உறங்க விரும்பியவை;
மூன்றோ, குதிக்கத் துடித்தனவாம்!
மூன்றோ, வால்கள் பெற்றவையாம்;
மூன்றுக்கோ, குண்டிகள் மட்டுந்தான்!

மூன்றும் மூன்றும் எதிர்புதிராய்
மோதிக் கொண்டே, இறுதியிலே
தோன்றிய சண்டை விளைவாக
முப்பத்து மூன்றுதாம் எஞ்சினவே!

முப்பத்து மூன்று வாத்துகளும்
நீந்திக் கிடந்தன மடுவொன்றில்;
முப்பத் திரண்டில் பதினாறு
சினந்தவை; மீதி குளிர்ந்தவையாம்!

ஒதியம் போன்ற ஒன்றேதான்,
அவலம் ஒழிய எண்ணியதாம்;
அதுவும் இறுதியில் தடுமாறி,
மூளை திறம்பிப் போயிற்றாம்!

❁ ❁ ❁

மூலம் : **கிறிஸ்ட்டா ரெய்னிக்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த நூல்: **'ஜெர்மானியப் புத்திலக்கியம்'** *(1981) (பக். 230).*

## 49. குவியல்

நிலத்தின் ஆழ்பனி உறைவினில்,
உறைந்துவிட்ட மரங்களின் குவியல்!
ஒலியினும் விரைவுமிகு ஏவுகணைகளின்
வெளியேற்றுக் குழாய்களில்,
செத்த விலங்குகளின் குவியல்!

சீழ்பிடித்த பல்லின் செத்த வேரின்மீது,
உலர்ந்து வற்றிய தாவரங்களின் குவியல்!
மண்டையோட்டு 'பைன்'மரக் காட்டில்,
இலைகளை அகற்றும்
வேதியியல் பொருள்களின் குவியல்!

மனிதப் பிணத்தின் இளஞ்சிவப்புப் புகையில்
தூசிப் படலங்களின் பெருங்குவியல்!

நாக்கின் மீது-
பந்தயக் குதிரையின்
நெருப்புக் குளம்புகளைப்போல்
எரிகின்ற மாத்திரை,
ஆரஞ்சு மாத்திரை, நீல மாத்திரை,
வெள்ளை அமிலங்களின் குவியல்!

உடலிலுள்ள, பாக்டீரியாவின்
எதிரிகள் மூலமாக-
இரத்தக் குழாய்களில் கக்கிவழிகின்ற
பன்மடங்கு அம்மைப்பால் மூலமாக-
வாயில் குவிக்கப்பட்ட நஞ்சு நீர்களின்
குறுக்குத் தொற்று மூலமாக-
விண்மீன்களின் தசைகளுக்குள் செலுத்தப்படும்
'பெட்ரோல்' நீராவிகள் மூலமாக-
படைப்புலத்தின் புனைவாற்றலான
வாயுக்குடல்கள் மூலமாக-
அதைப் பாருங்கள்!

மறைகின்ற விண்வெளியின் நிழல்களுக்குள்
நிலவுலகின் இயலாமையால் பெருக்கி,
ஒன்றாகக் கலந்து,
இரண்டாகச் சிதைவுற்ற
இரட்டிப்புக் குவியலைப் பெற்றெடுக்க,
இந்தக் குவியல், அந்தக் குவியலைத்
திருமணம் செய்துகொள்வதைப்
பாருங்கள்!

துன்பமும்
    பெருமுழக்கமும்-
இவைதான், அணு வெளுத்துக்காட்டும்
    உண்மை நிலை!
        நீர்க்கோவையால் வீங்கிப் பெருகிய தொடை
        ஒரு சமாதானப் பரிசு என்னும் அறிவியலாம்
            கால்சட்டைகளில் அசங்கியமான ஈரம்-
        காற்றின் கக்குவான் இருமலில், சதை நடனத்தின்
        இறுதிக் குவியல்!
    சமூகப் பிணக்காடுகளில் இந்தக் குவியலிலிருந்து
    எஞ்சிப் பிழைத்திருக்க முடியும்
    என்கிற புகலிடமொன்று உங்களுக்கு இருக்கிற தென்று
        நீங்கள் நினைத்தாலுங் கூட,
        அதை எனக்குச் சொல்லுங்கள்!

கட்டப்பட்ட சக்கிமுக்கிக் கல்லாம்,
உறிஞ்சப்பட்ட கல்லீரலுடன்-
நீர்வாயு, புகைகளாகப்
பிரிந்துவரும் மூச்சுடன்-
கண்ணுக்குப் புலப்படாத,
உண்ணத்தகு கிளிஞ்சலாம்
தொப்பூழ்க்குழியுடன்-
மனித உண்ணிப் பூச்சிகளாம்
உயிரியல் மூச்சுப்பையுடன்-
உறிஞ்சிகளாம், புற்றுநோய் வளரத்தூண்டும்
மூத்திரப் பைகளுடன்-
நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்?

        வீங்கு தழும்புகளால்
        அமைந்த சொற்கள்-
        அணுக்கோல்களாம்
        மரத்துப்போன பகுதியின் பாடல்கள்-
        அசுசியான அந்தத்
        துர்நாற்றக் குவியலுடன்-
        நீங்கள் எங்கே செல்வதாக
        நினைத்துக்கொண்டிருக்கின்றீர்கள்?

கவனியுங்கள்:

    சூரியனின் துர்நாற்றத் தொங்கு சதைகளுக்குள்
        மூழ்குகின்ற தந்திரம் மிக்க ஏவுகணைகளையும்-

நிறமற்ற வானத்தின் ஆழத்திற்குள் சீறுகின்ற,
வாந்தியெடுக்கின்ற கம்பியாக நீளும் பாம்புகளாம்
பீரங்கிப் படையின் குண்டுகளையும்-
நிலவின் நுட்பமான கடுஞ்சீற்றத்தின்மீது,
தொன்மை நகர்ச்சுவர்
வரிக்கிறுக்கு ஓவியங்களாகப் பதிக்கப்பெற்ற,
உலர்ந்த பாஸ்வர சீழ்க்குவியலையும்-
மூளையில் பெருமை இறகுகளைக் குவிக்கின்ற,
இறப்பின் சிறகுகளாம் நீர்மூழ்கிக்
குண்டுகளின் முனைப்பகுதிகளையும்,
செவிகளின் நிறமற்ற திரவப்பகுதியில்
குவிக்கப்பட்டுள்ள பொய்களாம்
மக்களிடை பரவுசாதனக்
கம்பளிப் பூச்சிகளையும்,
இரத்தத்தின் பெருக்கெடுப்பில்
அன்னியச் சாற்றின் குவியலையும்
பாலியுரேத்தின் தாள்களின்கீழ்,
வண்ண உலோக(குரோமிய) உடைகளில்
சிதறுண்ட முதுகெலும்புக் குவியலையும்
நான் நினைக்கும்போது,
இந்தக் குவியலை -
அழுகுகின்ற இந்தத் தாவரங்களை
நான் பார்க்கின்றேன்:
எது 'குறியெல்லை' என்பதை எனக்கு
நானே புரிய வைத்துக்கொள்கின்றேன்.
அதனால்தான் நான் வாழ்க்கையில் புகுந்துள்ளேன்!
மூச்சு திணறுவதற்கு முன்னர் -
பீதி ஏற்படுவதற்கு முன்னர்-
மௌடீகத்தின் ஊடுருவல் எழுந்து
இந்தக் குவியலின் நச்சுக் கண்ணீருக்குள்
தீயைத் துப்புவதற்கு முன்னர்-
உயிரைக் காப்பாற்றல் என்பது நிகழ வேண்டும் இப்போதே; ஆம்,
புரட்சிகரமான மாற்றம் ஏற்படவேண்டும் இப்போதே!

❁ ❁ ❁

மூலம் : **ஜேனே் கார்ட்டெஜ்** (Jayne Cortez) (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** *1983* சனவரி.

# 50. சித்திரவதை!

‘சித்திரவதை’களைப் பற்றியும்
‘அடித்தல்’களைப் பற்றியும்
எந்த மிக நெடுந்தொலைவிலிருந்து
தெரிவிக்கப்பட முடியுமோ
அந்த மிக நெடுந்தொலைவிலிருந்து
எனக்குக் கொண்டுவரப்பட்ட செய்திகளை,
‘நாள்’ என்னும் வட்டத்தின்
எல்லா முனைகளிலும்
நான் அறிவிக்கின்றேன்:

என் அண்டை வீட்டினர்,
தங்களுக்கு ஏற்படும் ஆபத்திலுங் கூட,
இரும்போடு கொண்ட உறவின் காரணமாக,
எதைவிட்டுவிட மாட்டார்களோ
அவர்களது அந்த நாற்புற அரணானது,
விளிம்புகளில் கவ்வப்படுகிறபோது,
அதற்குமேலும் அதை அவர்களால்
தாங்கிக்கொள்ள முடிவதில்லை.

அவர்கள் விளிம்புகளை உடைக்கும்போது,
    நான் பார்க்காமல் சென்றுவிடமாட்டேன்!
அண்மையிலும் சரி சேய்மையிலும் சரி,
    அவர்கள் ‘நாள்’ என்பதைச்
சவம்போல் மூடி மறைப்பதையும்,
    கவனிக்காமல் நின்று விடமாட்டேன்.
தாங்கிக் கொள்ளப்பட முடியாத வார்த்தையையும்
    நான் தாங்கிக்கொள்ள முயல்வேன்!

சுத்தியாலடிக்கும் சப்தத்தை
நான் கேட்கும்போது,
செவிப்பறையை நான்
அடைத்துக் கொள்ளமாட்டேன்!
ஆதிக்கத்தையும் ஆபத்தையும்
தாங்கிக்கொள்கின்ற அனைத்தையும்–
'சித்திரவதை' செய்யப்படும் இடங்களிலிருந்து
வருகின்ற செய்திகள் அனைத்தையும்–
நான் கேட்பேன்!

எங்கே,
உடைக்கப்பட்ட விளிம்புகள் வீசப்பட்டுக்
காற்றில் எறியப்பட்டு
ஆபத்தில் உள்ளனவோ,
எங்கே,
நாளின் எல்லாப் பொழுதுகளுக்கும் பின்னர்
இரவும் ஒழிக்கப்படுகின்றதோ,
எங்கே,
சுத்தியாலடிக்கப்பட்டதன்பேரில்,
அடிகள் பற்றி இனியும் காதுகளால்
கேட்கப்பட முடியாதோ,
அந்த உடைந்த விளிம்புகளின்
இடத்திலிருந்து வரும்
மனமுடைந்த தகவலாளனை நோக்கி
நான் பின்வருமாறு கேட்பேன்:
ஆம், எந்த வட்டத்திலிருந்து செய்திதெரிவிக்கப்பட்டதோ,
அந்த வட்டத்தின்
எதிர்ப்பக்கத்து முனைகளிலிருந்து வருகின்ற செய்தியை–
அதனால், இனிமேல் தாங்க முடியாததைக்
கேட்காமலிருப்பதற்காக
நீ செவிடனாக மாறிவிட்டாயா?!

ஆனால் நாங்களோ
இங்கே, இனிமேலும் தாங்கமுடியாத
செய்தி அதுவோ,
அதற்காகக் காத்திருப்போம்;
தெரிவிக்கப்படும் விவரங்களை
நாங்கள் கேட்போம்;
தாங்கிக்கொள்வோம்!

அவை எங்களை வாட்டட்டும்,
தாக்கட்டும்,
சுத்தியால் அடிக்கட்டும்!
எங்கே அவர்கள் அழுத்தப்பட்டு
ஆபத்தில் உள்ளனரோ,
அந்த இடங்களுக்கு
இரவிலாயின் விரைந்துசென்றும்
பகலிலாயின் நடந்துசென்றும்
காயப்பட்ட மென்மையான
விளிம்புகளை நோக்கி,
என் விரல்களை நீட்டுவேன்!

அவர்கள் கட்டப்பட்டிருந்தால்,
அல்லது ஆபத்தால்
அச்சுறுத்தப்பட்டிருந்தால்,
தாங்கிக்கொள்ளமுடியாத அச்செய்தியால்
மனம் குலைந்திருந்தாலுங்கூட,
அதுபற்றித் தெரிவிக்கப்பட்டு,
இரவும் பகலும் சளசளவென்று வரும் அந்தச் செய்தியை-
தாங்கமுடியாத
அந்தத் தாக்குதலைத்
தாங்கிக்கொண்டும்,
எந்த விளிம்பில், காயமானது புண்படுத்திக்கொண்டும்
சுத்தியாலடித்துக்கொண்டும்
மீண்டும் வந்திருக்கின்றதோ
அந்த விளிம்பின் காயத்தில்
கையை வைத்துக்கொண்டும்,
அதைக் கேளுங்கள்!

நான் அச்செய்தியைக் கேட்பேன்!
சுத்தியாலடித்துக் கொண்டே,
விளிம்பிலுள்ள காயத்திற்குக் காரணமான கையையும்,
தாங்கிக்கொள்ள முடிவதைக் கண்சிமிட்டாமல்
பார்த்துக்கொண்டிருக்கின்ற கண்களையும்,
'ஆபத்து' என்னும் 'நீதிபதி'யின் முன்
உயர்த்திக்கொண்டே,
பொழுதுக்கு நீரூற்றாகவும் ஆதாரமாகவும்
இருக்கின்ற உடல்கள் சித்திரவதை செய்யப்பட்டு,
அதுபற்றிச்
செய்திதெரிவிக்கப்பட்ட
எல்லா இடங்களிலிருந்தும் வருகின்ற
அச்செய்தியைக் கேட்டுக்கொண்டே
அதனிடம் நான் செல்வேன்!

❁ ❁ ❁

மூலம் : **ஜீன்-பியர்ரே ஃபெய்**
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** *(1983,* சனவரி*)*.

# 51. புளுட்டோனியம்* பற்றிய பாடல்

கதிரியக்க வினைப்பயனே!
    கருப்பான–
    ஊமையான–
    பேச்சற்ற–
    மோப்பமற்ற–
உண்மைத் தோற்றத்தின் வெடிப்பாக,
நீ தொடக்கத்தில் இருந்தாயா?

நானூறு கோடி ஆண்டுகட்குப்பின்
உன்பெயரை
நான் வெளிப்படுத்துகின்றேன்:

நிலவுலகு பிறந்த இரவுதான்,
உன்னுடைய பிறந்தநாளென
நான் ஊகிக்கின்றேன்.
கடவுளர்கள்போல் கம்பீரமாக
நிலைத்து நிற்கின்றாய், நீ என்முன்னே;
உனக்குத் தலைவணங்குகின்றேன்!

**ஹான் ஃபோர்டு**
**சாவன்னா ஆறு,**
**ராக்கி ஃப்ளாட்ஸ்**
**பான்டெக்ஸ்**
**பர்லிங்டன்**
**ஆல்புகர்க்**

–இவற்றிலுள்ள நிசப்த ஆலைகளுக்கு
மேலே உள்ள
பரந்த விண்ணை நோக்கி
வாய்திறந்து மூச்சை விட்டுக்கொண்டு,
நான் உன்னைப் பற்றிய
பாடலைத் தொடங்குகின்றேன்!

---

* புளுட்டோனியம் – அணுவின் தனிமம்

அணுசக்திக் கூடங்கள்
உலகில் ஒரு புதிய பொருளை
உருவாக்குகிற ராக்வெல் போர்க்கருவிச் சாலைகள்,
நைட்ரஜன் குவியல்களில்,
இந்தச் சாவுப்பொருள்
துப்பாக்கிகளைச் செய்கின்ற
ஹாங்கர்-சைலாஸ் மேன்சன்,
பயங்கரமான இக் கருவியைப்
பல்லாயிரக்கணக்கில் ரகசியமாகப் பூட்டுகின்ற
நமது பால்மண்டலம்,
வகுத்துரைக்கப்படாத
மையத்தைச் சுற்றுகையில்,
240 ஆயிரம் ஆண்டுகளுக்கு
பயங்கரமான
இந்த 'அழகுப்பொருளை'ச்
சேமித்து வைத்திருப்பதாக
மான்கானோ மலை பெருமைபேசுகிற
வாஷிங்டன்,
தெற்கு கரோலினா,
கொலராடோ,
டெக்ஸாஸ்,
அயாவோ,
நியூ மெக்சிகோ,
ஆகியவற்றிலெல்லாம்
நான் உரக்கக் கத்துகிறேன்.

ஃ ஃ ஃ

உன்றன் இரகசிய இடங்களுக்குள்
என் சிந்தையுடன் நான் நுழைகிறேன்;
உன்றன் முன்னிலையில் பேசுகிறேன்;
நான் மனித வாயால்
எதிர்முழக்கஞ் செய்கிறேன்.

பத்து இலட்சத்தில் ஒருகூறு,
ஒரு நுரையீரலுக்குள் நுழைந்தது.
பத்து பவுண்டு எடையுள்ள
உலோகத் தூசு,
சாம்பல் நிற ஆல்ப்ஸ் மீது,
மென்நடையில் மிதந்தலைகிறது.

ஃ ஃ ஃ

விசாலமான பூமியே!
உனது பேரொளியின்முன்,
எவ்வளவு காலத்திற்கு
இயற்கைத் தாவர அழிவு நோயும் சாவும்
புலனுணர்வுள்ள உயிர்களுக்கு
விரையும்?

என் உடலுக்குள் நுழை,
அல்லது நுழையாமற் போ!
அணுக முடியாத பளுவே!

உன் உள்ளுக்குள் உள்ள என் ஆவியை
நான் ஆனந்தமாகப் பாடுகிறேன்!
ஓ, பளுவான, மிகப் பளுவான
மூலப் பொருளே!
விழித்தெழுந்த நான்,
ஆறு உலகங்களுக்கு,
உன்றன் உணர்வு நிலையைக்
குரலெழுப்பிப் பாடுகிறேன்!
முற்றிலும் 'வீண்பெருமை'யாகிய
உன்னை நான் பாடுகிறேன்!

ஃ ஃ ஃ

அச்சத்தில் பிறப்பெடுத்த
'சினம்' எனும் அரக்கனே!
உன்னை நான் பாடுகிறேன்!
ஓ, இதுவரை படைக்கப்பட்ட
அறியாமைப் பொருள்களிலேயே
மிக்க அறியாமைப் பொருளே!

உலகின் இயற்கைக்குப் புறம்பானவனே!
உலோகக் கருவிப் பேரரசுகளின் மாயமே!
பொய்பேசுகின்ற விஞ்ஞானிகளை அழிப்பவனே!
பேராசைத் தளபதிகளை விழுங்குபவனே!
படைகளைத் தகனஞ் செய்பவனே!
போர்களை உருவாக்குபவனே!
தீர்ப்புகளின் தீர்ப்பே!
பழிவாங்கும் நாடுகளின் மீது வீசும்
தெய்விகக் காற்றே!
அதிபர்களை நச்சரிப்பவனே!
தலைநகர அரசியலின்
மரண ஊழலே!

ஆ, முட்டாள்தனமாகச்
சுறுசுறுப்பாகவுள்ள நாகரிகங்களே!

மனிதக் காரண அறிவாம்
மாந்திரீகரின் சூனியப் பொருளே!
நீ 'உண்மையில்லை' என்று எதிர்க்கின்றேன்!
நீ 'இல்லவே இல்லை' என்றும்
நான் சவாலாகக் கூறுகின்றேன்.

உன் காரண-விளைவை
வெளியிடுகின்றேன்.
முந்நூறு டன் எடையுள்ள உன்மீது
மனமென்னும் சக்கரத்தைச் சுழற்றுகிறேன்.

உன்பெயர், மனித இனத்தின் செவியில்
நுழைகிறது!
உன் கடைசி அதிகாரங்கள் என்னுள்,
உனது வீண் டம்ப மர்மத்தைப் பற்றிய
என் சொற்பெருக்கைச் சூடேற்றுகின்றன!
இந்த மூச்சு, உன் தற்பெருமை
அம்சங்களை விரட்டுகின்றது!

நான் கடைசியாக,
வடிகட்டிய அந்தரங்க அறைகளிலும்,
கடைசல்பொறி கல்நெய்க் குளங்களிலும்,
ரப்பரும் ஒளிகசியும் சிலிகான் கேடயங்களும்
நிறைந்த உன் அரணுக்குள்ளே
உனது காங்கிரீட் இரும்புச் சுவர்களுக்குப் பின்னே உள்ள
உன் உருவத் தோற்றத்தை நான் பாடுகின்றேன்.

என் குரல், சூத்திரப் பொம்மைக்
கையுறைப் பெட்டிகள்,
உலோக பாளக் குவளைகள் ஊடே
எதிரொலிக்கின்றது;
மந்தச் சூழலுடைய
மின்சார நிலவறைகளில்
எதிரொலிக்கின்றது!
பூமிக்கடியில்
சப்தமற்ற சிம்மாசனங்கள்,
ஈயப் படுக்கைகள் மீதுள்ள
உன்றன் எரிபொருள் கம்பு உருளைப்
பாத்திரங்களுக்குள்,
சத்தத்தோடு வெளிப்பட்ட
ஆவிகொண்டு
நான் நுழைகின்றேன்!
ஓ, அடர்த்தியே!
பழுவற்ற இந்த கீதம்,
மறைந்துள்ள தனியறைகளைத் தாண்டிச் சென்று,
இரும்புக்கதவுகைள
உடைத்துக் கொண்டு,
நரக அறைக்குள் சென்று
ஒலிக்கின்றது!

உனது பயங்கரமான
அதிர்வின் மீது
தாளத்தோடு கூடிய
இந்த 'லயம்',
நன்கு கேட்கும் வகையில்
மிதக்கின்றது!

இந்தக் குதூகலக் குரல்கள்,
கற்பாளத் தரையின்மீது
கொட்டப்பட்ட
தேனும் பாலும்
மது இனிப்பு நீரும் ஆகும்!

இந்தச் சீர் ஒலிகள்,
அணுசக்திக் கூடத்தின் மையத்தில்
நான் சிதறிய, உமிநீங்கிய
வாற்கோதுமைகள் ஆகும்.

உள்ளீடற்ற உயிரெழுத்துகளால்
உன் பெயரை நான் அழைக்கின்றேன்.
நெருங்கிவரும் உன் 'விதி'யைப் பற்றி
நான் போற்றிப் பாடுகின்றேன்.

சாவற்ற தன்மைக்கு அண்மையிலுள்ள
என் மூச்சு,
உன் விதியின் முடிவைக் கூறிட,
எப்போதுமே உன் பக்கத்தில்தான்
இருக்கின்றது.
உன்னை வயிர உண்மையுடன்,
நிரந்தரமாக மூடித்
தாளிடுவதற்காக,
வனப்புமிக்க உன் கல்லறையின் மீது,
முன்கூட்டியே
இப்பாடலை
-நான் இயற்றி வைக்கின்றேன்,
'ஓ, அழிந்துவிட்ட
**புளுட்டோனியமே!**

❁ ❁ ❁

மூலம் : **ஆலென் கின்ஸ்பெர்க்** (ஜெர்மானியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

# 52. உட்சுரப்புகளுக்கு ஒரு விடைகொடுப்பு!

எப்போதும் சூரியனையே
நிலைகுத்தி நிற்கும்
புழுதிபடிந்த விழிகள் கூடிய
புழுதி மனிதன்.
புழுதி படிந்த பற்கள்.
அதில் பற்பொடிப் பூச்சிகள்
பதுங்கியுள்ளன.
புழுதி தூவப்பட்ட ஒரு புன்னகை.
புழுதி படிந்த தோல்.

இனவெறியால்,
தேய்ந்துபோன நிலவுக்கு ஏவப்பட்ட
அப்போலோ தொண்ணூற்று மூன்று,
வெறியில் செய்யப்பட்டது;
வெறுப்பில் செய்யப்பட்டது;
வீண்பெருமைக்காகச் செய்யப்பட்டது!

வெட்கமெனும் புழுதி–
மௌனமெனும் சாரமற்ற சிரிப்பு–
ஆண், பெண், குழந்தை மீது–
வேட்டையாடும் உங்கள்
வெடிமருந்துக் குடுவை மீது–
உங்கள் உதட்டுச்சாய
நாகரிகத்தின் மீது–
இதயம் வெட்கும் உங்கள்
தொழில்நுட்பவியலின் மீது–
அதிசக்தி வாய்ந்த
உங்கள் உழைப்பின் மீது
விழுகிறது! ஆம்,

அக்கிரமங்களின் அக்கிரமமான இதைக்
கட்டியுருவாக்குவதற்கும்
அதன்பின் வேலைக்கூடத்து வரிசையில்
கட்டிப்போடப்பட்டுச் சாவதற்கும் தான்!

'சாவு' என்பது இனிமேல்
சாவதற்கன்று;
சாவதென்பதோ, உட்சுரப்புகளுக்குக்
கடைசியாக
விடைகொடுப்பதற்காகக்
கூட அன்று!

☸ ☸ ☸

மூலம் : **சோனி லாபூ டான்சி**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

# 53. வரைமொழி (நிபந்தனை) உடன்படிக்கை

உறுப்பு 1: இது முதற்கொண்டு, 'உண்மை' என்பது இருக்கின்றதென்றும்;
இது முதற்கொண்டு, 'வாழ்க்கை' என்பது இருக்கின்றதென்றும்;
கைகோத்துக்கொண்டு, எல்லாரும் உண்மையாக
வாழப் பாடுபடுவதென்றும்
முடிவுசெய்யப்படுகின்றது.

உறுப்பு 2: வாரத்தின் ஒவ்வொரு நாளும், ஏன்,
மந்தத்திலும் மகாமந்தமான செவ்வாய்க்கிழமைகள்கூட,
ஒரு ஞாயிற்றுக்கிழமையின் காலைப்பொழுதாக ஆவதற்கு
உரிமையுண்டு என்று
முடிவுசெய்யப்படுகின்றது.

உறுப்பு 3: இந்தக் கணத்திலிருந்தே, ஒவ்வொரு சாளரத்திலும்,
ஞாயிறுநோக்கிப் பூ (சூரியகாந்திப் பூ)
இருத்தல் வேண்டுமென்றும்;
ஒவ்வொரு ஞாயிறுநோக்கிக்கும், காலதர் (சாளர) மேற்கட்டில்
துணையிருக்கக் கோரும் உரிமையுண்டு என்றும்;
ஒவ்வொரு காலதரும் (சாளரமும்),
நம்பிக்கை வளர்க்கின்ற பசும்புல் தரைகளுக்கு,
நாள் முழுவதும் திறந்திருப்பவையாகத்
தொடர்ந்திருக்க வேண்டும் என்றும்
முடிவுசெய்யப்படுகின்றது.

உறுப்பு 4: மனிதன், ஒருபோதும்
மீண்டும் தன் சகமனிதனை
ஐயுறுதல் ஆகாது என்று
முடிவுசெய்யப்படுகின்றது.

பனைமரம்,
வீசுங்காற்றின் மீதும்;
வீசுங்காற்று,
காற்று மண்டலத்தின்மீதும்;
காற்றுமண்டலம்,
விண்ணின் நீலப்பரப்பின் மீதும்
நம்பிக்கை வைத்திருப்பதுபோல்,
மனிதனும், மனிதனிடம்
நம்பிக்கை வைத்திருத்தல் வேண்டும்.

**தனிச்சேர்க்கை:** ஒரு குழந்தை, மற்றொன்றிடம்
நம்பிக்கை வைத்திருப்பதுபோல,
மனிதன், மனிதனிடம்
நம்பிக்கை வைத்திருத்தல் வேண்டும்.

உறுப்பு 5: மனிதன், 'பொய்மை' என்னும் அடிமைத்தளையிலிருந்து
விடுதலை செய்யப்படவேண்டுமென்று
முடிவுசெய்யப்படுகின்றது.
ஒருபோதும், மீண்டும்
'மௌனம்' எனும் மார்புக் கவசமோ,
சொற்களின் சங்கிலி மடலோ
அவனுக்குத் தேவையில்லை;
அவன், விசனமற்ற விழிப்புடன்
மேசைமுன் அமர்வான்;
ஏனெனில் உணவு முடிவதற்குமுன்,
'உண்மை' பரிமாறப்படும்.

உறுப்பு 6: பத்து நூற்றாண்டுகளுக்கு,
கடவுளின் தூதரான
ஈசையாவின் கனவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று
விதிக்கப்படுகிறது; அது என்னவெனில்,
ஓநாயும் ஆட்டுக்குட்டியும்
ஒன்றுசேர்ந்து, இனிய புதிய விடியலை உட்கொண்டு,
புல்மேய்தல் வேண்டும்
என்பதாகும்.

உறுப்பு 7: நீக்கிவிட முடியாத தீர்ப்பாணையால் நிலைநிறுத்தப்பட்ட
நீதி - ஒளிவுமறைவற்ற ஆட்சி, இப்போது
தொடங்குதல் வேண்டும். பறக்கும் உதாரணக்
கொடியாம் மகிழ்ச்சி என்பது, மக்களின்
உள்ளத்திற்குள் மிதந்திடல் வேண்டும்.

உறுப்பு 8: மனிதக் குடும்பத்தின்
மிகப்பெரிய கவலையே,
இவ்வாறு தான் இருந்திருக்கின்றது;
இனி எப்போதும் அவ்வாறே
இருத்தல் வேண்டும் என்று
முடிவுசெய்யப்படுகின்றது.
அதாவது, நேசிக்கப்பட்டவர்க்கு
அன்பைக் கொடுக்கச்
சக்தியில்லாமலிருப்பினும்,
நேசிப்பது;
நீரின் கொடை மட்டுமே,
மலர் என்னும் அற்புதத்தைச்
செடிக்குக் கொண்டுவரும் என்பதை
அறிவது.

உறுப்பு 9: தினப்படி உணவானது,
மனிதனின் வியர்வைத் துளிக்கேற்ப
அமைந்திருத்தல் வேண்டும்
என்பது அனுமதிக்கப்படுகிறது.
எனினும், இளமென்மைப்
பின்சுவையை,
அது கணப்புச் சூடாகவே
வைத்திருக்க வேண்டும் என்பதே,
முதன்மையானதும்
எப்போதும்
செய்யவேண்டியதுமாகும்.

**உறுப்பு 10:** எவர் வெண்மையுடையை
உடுத்திக்கொள்வதென்பதோ,
அவரது வாழ்க்கையின் எந்தக் கணத்தில்
அவ்வாறு அவர் செய்யலாம் என்பதோ
முக்கியமானதன்று என்று
முடிவுசெய்யப்படுகின்றது.

**உறுப்பு 11:** பொருள்வரையறையின் (இலக்கணத்தின்)-
படியே கூட, மனிதன் என்பவன்,
நேசிக்கும் பண்புகொண்ட
ஒரு படைப்பு என்று
முடிவுசெய்யப்படுகின்றது.
அதனாற்றான், விடிவெள்ளியை விடவும்
அழகில் அவன் விஞ்சிநிற்கின்றான்.

**உறுப்பு 12:** எதுவும் கட்டாயம்
செய்யப்பட வேண்டியதாகவோ,
தடை செய்யப்பட்டதாகவோ
இருத்தல்கூடாது என்று
முடிவுசெய்யப்படுகின்றது.
அதிலும் சிறப்பாக,
காண்டா மிருகங்களோடு விளையாடுவதும்,
பொத்தான் துளைகளில் செருகுவதற்காகப்
பெரிய அலர்வட்டச் செடியுடன்
மாலை வேளைகளில் நடப்பதும்
அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

**தனிச்சேர்க்கை:** ஒன்று மட்டுமே,
தடுக்கப்பட வேண்டும்; அதாவது,
அன்பில்லாத நேசிப்பு.

**உறுப்பு 13:** வரவிருக்கின்ற நாள்களின்
காலைச் சூரிய வெளிச்சத்தை
வாங்குவதற்கு,
இனிமேல் பணத்திற்குச் 'சக்தி'
இருத்தல் கூடாது என்று
முடிவுசெய்யப்படுகின்றது.

அச்சமெனும் ஆயுதச் சாலையிலிருந்து
வெளியேறிப் பாடுவதற்கு
உரிமையுண்டு என்றும்;
புதிதாய் விடிந்த பொழுதுக்கு
விருந்துவைக்க உரிமையுண்டு என்றும்,
காக்கும் உடன்பிறப்பாண்மைக் *(சகோதரத்துவக்)* கத்தியாய்
ஆதல் வேண்டும்.

**இறுதி உறுப்பு:** 'சுதந்தரம்' என்னுஞ் சொல்
விலக்கிவைக்கப்படவும்,
'வேண்டாததாக'
எல்லா அகராதிகளிலிருந்தும்
அகற்றப்படவும் வேண்டும்;
'பேச்சு' என்னும்
பயங்கரச் சதுப்பு நிலத்தினின்று
தடை செய்யப்படவும் வேண்டும்!

இது முதற்கொண்டு,
'சுதந்தரம்' என்பது
நெருப்பைப் போல,
அல்லது
நீரோடையைப் போல,
விதைத் தானியத்தைப் போல,
மனிதனின் இதயத்தில்
வாழ்ந்திருக்க வேண்டிய,
ஒரு தெளிவான உயிர்ப்பொருளாக
இருத்தல் வேண்டும்!

❁ ❁ ❁

மூலம் : **தியாகோ டி. மெல்லோ**
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** – *1983*, சனவரி.

# 54. அதுதான் என் முகவரி!

இன்று, என் வீட்டின் இலக்கத்தை -
நான் வசிக்கின்ற தெருவின் பெயரை -
நான் அழித்துவிட்டேன்.

சாலை ஒவ்வொன்றும்
சுட்டிக்காட்டுகின்ற
பாதையையும்
மாற்றிவிட்டேன்!

நீங்கள் என்னை இப்போது
காண வேண்டுமென்றால்,
உலகின் எந்த இடத்திலும்,
எந்த நகரிலும்,
எந்தத் தெருவிலும்
எந்தக் கதவையும் தட்டுங்கள்.

இதுதான் சாபம்;
இதுதான் பிரார்த்தனை:
எங்கெல்லாம் நீங்கள்
சுதந்தரத்தைக் காண்கின்றீர்களோ,
அதுதான் என் இல்லமே!

❋ ❋ ❋

மூலம் : **அம்ரிதா பிரிதாம்**
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

# 55. காற்பந்து ஆட்டக்காரர்

அவர், ஒரு காற்பந்து ஆட்டக்காரர்;
பந்தை உதைக்கிறார்;
ஒவ்வொரு நாளும் ஒரு பந்தை
அவர் உதைக்கிறார்!

ஒரு நாள் அவர்
பந்தை, விண்ணில் உயர
எட்டி உதைத்தார்!
அது எங்கேயே நின்றுவிட்டது!

அது கீழே இறங்கிவராததால்,
மக்கள் அதைச்
சூரியனாக இருக்கவேண்டும், அல்லது,
புதியதொரு விண்மீனாக
இருக்கவேண்டும் என்று எண்ணினர்!

எனக்குள்ளே,
நான் இப்படி எண்ணுகிறேன்:
ஒருபோதும் கீழே இறங்கிவராத பந்து ஒன்று,
விண்ணில் அப்படியே
தொங்கிக்கொண்டு நிற்கிறது!

அது தீச்சுடர்களாக ஆவதை,
அன்பாக ஆவதை,
ஒரு விண்மீனாய்
ஆகிவருவதை
நீங்கள் காணலாம்!

❁ ❁ ❁

மூலம் : **காஸூகோ ஷிராய்ஷி**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

## 56. கோயா

நான் தான், கோயா!
கருங்காக்கைப் பகைவனால்
கொத்தப்பட்ட
எனது ஊழிக்கூடுகளாம்
எரிமலை வாய்கள்,
அம்மணச் சமவெளிகள் மீது
பறக்கின்றன!

என் பெயர், துயரம்!
கொப்புளப் போரின் குரல் நான்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
நாற்பத்தொன்றின்
உறைபனிக் காலத்தில் சிதறிய,
எரிந்துபோன நகரங்களின்
தீய்ந்த உத்தரங்களின் குரல் தான்,நான்!

என் பெயர், பசி!
தூக்கிலிடப்பட்ட உழவுப் பெண்ணின்
வடுத்தழும்புத் தொண்டை தான்,நான்!
அவளது உடம்பு,
சூன்யச் சதுக்கத்தில்,
மணியொன்றைப் போல
ஆடிக் கொண்டிருக்கின்றது;
ஒலித்துக் கொண்டிருக்கிறது!

என் பெயர் **கோயா!**
ஓ, பழிவாங்கும் கொத்துக் குண்டுகளே!
சிதறிய பீரங்கிப் படையின்
குண்டுமாரிப் பொழிவுகளே!

அழைக்கப்படாத விருந்தாளியின்
சாம்பலை (அஸ்தியை),
நான் மேற்கிற்கு வாரிக் கொண்டு வந்தேன்!

நினைவுகூரத்தக்க வானத்திற்குள்,
விண்மீன்களை,
ஆணிகள் போல்,
நான் உறுதியாக அடித்தேன்;
**கோயா** என்பது, என் பெயர்!

☸ ☸ ☸

மூலம் : **ஆண்ட்ரேய் வோஸ்னசென்ஸ்கி**
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

# 57. நான் ஒரு மனிதனுங்கூட!

என் உணவு, என் சொந்த
உழைப்புப்பாட்டின்
பலனாகும்;

பழிச்சாட்டுகளை -
என்னை நோக்கிக் கத்துங் குரல்களை
நான் தாங்கிக்கொள்கின்றேன்.

விடுமுறைகளா?
அவையெல்லாம் என்னவென்றே
எனக்குத் தெரியாது.

நான், ஓர் உழவன், அவ்வளவே;
ஒரு பரிதாபமான ருசியக் குடியானவன்.

ஆனால் இன்றைக்கும் மறுநாளுக்கும்
எஞ்சிய என் நாள்களுக்கும்,

என் வாழ்க்கை நீண்டதாயிருப்பினும்,
அல்லது குறுகியதாய் இருப்பினும்,
நான் மறந்துபோகாத ஒன்று இருக்கின்றது!

என் உடன்பிறப்புகளே,
நான் ஓர் உழவனாக இருக்கலாம்;
ஆனாலும் நான், ஒரு மனிதனுங் கூட!

❁ ❁ ❁

மூலம் : **யாங்கா குப்பாலா** (பைலோரஷ்யக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

# 58. நான் ஒன்றும் முட்டாள் அல்லன்!

நான், ஒரு குடியானவன் –
அது உண்மைதான்;
ஆனால் அதற்காக நானொன்றும்
ஒரு முட்டாள் அல்லன்!
'என்னுடைய நாள்' வருமென்று நான் அறிவேன்!

திருப்பிப் பதில்சொல்ல தைரியமில்லாத-
அமைதியானவனாக
இப்போது நான் இருக்கலாம்;
ஆனால்,
வரவிருக்கும் நாள்களில் ஒருநாளில்
நான் கத்துவேன்,
ஆம், போர்க்கருவிகளை நோக்கி!
உடன்பிறப்புகளே!

மூலம் : **கோலாஸ்** (பைலோரஷ்யக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: 'யுனெஸ்கோ கூரியர்' - 1983, சனவரி.

# 59. 'மனிதர்கள்' என்று அழைப்பீர்!

அங்கே சதுப்பு நிலத்திலும் காட்டிலும்
செல்கின்றவர்கள் எவர்?
அந்த மிகப்பெரிய கூட்டத்தில்
செல்கின்றவர்கள் எவர்?

பைலோரஷ்ய மக்கள்
அங்கே செல்கின்றனர்!

தங்களின் மிகமெலிந்த தோள்களிலே,
அவர்கள் எதைத் தூக்கிச்செல்கின்றனர்?

அவர்கள் தூக்கிச்செல்வது,
'அநீதி'யையும்
'பொய்'களையும் தான்!

இந்தப் பொய்கள் அனைத்தையும்
அநீதியையும்
அவர்கள் எங்கே
தூக்கிச்செல்கின்றனர்?

எவருக்குக் காட்டுவதற்காக,
அவற்றை எடுத்துச்செல்கின்றனர்?
-உலகம் முழுவதற்கும்
காட்டுவதற்காகத்தான்!

ஆனால்,

இலட்சக்கணக்கான இவர்களைத்

தூக்கத்திலிருந்து எழுப்பியவை யாவை?

“உங்கள் சுமையை இப்போது

ஏற்றுக்கொள்ளுங்கள், செல்லுங்கள்!”

-என்று சொன்னவை யாவை?

வருத்தமும் துயரமும் தான்,

இவர்களுக்கு அவ்வாறு கற்றுத்தந்தன!

ஆனால், யுகயுகங்களாய்

நசுக்கப்பட்டவர்கள்,

பின்னர் நாடுவதுதான்

என்ன?

குருடர்களாகவும் உள்ள இவர்கள்,

எதைத்தான் நாடுகின்றார்கள்?

**-‘மனிதர்கள்’ என்று**

**தாங்கள் அழைக்கப்படுவதைத்தான்!**

❁ ❁ ❁

மூலம் : **குப்பாலா** *(பைலோரஷ்யக் கவிஞர்)*

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **‘யுனெஸ்கோ கூரியர்’** - *1983*, சனவரி.

# 60. 'மௌனம்' என்பது, எங்கே உள்ளது?

கிராமங்கள்,
    துயரக் காட்சியை அளித்தன!
அவற்றைப் பார்ப்பது,
    நெஞ்சைப் பிளப்பதாக இருந்தது!

புறக்கடையொன்றில்
    விறகும்,
    ஒருசில பலகைகளும்,
    ஒரு குப்பைக் குவியலும்!

சாலைப் பக்கத்தில்,
    பலமற்ற ஒரு சிலுவை!
உலர்ந்துபோன
    மென்மை மரங்களின் குவியல்!

'மௌனம்' என்பது,
    ஒரு சிறைச்சாலையிலோ
அல்லது எங்கோ ஓர்
    இடுகாட்டிலோதான் உள்ளது;
ஒருவகைச்
    சலிப்புத்தன்மையே அது!

❁ ❁ ❁

மூலம் : **குப்பாலா** (பைலோரஷ்யக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

# 61. சாந்தா மார்த்தா குன்றில், பொலிவார்!

எங்கள் கனவுகள் அனைத்தையும் முந்திக்கொண்ட
நல்ல செய்தியாக-
'உங்கள் பாதையில், உங்களைப் பாடுவதற்காக'
நான் விரைவாக விழித்தெழுந்தேன்.

மேற்கிந்தியத் தீவின் பிள்ளைக்குப் பிள்ளை,
உங்கள் கருத்தை, ஆடிக் காட்டுகிறேன்.
உங்கள் அடிவேர்களின் ஆதரவினால்,
எனது காலடி வைப்புகள்,
மனிதர்தம் 'விதி'யின் நாடித்துடிப்பை
நன்குணர்கின்றன!

உதவுங்கள்! **சைமன் பொலிவார்** அவர்களே,
உதவுங்கள்.
தலைவரே,
காலங்கள் மோசமானவையாக உள்ளன.
நீங்கள் நலமுடன் இருப்பது,
இவ் வுலகிற்குத் தேவை!
இளம்வயது அரசி ஒருத்தி,
தன் கூந்தல்முடியை இழப்பதுபோல,
உங்கள் வேர்களின் உயிரை
இப்புவிக்கோள் இழந்துவருகின்றது!

சாந்தா மார்த்தா குன்றினில்
உங்களைத் தேடுகின்றேன்.
நீங்கள், இன்னும் கரையோரத்திலிருந்து
ஏமாற்றுபவர் தானா?
எங்கள் நிலங்களைக் காயவைத்திருக்கின்ற
தனிமை அலைகளுக்குக்
கடைசி வார்த்தை கூறினீர்களா?

விடிவெள்ளியில் உங்களிடம்
எஞ்சியிருப்பது என்ன?
ஜாக்மெல்லில் உங்களுக்கிருந்த
வீடு எங்கே?

உங்கள் கதையை எத்தனைமுறை
அவர்கள் வரவேற்றுள்ளனர்?
ஆம், தம் சொந்தக் கதையின்
போராட்ட நிலையிலேயே
உயிரோடு கொளுத்தப்பட்ட
மேதையின் சிறப்புக் கதையை
எத்தனைமுறை அவர்கள் வரவேற்றுள்ளனர்?

உணவுக்கும்,
பெண்களின் அமைதிக்கும்
தந்தையாக,
ஒரே உலகில் ஒருவருக்கொருவர்
அறிவு கொளுத்திக்கொண்டு
நாங்கள் அமைதியாக வாழப்போகும்
வீட்டின் தந்தையாக,
உங்களது மரபுச்செல்வம்
எங்கே ஒளிர்கின்றது?

உங்கள் பெயரோடு,
செல்வர்களை இழந்துவிட்டோம்;
'உரிமைவீரர்' எனுஞ் சொல்லை,
உயிரென்று எடுத்துக்கொண்டோம்!
'எல்லைகளை உருவாக்குபவர்' –
என்று அச் சொல்லை மாற்றினோம்!

ரோசாரியோவில், உங்கள்
அமெரிக்க பூர்வீக இல்லத்தின்மீது,
உங்களுக்கிருந்த
கூரை எங்கே?
ஒருவர், தாயின் கருவை விட்டு
வெளியே செல்வது போல,
நீங்கள் நுழையப்போகும்
தனியொரு படிக வீடு.
எங்கே உள்ளது?

புதிய விதைகளைக்
கண்டுபிடித்தவரே,
பலவற்றைத்
தொடங்கி வைத்தவரே,
**'கிதார்'** இசையின் -
**'கெக்காவோ'** மரத்துத்
தீர்க்கதரிசியே!

வெய்யில்வரும் ஒவ்வொரு நாளும்
ஆபத்தில்தான் உள்ளது.
விண்மீன் நிறைந்த ஒவ்வோர் இரவும்,
உயிரையே அழிக்கும் 'அணுக்கருவி'
என்னும் வெட்கக்கேட்டை,
எங்கள் வாயிலுக்குக் கொணர்கிறது!

**பொலிவார்** அவர்களே,
இலக்கமிட்ட
எந்த வீட்டை வேண்டுமாயினும்
தட்டுங்கள்.
உங்கள் வரவு,
நல்வரவே!

மனித சகோதரர்களின் வீட்டிற்கு
மனிதனொருவனின்
வலிமைவாய்ந்த இரக்ககுணம்
மீண்டும் வந்திருக்கின்றதென்று
அவர்கள் அறிந்தால்,
ஒரு சூரியனாக இருப்பதற்கு
ஒவ்வொருவருக்குமுள்ள
உரிமையைச்
சிதறடிக்க
அவர்களுக்குத்
தைரியமிருக்காது!

☸ ☸ ☸

மூலம் : **ரெனே டெப்பெஸ்டர்** *(ஹாய்ட்டியக் கவிஞர்)*
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, சனவரி.

## 62. நீங்கள் உண்மையிலேயே கருதுவது அதுதானா? எனக்குச் சொல்லுங்கள்!

அவர்கள் எப்படி விளையாடுகிறார்கள்
என்பதைக் கேட்கத்தான் நீங்கள்
உண்மையிலேயே விரும்புகின்றீர்களா
என்று எனக்குச் சொல்லுங்கள்!
நாங்கள் அஞ்சுகிறோம்!

நாங்கள் ஓர் அமளியை
எட்டி புதைக்காவிட்டால்,
பின்னர்,
ஒரு துப்பாக்கி,
எங்களைக் காற்றுமண்டலப்
புழுதியாக்கிவிடும்!

கெட்டதான அந்தத் துப்பாக்கி,
பிடிகொடாமல்
வழுக்கிவழுக்கி
அப்படியே விழுவதைக் காண,
நீங்கள் உண்மையிலேயே
விரும்புகின்றீர்களா?

அவர்கள் தந்திரம் செய்கையில்,
பொய்களாலும் ரகசியத்தாலும்
ஒரு சல்லடை வழியாக
நாங்கள் ஓட வேண்டும்;

நாங்கள் பழம்போக்கினராகவே
இருந்துவிட வேண்டும் என்று
விரும்புகின்றீர்களா
என்று எனக்குச் சொல்லுங்கள்!

அதை நாங்கள் நிச்சயமாகவே
எங்கள் நலத்திற்காகப்
பயன்படுத்திக் கொள்ளமுடியும்!

இந்தப் புதிய தேவை
எனக்கு இருக்கிறதென்று
நான் உங்களிடம் சொல்லும்போது,

அதை நாங்கள் அவ்வளவு தீவிரமாகப்
பற்றிக்கொள்ள வேண்டும்
என்பதும்;
அது, அதிகாரவர்க்கத்தின் தோலை
உரித்தே தீரும்
என்பதுந்தான்,
உண்மையிலேயே நீங்கள் கருதுவதா
என்று எனக்குச் சொல்லுங்கள்!

நீங்கள் உண்மையிலேயே கருதுவது
இதுதானா என்று எனக்குச் சொல்லுங்கள்!

அதற்காக, என் தலைக்குள்ளேயே
நான் வெடித்துக்கொள்ளவேண்டுமா, என்ன?

இறந்த ஒருவரிடமிருந்து
'இலாபமான' 'முடிவு' வருவதற்காக,
எவ்வாறு அவர்கள்
ஈயத்தைத் தயாரிக்கின்றனர்?
நிச்சயமாக, இது
மரியாதையின்மையே!

நாங்கள் மிகவும்
கோபப்படுகின்றோம்!

அது, ஓர் அணுஆயுதச் சாலையை
வெடிப்பதை விரும்புகிறது!

நாங்கள் 'அமைதி' பற்றி
உணர்வதை விரும்புகிறது!

எனக்கு
இப்போது சொல்லுங்கள்:
நீங்கள் உண்மையிலேயே
கருதுவது இதுதானா?

❁ ❁ ❁

மூலம் : **மிக்கேல் ஸ்மித்**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, செப்டம்பர்.

# 63. கூண்டுவண்டியில் இருந்தவன் குப்பன்!

நீங்கள், ஆம்
சிறுவராயிருக்கும் நீங்கள்,
இப்போது பெறுகின்ற
கல்வியின்படி பார்த்தால்,
உண்மையான இலட்சியத்துடன்
யாரையும் மதித்து
நீங்கள் வாழ்வீர்கள்!

ஆனால்,
என் காலத்தில்,
பள்ளியிலோ,
உங்களை ஒரு முட்டாள்போல்
எண்ணிக் கற்பிப்பர்!
அவர்கள் கற்றுத் தருவனவற்றால்,
நீங்கள் வடிவட்டின மடையராய்த்தான்
ஆகமுடியும்!

அவர்கள் எழுதி
இங்கிலாந்திற்கு அனுப்பும் பாடங்களோ
என்னைக் கவர்கின்றன;
அவர்கள், கோமாளிகளை
உருவாக்க முயல்கின்றனர்!

வேடிக்கை நூலே, உண்மையில்
அதிக அறிவை வளர்த்தது;
அது, பாசாங்கு இல்லாத கதை!
**கட்ரிட்ஜ்***, எங்களை
அறியாமையிலேயே
வைத்திருக்க விரும்பினார்!

---

* கட்ரிட்ஜ் - இளஞ்சிறார்க்கான தொடக்கப்பள்ளிப் பாட்டு ஆசிரியர்

நான் கூறுவேன்:
**கட்ரிட்ஜ்**, விஞ்ஞானிகளை விட
எத்தனையோ மடங்கு
முன்னேற்றங் கண்டவர்!
அவ்வளவு மடத்தனமாக
எந்தஒரு மனிதனாலும் எழுதமுடியாது;
என்னால் நம்ப முடியவில்லை!

வானூர்திகள், அப்போது
அவ்வளவு நன்றாக வளரவில்லை;
விஞ்ஞானிகள், பலூன்களைக் கொண்டு
அவற்றைப் பெரிதாக்கிக் காட்டுவது வழக்கம்!

**கட்ரிட்ஜோ**, பசு ஒன்று நிலவைத் தாண்டிக்
குதிக்கும்படி செய்கின்றார்.
பிறகு அவர், அவர்களிடம்
இவ்வாறு சொல்வார்:
“குழலூதுவோனின் மகனான **டாம்டாம்**,
பன்றி ஒன்றைத் திருடிவிட்டு
ஓடுகின்றான்!” என்றும்;

“ஒருகாலத்தில் ஒரு மாது இருந்தாள்;
ஒரு மூடுசெருப்பில் அவள் வாழ்ந்தாள்;
அவளுக்கு என்ன செய்வதென்றும்
தெரியவில்லை!” என்றும்;

“டிக்டிக்..டிக்... சுண்டெலி
கடிகாரத்திடம்
ஓடியது” என்றும்;
“சிங்கமும் சுண்டெலியும்” என்றும்;

“ஒருவீட்டின் கூரையிலிருந்த புல்லைத் தின்னப்
பசு ஒன்றை, மாது ஒருத்தி
பிடித்துத்தள்ளுகிறாள்!” என்றும்;

"கூண்டுவண்டியில் இருந்தவன்
குப்பன்!" என்றும்;

"பன்றி ஒன்று, அத்திப்பழத்திற்காகப்
பாடி ஆட முடியுமா?" என்றுமெல்லாம்
கதைகளைச் சொல்வார்!

எப்படிநான் சற்று கல்விகற்க நேர்ந்ததென,
என் நண்பர்கள் அறியாம லிருக்கலாம்;

அவர்கள் எனக்குக் கற்றுத் தந்ததெல்லாம்
பிரெர் ராபர்ட் பற்றியும், ரம்பெட்டின்ஸ்கினோ பற்றியும்தான்;

அவர்கள் உண்மையில் என்னைத்
தாழ்த்தி வைக்கவே விரும்பினர்;
முடிந்த அளவு முயன்றனர்; ஆனால்,
வெற்றி பெறவில்லை!

என் முட்டாள் மண்டையைப் பாருங்களேன்:
இன்று வரையிலும்,
"கூண்டுவண்டியில் இருந்தவன் குப்பன்" - என்பதை
என்னால் படிக்க முடியவில்லையே!

❋ ❋ ❋

மூலம் : **மைட்டி ஸ்பாரோ**

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1983*, செப்டம்பர்.

# 64. நாஜிகள், அவரது வீட்டை எரித்துச் சாம்பலாக்கினர்!

அவரது வீட்டை நாஜிகளாம்
அரக்கர் சாம்பல் ஆக்கினரே!
அவரது குடும்பத் தினரையெலாம்
கொன்றனர் ஆங்கே அவ்வரக்கர்!
சிவந்த போரை முடித்தின்று
திரும்பிய வீரர் இப்போது
எவரிடம் சொல்வார் தம்துயரை?
எவ்விடம் செல்வார்? என்செய்வார்?

மூடிக் கவிந்த துயரோடு,
முதன்மைச் சாலைக் குறுக்கினிலே
ஓடும் சந்து ஒன்றுக்குள்
தாவி நடந்தார் நம்வீரர்!
மேடு கண்டார்; உணர்ந்திட்டார்;
தாழ்ந்த கல்லறை மேடெல்லாம்
மூடிக் கிடந்ததே பாசிப்புள்;
முழுவதும் உணர்ந்தார் ஒருநொடிக்குள்!

கண்ணீர் கசிய நின்றாரே,
மூச்சு விடவும் முடியாமல்;
பின்னர் அந்தக் கல்லறையின்
மீதே சாய்ந்து பிதற்றுகின்றார்:
“கண்ணே, உயிரே, பிராஸ்கோவ்யா!
களத்தி லிருந்தே வந்துள்ளேன்,
உன்னவன் வீரக் கொழுநன்யான்;
என்னை வரவேற் பாய்!”என்றார்!

"சமைப்பாய் உணவை, என்கண்ணே!
கூடிக் களித்துச் சாப்பிடலாம்;
அமர்ந்தே மேசைமுன் நாமுண்ண,
அழகிய விரிப்பை விரித்திடுவாய்!
இமையே! நானோ பத்திரமாய்
மீண்டேன்; அதனால் இப்போது
நமக்கிது விழாவாம்; விடுமுறைபோல்
கொண்டா டிவோம்!" என்றாரே!

ஆனால், மறுமொழி வரக்காணோம்;
வீர வரவேற் புங்காணோம்!
வீணாய்ப் போனதே அவர்ஆசை;
விருந்து, வரவேற்(பு) எதுவுமில்லை!
ஆனால் காற்றின் அலையொன்று
மட்டும் ஆங்கே விரைவாகத்
தானாய்த் தவழ்ந்தே பிணக்காட்டின்
புல்லினை அசைத்துச் சென்றதுவே!

நின்றார் சற்றே; பின்னரவர்
கச்சைப் பட்டையை நேராக்கிக்
கொண்டார்; அதன்பின் மருங்கினிலே
தொங்கும் நீளப் பையினின்று
ஒன்றை எடுத்தார்; ஆம்,அஃது
கசப்பு 'வாட்கா' மதுக்குடுவை!
அன்னவள் கல்லறை மீததனை
வைத்தார்; பெருமூச் செறிந்தாரே!

"கண்ணே, என்னைத் திட்டாதே,
சிலமொழி பேசுவேன் இந்நிலையில்!
உன்றன் நலத்திற் காகத்தான்
குடித்திருப் பேன்,நீ இருந்திருந்தால்!
இன்றோ "ஆன்மா அமைதிகொள்க"
என்று சொல்லியே குடிக்கின்றேன்!
கண்ணே, உயிரே பிராஸ்கோவ்யா!
என்னைப் பொறுத்தருள் வாய்,அம்மா!

"இன்னுயிர் நண்பரை மற்றவர்கள்
சந்திக் கட்டும்; நாம்மட்டும்
என்றென் றைக்கும் பிரிந்தோராய்
ஆனோம், ஆனோம்; ஆனோமே!"
என்றே கூறி நம்வீரர்
எடுத்துக் குடித்தார் மதுக்குடுவை;
அன்று, அன்று, குடித்ததெலாம்
துயரம் பாதி; மது,பாதி!

நீண்ட அனுபவப் போர்வீரர்,
போற்றும் நிலையில் இருந்தவர்தாம்;
மூண்டு பெருகும் துயரத்தில்
மூழ்கி யுரைக்கிறார் இவ்வாறு:
"ஆண்டுகள் நான்குதான் ஆயிற்று,
திரும்பிட யானும்; அதற்குள்ளே,
மூன்று நிலங்களில் யான்வென்றேன்;
வெற்றி வீரனாய் யான்திகழ்ந்தேன்!"

குடித்தார் வீரர்; அழுதாரே,
"குலைந்தன கனவெலாம்" எனக்கூறி!
தொடுத்த மதாணிபோல் அவர்மார்பில்
துலங்கிற் றம்மா, புதிதாக
வடித்த பதக்கம்; ஆம்,அஃது,
இவர்தான் இவர்தான் 'புடாபெஸ்ட்டின்
விடுதலை விளைத்த பெருவீரர்'
என்பதை விளம்பி மின்னிற்றே!

❋ ❋ ❋

மூலம் : **இசகோவ்ஸ்க்கி** *(ருசியக் கவிஞர்)*
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** *(திங்களிதழ்) (சுவடி 24: ஏடு1:: 1985, ஏப்பிரல்).*

# 65. அந்தப் பூர்ச்ச மரம்!

தோய்ந்த துயரத்தின்
தூங்கா அமைதியிலே,
சாய்ந்து கிடக்கிறது
சாக்காட்டு வேலியிலே!
பட்டையிலே காணும்
தழும்புகளாம் பட்டயங்கள்,
கொட்டவந்த நாஜியர்தம்
குண்டுகளின் முத்திரைகள்!
மந்திரத்தால் எஞ்சிப்
பிழைத்ததுபோல் மாயமென
அந்தக் கொலைக்களத்தில்
ஆரணங்காய் நிற்கிறதே!

ஃ ஃ ஃ

மிக்க அழகான
**பூர்ச்ச** மரமே,நீ
துக்கித் தழலாமா,
தூக்கி நெடிதுயிர்த்தே?
மிக்க அழகான
**பூர்ச்ச** மரமே,உன்
சொக்கவைக்கும் பின்னலை நீ
கட்டிக்கொள், ஆற்றுநீரால்!

உன்னைப் பகைவர்
ஒழிக்க முடிந்ததுவோ?
அன்றி, பணியவைக்க
ஆனதுவோ அன்னவரால்?
கானிடை இக்களம்தான்
உன்னால் களிப்புறல்போல்,
மானுடர்க் கீவாய்
மகிழ்வு.

❁ ❁ ❁

மூலம் : **ஆர்க்காடி குலெசோவ்** (ருசியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 24: ஏடு1:: 1985, ஏப்பிரல்).

# 66. கல்லின் மீது காதல் மலர்!

உன்றன் மடலின் உணர்வினிலே
　　ஏக்கமும், துயரமும் தொனித்தனவே;
இன்று நமக்குள இடைத்தொலைவோ,
　　ஆ,அது கொடுமை என்றுரைப்பாய்!
என்றன் எழுதுதாள் கற்றையிலே,
　　கிறுக்கிக் கிழித்த பக்கங்களோ,
குன்றின அளவில் இரத்தினமாய்;
　　இதுபோது நெடுவழி யிடை,அவையே!

உனக்கோ பகல்கள், மிகவெறுமை;
　　நெடிய இராக்களோ தருங்கொடுமை!
உனக்கோ இரவுகள் முழுவதுமே,
　　உறங்காத் துயரச் சிந்தனைதான்!
நினைக்கவும் முடியா நெடுந்தொலைவில்
　　மனிதர் நீண்டே தங்குங்கால்,
கனக்குங் கல்லாய் அவர்நெஞ்சம்
　　மாறிடும் போலத் தோன்றிடுங்காண்!

கண்ணே, யூரல் மலைக்காட்டின்
　　அந்த நாள்களை எண்ணிப்பார்!
வண்ண நீலக் காட்சிகளாய்
　　வார்த்துத் துளிர்த்தது, இளவேனில்!
கண்ணைக் கவர்ந்து மனங்கவர்ந்தே
　　ஈர்த்தன வே,நமை அம்மலர்கள்!
குன்றையும் தொங்கு பாறையையும்
　　பற்றிக்கொண் டிருந்ததை எண்ணிப்பார்!

முள்ளின் செடிகள் போல்தோன்றி
முறுக்கும் முடிச்சும் கொண்டனவாய்
எல்லாம் அசைந்தே ஆடினவே,
தூசி படிந்த தோல்தண்டில்!
கொல்லுங் கோடைக் காலமெல்லாம்
தொங்கும் பாறைக் கெழில்கூட்டிக்
கொள்ளைக் கவர்ச்சியாய்ப் பூத்தனவே,
மிளிரும் இரத்தினக் கற்களைப்போல்!

வென்றிடப் போரில், நான்பட்ட
தேய்வும் நைவும் உண்மையிலே
என்றன் மென்மை இதயத்தைக்
கல்லாய் மாற்றி யிருந்திருந்தால்,
என்றன் இதயக் குன்றினிலே
உன்பால் எனக்குள காதலெலாம்,
அன்றுநாம் பார்த்த பூக்கள்போல்
பூவாய்த் தொடர்ந்து மலர்ந்திருக்கும்!

❁ ❁ ❁

மூலம் : **முஸ்டாய் கரீம்** (ருசியக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 24: ஏடு1:: 1985, ஏப்பிரல்).

# 67. வையம் முழுவதும் ஒன்றே!

அவர்களோ, என்னைப் பார்த்து
'இறைஞானி' என்கின் றார்கள்;
எனக்குள் உள்ள ஒரேபகைவன்,
'வெறுப்பு' என்னும் பகைமையே!

எவர்மீதுங் காழ்ப்புக் கொண்டிட,
யானோ இடமே கொடுக்கவில்லை;
எனக்கிந்த விரிந்த வையம்
முழுவதும் ஒன்றே என்பேன்!

ஃ ஃ ஃ

அற்பப் பூசலிட இவ்வுலகில்
யானும் வாழவில்லை;
'அன்பு' என்பதே, என்றன்
வாழ்க்கைக் குறிக்கோளாம்!

ஃ ஃ ஃ

ஒருதுளி அன்பே ஆயினும்
அதை எவர்பெற்றி ருப்பினும்,
அவர்தாம் நெஞ்சில் உண்மையாய்
இறைவனை உடையவராம்!

மூலம் : **யூனுஸ் எம்ரே** (துருக்கியக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - 1992, பிப்ரவரி.

# 68. வானவில்

வான வில்லே! வான வில்லே!
பரந்து கிடக்கும் காட்டின் மேலே
உயர்ந்து நின்றே ஒளிர்கின் றாயே!

கருத்த முகில்களின் நட்ட நடுவிலே
இருண்ட வானைக் கூறுசெய் தாயே!

போரில் வெற்றி சூடிய நீயே,
குமுறும் இடியை அனுப்பிவைத் தாயே!

இடிக்குத் தான்ஏன் இத்துணை உறுமல்?
எங்கள் மீது அதற்குச் சீற்றமா?

கருத்த முகில்களின் நட்ட நடுவிலே
அழுகிய கனியை அறுக்கும் கத்திபோல்,
இருண்ட வானினைக் கூறு செய்திட்ட
வான வில்லே! வான வில்லே!

இடியே றாகிய மனிதக் கொல்லி,
சிறுத்தை கண்டே ஓடிடும் மான்போல்,
உன்னைக் கண்டே ஓடிச் சென்றனன்!

சிதறி யோடிடும் யானைக் கூட்டம்போல்
மேகக் கூட்டத்தை விரட்டிச் செல்லும்
வான வேடனின் வல்வில் ஒத்த
வான வில்லே! வான வில்லே!

எங்கள் சார்பில் அவனிடம் சொல்வாய்:
"சினங்கொள வேண்டாம், எங்கள் மீது!
ஆத்திரம் வேண்டாம் எங்க ளிடந்தான்!
கொன்றிட வேண்டாம் எங்க ளைத்தான்!
ஏனெனில் நாங்கள் கிலிகொண்டு நிற்கிறோம்!"
வானவில்லே! இதனைச் சொல்லிடு அவனிடமே!

❋ ❋ ❋

தொகுத்தவர் : **மேரி ஜோசப் பியட்** ('சூரியனின் தோழர்கள்' என்னும் நூலிலிருந்து)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - 1992, திசம்பர்.

# 69. ஸ்பெயின் துறைமுகம்

நிலவோ, காணாமற்போன
ஒரு பொத்தானைப்போல
ஒளிவீசிக்கொண்டிருக்கின்றது.

கப்பல்துறை மேடையிலிருந்த
'சோடியம்' விளக்குகளின்கீழ்க்
கன்னங் கரேலெனும் நீரோ,
முடைநாற்றம்
வீசிக்கொண்டிருக்கிறது.

இரவு வருகின்றது;
மின்விசைக் குமிழ்போல உறுதியான,
பளபளப்பான பலகணிக்குப் பின்புறம்
உண்கலங்கள் கடகடவென்று
ஒலி எழுப்பிக்கொண்டிருக்கின்றன.

அச் சுவர்களின் ஓரமாக
நான் நடக்கின்றேன்.
அவ்வப்போது
நிழல்கள் விழுகின்றன.
ஆனால், அவை ஒன்றும்
சொல்வதில்லை.

சில வேளைகளில்,
குறுகலான கதவுகளின் பக்கத்தில்,
அதே அமைதியான விளையாட்டுகளை
விளையாடிக்கொண்டிருக்கின்ற
முதியவர்கள் உள்ளனர்;

ஆம்!
சீட்டாட்டம்,
சதுரங்கக்காய் ஆட்டம்
என்றெல்லாம்
நான் அவற்றிற்குப்
பெயர்களை
வழங்குகின்றேன்.

இரவு,
தோழமைக்குரியதாகவுள்ளது.
பகலோ,
எங்கு பார்த்தாலும்
நம் மனித எதிர்காலத்தைப் போன்று
கொடுமையானதாகவுள்ளது.

**போர்ஜசுக்கு, பியோனாஸ் ஏய்ரஸ் மீது**
கண்மூடித்தனமான காதல்
எதனால் என்பதை,
என்னால் இப்போது
புரிந்துகொள்ள முடிகிறது.

நகரமொன்றின் குருதி நாளங்கள்
தன் கையில் வீங்குவதை,
ஒரு மனிதன் எவ்வாறு உணர்கின்றான்
என்பதையும் என்னால்
புரிந்துகொள்ளமுடிகிறது!

❁ ❁ ❁

மூலம் : **டெரக் வால்காட்** ('மங்கலப் பயணி' என்னும் கவிதைத் தொகுதியிலுள்ள 'Port of Spain' என்ற கவிதை).

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1993*, பிப்ரவரி.

# 70. தீவுக் கூட்டங்கள்

இந்த வாக்கியம் முடியும்போது,
மழை தொடங்கிவிடும்;
மழையின் விளிம்பில்
ஒரு கப்பல் பாய்விரிக்கும்;
மெல்லமெல்ல அப் பாயானது,
தீவுகளின் காட்சியை இழந்துவிடும்!

ஒரு முழுமையான இனம் வாழும்
துறைமுகங்களிடத்தில் உள்ள
நம்பிக்கையானது,
மூடுபனிக்குள் சென்று மூழ்கிவிடும்!

பத்தாண்டுப் போர்
முடிந்துவிட்டது!
ட்ராய் (Troy) நகரம் இப்போது,
மழை தூறிக்கொண்டிருக்கிற
கடலின் பக்கத்திலுள்ள
ஒரு வெண்மைச் சாம்பற்குழியாகக்
காட்சியளிக்கின்றது.

மழைத்தூறலானது,
யாழின் நரம்புகளைப் போல
விறைத்து நிற்கின்றது!
மங்கலான பார்வையுடைய ஒருவன்,
மழையைப் பற்றிக்கொள்கின்றான்;
'ஒடிசி'*யின் முதலாம் அடியைப்
பறித்துக் கொள்கின்றான்!

"ஹெலனின் தலைமுடி,
ஒரு சாம்பல் வண்ண மேகம்!"

❀ ❀ ❀

---

* ஒடிசி (Odyssey) - கிரேக்கப் பெருங்காப்பியம்.

மூலம் : **டெரக் வால்காட்** ('மங்கலப் பயணி' கவிதைத் தொகுதியிலுள்ள ஒரு கவிதை)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'யுனெஸ்கோ கூரியர்'** - *1993,* பிப்ரவரி.

# 71. அபூ பென் ஆதம் குலம் தழைத்திடுக!

ஆழ்ந்த அமைதிக் கனவினின்றே
விழித்தான், அபூபென் ஆதம்என்பான்!
சூழ்ந்த தன்அறை நிலவொளியில்,
சுடரொளி கண்டான், அன்றிரவு!

அல்லிப் பூவொன்று பூத்ததுபோல்,
அடடா, அங்கொரு தேவதையோ!
சொல்லில் அடங்கிடாச் சோதியுடன்
பொன்னே டொன்றில் எழுதிற்றே!

வந்த தேவதை பொற்கரத்தால்
வரைந்த தென்ன பொன்ஏட்டில்?
முந்தும் ஆவல் உந்திடவே,
முகத்திற் கெதிரே கேட்கின்றான்:

"என்ன எழுது கின்றாய்,நீ?"
என்றே கேட்க பென்ஆதம்,
விண்ணகத் தேவதை தன்முகத்தைச்
சற்றே தூக்கினள்; ஒளிவெள்ளம்!

"கடவுளை நேசிப் பவர்கள்தம்
பெயரினைத் தான்!"எனச் செப்பிற்றே!
"விடைசொல், என்பெயர் அதிலுண்டோ?"-
என்றான்; "இலை!"யென விளம்பிற்றே!

வீழ்ந்த உணர்வில் வெட்கிடினும்,
விம்மிப் பொங்கும் விழைவுடனே,
தாழ்ந்த குரலில் அதனிடம்தன்
தணியா வேட்கையை முன்வைப்பான்:

'அங்ஙன மாயின் என்பெயரை
இவ்வா றெழுதிட இறைஞ்சுகிறேன்:
'இங்குள உடன்வாழ் மக்களின்பால்
அன்புடை ஒருவன்!' என்றெழுது!"–

வேண்டுகைக் கிரங்கித் தேவதையும்
அவ்வா றெழுதி மறைந்ததுவே!
மீண்டும் வந்தது மறுஇரவில்,
விழிக்கச் செய்,பே ரொளியுடனே!

கடவுளின் அருளாம் வாழ்த்தினைத்தான்
பெற்றவர் பெயர்களைக் காட்டிற்றாம்:
அட,அதில் இவன்பெயர் முதலிடத்தில்;
ஆகா, **அபூபென்** வியப்புற்றான்!

❁ ❁ ❁

மூலம் : **லேய் ஹண்ட் (Leigh Hunt)** (ஆங்கிலக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 32: ஏடு4:: 1993, சூலை).

# 72. விறகுவெட்டியே, விட்டுவிடு அந்த மரத்தை!

விறகு வெட்டியே, விறகு வெட்டியே!
உருகி வேண்டுவேன்; ஒருசொல் கேள்,நீ!

வெட்டிட வேண்டாம்; விட்டுவிடு அம்மரத்தை;
தொட்டிட வேண்டாம் ஒருகிளை கூட!

இளமையில் அன்றெனக் களித்தது புகலிடம்;
விளங்கிட இன்றதைநான் காத்திடல் வேண்டும்!

என்முன் னோனின் கைதான், அதனைக்
கண்போல் அவர்குடிலுக் கருகினில் நட்டது!

அங்கே யே,அது நிற்கட்டும்; அதனை
உன்றன் கோடரி ஊறுசெய வேண்டாம்!

நிலமும் நீரும் அறியும்அம் மரத்தை;
நிலத்தினில் சாய்த்திட நீ,நினைப் பாயோ?

ஆழ்ந்த உறவுகள் உண்டேஇம் மண்ணுடன்;
வீழ்த்திட வேண்டாம் அவற்றை விரைவினில்!

விண்ணை எட்டும்இம் முதிய மரத்தினை
ஒன்றும் செயற்க, விட்டுவிடு, ஒதுங்கிவிடு!

வெட்டியே! அதன்கதை கேட்பாய்: முன்னர்,
வெட்டிச் சிறுவனாய் இருந்த போது,யான்

நண்ணுவேன் அதன்குளிர் நீழலை நாளுமே;
என்தமக்கை, தங்கையர் ஆட்டமும் இங்குதான்!

உச்சி முகந்தே என்னை என் அன்னை
முத்த மிட்டதும் இங்குதான், இங்குதான்!

இங்கே தான்,என் தந்தை என்னைப்
பொங்கிப் பூரித்துத் தூக்கி மகிழ்ந்ததூஉம்!

முட்டாள் தனமாய்த் தோன்றினும் இக்கண்ணீர்,
கட்டாயம் நீ,இதைப் பொறுத்திடல் வேண்டும்!

ஆனால், மூத்த,அக் கருவாலியை மட்டும்
'போனால் போகட்டும்' என,விடு அங்கேயே!

∴ ∴ ∴

ஓ, முதிய கருவாலி மரமே!
நின்பட்டை யைப்போல் உன்னைச் சுற்றியே
என்இதய நரம்புகளும் கெட்டியாய்ப் பற்றின!

பண்ணிசைத் திடட்டுமே, காட்டுப் பறவை;
இன்னும்உன் கிளைகள் வளைந்தே உள்ளன!
உன்னை மோதிடும் புயலுக்(கு) உணர்த்திடு!

∴ ∴ ∴

விறகு வெட்டியே, இவ்விடம்விட் டகல்வாய்!
இம்மரம் காத்திடக் கையுண்(டு) எனக்கு!
இம்மிஊறும் செய்யற்க, உன்றன் கோடரியே!

❋ ❋ ❋

மூலம் : **ஜார்ஜ் போப் மாரிஸ்** (ஆங்கிலக் கவிஞர்)
தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 32: . ஏடு7::
1993, அக்டோபர்).

# 73. ஒரு வேட்கை!

முழுமையான ஆப்பிள்,என் முன்னே உள்ளது;
அழகிய தட்டும்என் அருகில்தா னுள்ளது!

இருந்துமென்? ஆடுமா டடிக்கும் தொட்டிபோல்
அல்லவோ உள்ளேன்? என்வேட்கை கேட்பீர்:

ஃ ஃ ஃ

உண்மையான என்றன் இருப்பிடம் எதுவெனக்
கண்ணாரக் கண்டிட வேண்டும் யானும்;

விறைப்பான அந்த அந்திம வேளையை
விரைவாக யானும் சென்றெய்த வேண்டும்!

குறுகலான குறுக்குச் சந்துகள் தாண்டியே,
விரிந்த, முடிவிலா நெடுஞ்சாலை ஏகவேண்டும்!

என்றன் கணுமூட்டு நீர்க்கூ றெடுத்தே,
என்தலைமேல் மேகமாய் மாற்றிட வேண்டும்யான்!

இப்போது-
சுவரில் ஒட்டியதோர் ஓவியமாய், என்னை
யானே கற்பனை செய்துகொள் கின்றேன்!

ஃ ஃ ஃ

அருவருப் பான, முடைநாற்றம் வீசும்
பழைய செங்கற் கட்டுமானம் மீதுநான்
ஒட்டிக் கொள்வேன்;பின், புற்றுநோய் கொண்ட
புண்களின் மீது நீட்டிக் கிடப்பேன்!

எனது வாந்தியோ, கலக்கும் கரண்டிபோல்
'கணகண' வென்றே தொடர்ந்து ஒலிசெய்தே,
இருசெப்புத் துட்டு மதிப்புடைஅஞ் சலட்டையில்
தளர்ந்த கையெழுத்தில் நன்றியை நவிலும்,ஆம்,
எவரையும் விலக்காமல், எல்லா ருக்குமே!

நீங்கள் அமைதியாய் நடப்பதற்கு நேரெதிராய்த்
தேள்கள் துள்ளிக் குதிப்பதைக் காண்பனே!

❁ ❁ ❁

மூலம் : **சுசில் பௌமிக்** (வங்கக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** *(திங்களிதழ்) (சுவடி 33: ஏடு6:: 1994,* செப்டம்பர்).

# 74. இல்லம், இனிய இல்லம்!

ஆயிரம் அரண்மனை பார்த்திருப்போம்;
இன்பமும் பற்பல துய்த்திருப்போம்!
ஆயினும் எத்துணைச் சிறிதெனினும்,
இல்லம் போன்ற இடம்ஆமோ?

விண்ணி லிருந்தே ஒருமாயம்
ஆங்கே நம்மை விரட்டிடுமோ?
மண்ணில் துருவித் தேடிடினும்,
காணோம் எங்கும் ஒருபோதும்!

இல்லம், இல்லம், இனியஇல்லம்;
இல்லம் போன்ற இடமுண்டோ?

நாடு கடத்தப் பெற்றவன்தான்;
புகழின் பகட்டில் மயங்கவில்லை!
வீடு வேண்டும், என்வீடு;
கூரைக் குடிசையை மீண்டும்தா!

பாடி வருமே நான்அழைத்தால் - அந்த
மகிழ்ச்சிப் பறவைகள் எனக்குத்தா!
கோடி கொடுப்பினும் ஈடாகா - அந்த
உள்ளத் தமைதியை எனக்குத்தா!

இல்லம், இல்லம், இனியஇல்லம்;
இல்லம் போன்ற இடமுண்டோ?

❋ ❋ ❋

மூலம் : ஜான் ஹோவார்டு பேயின் (John Howard Payne)
(ஆங்கிலக் கவிஞர்)

தமிழாக்கம் வெளிவந்த இதழ்: **'கவிதை'** (திங்களிதழ்) (சுவடி 34: ஏடு5:: *1995*, ஆகத்து).

# 75. பெருமலையும் சிறு அணிலும்

மலைக்கும் ஓடும் அணிலுக்கும்
வந்தது சண்டை! அப்போது,
மலையோ அணிலை இகழ்ந்தெள்ளிச்
"சிறிய பிறவியே!" என்றதுமே,
"மலையே, நீமிகப் பெரியவன்தான்;
எனினும் உண்மை ஒன்றுரைப்பேன்:
நிலையாய் நிற்பது ஆற்றல்தான்;
விளக்குவேன், கேட்டிடு!" என்றதுவே!

"பருவம், வானிலை நாளோடு
சேர்ந்தால் மட்டுமே ஆண்டாகும்;
உருவம் சிறிதே என்றாலும்,
உண்டே எனக்கும் ஓரிடந்தான்!
செருக்கே வேண்டாம் பேருருவால்;
எல்லாம் சேர்ந்ததே உலகாகும்!
பெரியது சிறிய தென்பதெலாம்
பேதைமை!" - என்றது சிற்றணில்தான்!

"உன்னைப் போன்றே நானுந்தான்
உருவால் பெரியதாய் இல்லைதான்;
என்னைப் போன்றே நீயுந்தான்
சின்னஞ் சிறியதாய் இல்லைதான்!
உன்னால் முடியும் அழகான
அணிலின் பாதை அமைப்பதற்கே;
உண்மை யிதனை நானுந்தான்
மறுக்க மாட்டேன் மலையாரே!

"ஆற்ற லென்பதோ உலகினிலே
அவரவர்க் கேற்ப வேறுபடும்;
ஆற்றும் வகையில் அவரவர்தாம்
ஆற்றிடின், அனைத்தும் நலமாமே!
என்சிறு முதுகுதான் உன்னைப்போல்
காடுகள் சுமக்குமோ? அதுபோலே,
உன்னால் இயலுமோ என்னைப்போல்
கொட்டையைக் கடித்திட?" - என்றதுவே!

❁ ❁ ❁

மூலம் : ஆர். டபிள்யூ. எமர்சன் (R.W. Emerson) (ஆங்கிலக் கவிஞர்)

# 76. கன்னடக் கவிஞர் தத்தாத்திரேய இராமச்சந்திர பேண்ட்ரே—வின் கவிதைகளில் சில (அம்பிகா தனய தத்தர்)

## 1

வாசகரே, என் துன்பம்
என்னுடையதாகவே இருக்கட்டும்;
என்பாடலை மட்டும்
உங்களுக்குநான் வழங்குகின்றேன்!

ஃ ஃ ஃ

## 2

தாயே, அன்புகெழுமிய அம்பிகாவே!
தத்தன்,நின் உடலிலிருந்துதான் பிறந்துள்ளான்;
அவனுக்கு எதைநீ தந்தாயோ,
அதையேதான் அவனும் தந்துள்ளான்!

ஃ ஃ ஃ

## 3

என் ஆசான் பிரம்ம சைத்தனியர்
தம் அருளை எனக்கு வழங்கினார்;
அதுமுதல், பாடலானது
தானாகவே எனக்கு வந்தது!

ஃ ஃ ஃ

## 4

கனவுக்கும் அப்பால்,
  இடியொன்று வந்து தாக்கிற்றே!
'தாய்' என்னும் பெருமரம்,
  வேரோடு வீழ்ந்து போயிற்றே!

°°  °°  °°

## 5

'நரபலி' - அதற்கு இரையாக
  என்னையே பலிகொண்டது;
பொங்கிவரும் பேராறு, இந்த நொண்டியை
  நோக்கிப் பாய்ந்துவந்தது.

இவனுடைய இல்லத்தைத் தகர்த்துவிட்டு
  இவ்வாறு கூறிற்று:
"பறவையே, பறந்துசெல் இப்போது!
  ஒரு 'ஜங்கம' வாழ்க்கை, இனி உன்னுடையது!"

°°  °°  °°

## 6

வா, நாம் கையோடு
  கைகோத்து இணைவோம்!
உடலோடு உடலாய்,
  இதழோடு இதழாய் இணைவோம்;

ஆம், ஒன்றுசேர்ந்து
  ஓடுகின்ற ஆறுகளைப் போன்று,
ஒரு துளியை
  ஒவ்வொரு துளியுடனும் கலந்து,
ஒரே உயிராக, ஒரே ஒன்றிப்பாக,
  ஒரே சுவையாக இணைந்திடுவோம்!   (ஜீவித கெலட்டி)

°°  °°  °°

## 7

கேட்கும் மெல்லிசைப் பண்களோ,
இனிமையாய் உள்ளன; ஆனால்,
கேட்காதவையோ, அவற்றை விட
இன்னும் மிகுந்த இனிமையானவை. ('சதுர்முக சௌந்தர்யா')

ஃ ஃ ஃ

## 8

இறந்துபோன நல்லோரின்
உறைவிடத்திற்குள் நுழை;
பரப்பப்பட்டுள்ள நஞ்சினை
உறிஞ்சிவிடு;

வற்றிப்போன அமுத நீரோடையை
மீண்டும் நிரப்பு;
'**வலிமை**' என்னும் விதைகளை
ஏராளமாக விதைத்துவிடு;

எங்கள் இதயங்களிலிருந்து
'**அச்சம்**' என்பதை
வெளியே அகற்றிவிடு! ('காலைப் பாடல்')

ஃ ஃ ஃ

## 9

'**அச்சம்**' என்னும் உடைகளை, நான்
தூக்கி எறிந்துவிட்டேன்!
ஒரு குழந்தையைப்போல, நான்
அம்மணமாக உன்முன் நிற்கின்றேன்!

ஃ ஃ ஃ

# 10. விடியல்

முத்து நீருடன் பளபளத்த
கிழக்கு வீடு,
பொன்னிற மூட்டிற்று
இழைவாக எங்கணும்;
திறந்த வாயில்களினூடே
வெள்ளம்போல் பெருக்கெடுத்தே,
ஒளியானது, நனைத்தது
புவி முழுவதையும்!

நீரூற்று தன்னியல்பாகவே
வேகமாகப் பாய்ந்தாலும்,
திரவ வயிரம்
வேகமாகப் பாய்ந்தது;

நறுமண அரும்புகள்
இதழ்களை விரித்தன;
ஆம், தாமாகவே
விரித்தன இதழ்களை!

இலைகளின் மேலே,
பூக்களுக்குள்ளே தோன்றின,
அமுதத்தின் துளிகள்,
அமுதத் துளிகள்.

விண்ணி லிருந்தே அவற்றை இங்கே
கொணர்ந்தவ ராரோ? இப்போ திங்கே,
அவற்றை வைத்தவர் ஆரோ, ஆரோ?

அவர்கள், பூவிதழ்த் தூரிகை தன்னைக்
குளிர்ந்த மென்காற்றின் கைகளில் வைத்தனர்.
மணமூட்டிய மகரந்தத்தால் பூசி அப்பினர்;
வண்டுகளோ, வானத்தில்
சுதந்தரமாக விடப்பட்டுள்ளன!

மரங்கள், புதர்கள்
ஆகியவற்றின்
தொண்டைகளிலிருந்து
எழுந்தன, பறவைகளின்
இனிய பாடல்கள்!

காடுகள் செறிந்த
இந்தப் புவியோ,
கந்தருவ உலகமாக
உருமாற்றப்பட்டது.

கண், பார்த்தது;
நாக்கு, சுவைத்தது;
இந்த என்மேனி,
தொடும் உணர்ச்சியை அனுபவித்தது;
காது, கேட்டது;
மூக்கு, நாற்றத்தை உணர்ந்தது;

தெய்வத்தின் கோயிலான
என்மனமோ,
ஆனந்த பரவசத்தில்
தன்னையே
மறந்துநின்றது!

விண்வெளியோ, அளவிடற் கரியது;
மனத்தின் பிடிப்பிற்கு அப்பாற்பட்டது;
பார்க்காத நிறமோ,
கண்ணிலிருந்து மறைக்கப்படுகிறது.

அமைதி என்கிற *ரசம்* (சுவை) மட்டுமே,
புறத்தே அன்பாகத் தோற்றமளிக்கின்றது.

என் தம்பியே,
இது, வெறும் **விடியல்** மட்டுமன்று!

ஃ ஃ ஃ

## 11

**'ரசம்'** *(சுவை)* என்பதோ, பிறப்பு;
**விரசம்** என்பதோ இறப்பு;
**சமரசம்** என்பது மட்டுமே வாழ்க்கை!

ஃ ஃ ஃ

## 12

'நட்பு' என்பது ஒரே ஒரு பிறவியில்
மட்டும் நாடப்படுவதன்று;
பிறவிக்குப் பின் பிறவி என்று
புதுப்புது உடம்பு எடுப்பதே, அது!

ஃ ஃ ஃ

# 13. பேச்சு — மோனம் (மௌனம்)

பகலின் ஒளியானது, துண்டுதுண்டுகளாக
நொறுக்கப்பட்டு
எல்லா திசைகளுக்கும் பரவலாக
வீசியெறியப்பட்டது.
இருட்டு என்னும் வலைக்குள் அத்துண்டுகள்
தாமாகச் சிக்கிக்கொள்வதற்கான
இந்த வழி ஏற்பட்டதைக் கண்டதுமே,
இரவானது
மகிழ்ச்சி கொண்டுவிட்டதாகத் தோன்றிற்று.
அதன்பின் மெல்ல,
மறைவாகத் தோற்றமளித்துக்கொண்டே,
ஊதாரியான சந்திரன் வந்தான்.
வந்த சந்திரனோ, கருப்பு-வெள்ளை நிறங்களில்,
தான் வரையப்போகும் ஓவியத்திற்கு
அந்த இருட்டைக் கடன்வாங்கிக் கொண்டான்!
மௌனம் என்கின்ற பண்டைய யாழின்மீது,
தன் மூச்சென்னும் யாழ்வில்லை
வளைக்கின்ற உறக்கமோ,
மிகவும் ஆழ்ந்ததாக இருந்தது.
கனவானது, விழிப்புணர்வை
வெறிமயக்கமுற்றதாக்கிக் குடியில் மூழ்கி,
ஆன்மாவின் மதுவோடு சேர்ந்து,
நடனமிடச் செய்தது.
இரவின் மூடுபனிகள்,
நெய் மிதப்பதுபோல,
தூசுகளின்றி, விடியலுக்காகத்
தூய்மை யாக்கின.

ஞாயிற்றின் ஒளி சுழன்றெழுந்து,
தன் கதிர்களைப் பரப்புகின்றது.
அதன்பின்னர், ஒவ்வொரு குத்துச்செடியும்,
சிறு பறவைகளின்
'கிரீச்' ஒலிகளால்
கிளர்ச்சி கொள்கின்றது.

குழந்தைப் படுக்கைகளில் தங்கியிருக்கும்
மலர்ந்த நறுமணந்தான்,
இந்த மழலைப் பள்ளிகளின்
உணர்ச்சிக் குரலாக உள்ளது.

மூடுபனிக் குன்றமொன்றிற்குள்
பனிக்கட்டியாக
உறைந்துகிடக்கின்றது, மனம்!
ஆனால், ஞாயிறோ, அதிலிருந்து,
பாடலெனும் வெண்ணெய்யைக்
கடைந்தெடுக்கின்றது.

என்னுடைய மௌனம்;
அனற்பிழம்புகளாகக்
கொழுந்துவிட்டெரிகின்றது.
நான் இப்போது
பேச்சற்றவனாகக்
கிடக்கின்றேன்.

வெறுமையில் உன்னைத்
தொழுது வழிபடுவதற்காக,
கூட்டாகத் துதிபாடி,
இந்தச் சொற்களை
நான் உயர்த்தி எழுப்புகிறேன்!

ஃ ஃ ஃ

# 14. *பாவ* கீதா (உணர்ச்சிப் பாடல்)

'பெருவண்டின்' (கோத்தும்பி)
முதுகில் ஏறிக்கொண்டு,
கற்பனை என்கின்ற
பெரும்புகழானது, வந்தது.

கூராக்கப்பட்ட காற்றின் சிறகுகள்,
இயல்பான தன்மையில்
மெல்லிசை எழுப்பின.

ஒரு வெளிறிய புன்னகை,
பளிச்சிட்டுப் பின் மங்கலாயிற்று.

"என்ன, நீ என்ன சொன்னாய்?"
"தேன், தேன்!"-பாடும் வண்டு,
இவ்வாறு முரல்ஒலியில் மொழிந்தது!

'ஓம்'என ஒலிக்கின்ற சங்கிற்கு
மட்டுமே தாழ்ந்ததாக இருந்த,
அதன் குரலோ,
ஒற்றைக் கருத்தில்
ஊன்றியுள்ள ஒரு கவிஞனைப்போல,
அந்த மெல்லிசையில்
காணாமற் போயிற்று.

தன் சொந்த கருப்பையின்
ஊடிழையைக் கொண்டே
தன் நூலாம்படையை
நெய்துகொள்கின்ற
ஒரு சிலந்தியைப் போன்று,

தன் சொந்த, தனித்தன்மை
வாய்ந்த விதியைத்
தானே எழுதிக்கொள்கின்ற
ஒரு நெற்றியைப் போன்று,

தன் சொந்த நலத்தைத் தானே
தேடிக்கொள்கின்ற,
உயிர்க்கின்ற உயிரைப் போன்று,

திருக்கோயில் கருவறையில்,
சுதந்தரமாக எதிரொலிக்கும்
குதியாட்டத்தில்,

பொங்கியெழுந்து அடங்கி,
மீண்டும் பொங்கியெழுந்து
அடங்குகின்ற
பண்ணிசைப்புகளைப் போல,
உணர்ச்சி என்கின்ற
ஊமை இயந்திரமானது
சுற்றிச்சுற்றிச் சுழன்றது.

படைப்பு என்னும்
இறைவியின் முன்பு
எரிந்துகொண்டிருந்த
சாம்பிராணிப் புகையானது,
ஒரு நறுமணப்
படர்கொடியைப் போன்று,
அலைஅலையாக எழுந்தது.

மனம் என்னும் அரங்கம்
நிரம்பி வழிந்தது;
அன்போ, மலர்ச்சியில்
தளிர்த்தது.

*(வண்டின்)* வயிர வாயால்
உறிஞ்சப்பட்ட பூ ஒவ்வொன்றிலும்
சாறு தீர்ந்துவிட்டது.

அந்த மணிநேரம்,
மந்தமாக இருந்தது.
ஓ, என்ன நோவு,
ஆ, என்ன இறப்பு!

பயனுடையதும்
பயனற்றதுமான
அதன் வாழ்க்கை!

அதனுடைய 'பிறைநிலா' விழியைச்
சிரிக்கின்ற விண்மீன்கள் மீது
மின்னொளிபோலத்
தெறித்துக்கொண்டே,
காற்றுடன் சேர்ந்து
கண்ணாம்பூச்சி
விளையாடிக் கொண்டே,
உலகின் எல்லை விளிம்பு வரையிலும்
அது ஓடிச்சென்றது.

எவ்வாறோ உயிராதரமான
அந்த நூலானது,
உலகியல் வாழ்க்கையெனும்
மெல்லிழைத் துணியை நெய்தது.

அழகோ, காலத்தைத்
தோற்கடித்துவிட்டுக்
காத்துக்கொண்டிருந்தது;
நிலைபேறுடைமையோ இவ்வாறு கேட்டது:
'இன்னும் எவ்வளவு காலத்திற்கு?';
'இன்னும் எவ்வளவு காலத்திற்கு?"

சொற்கள் என்னுஞ் சாட்டையால்
அடிக்கப்பட்ட ஒலியின் சுவைமிக்க கூறு,
அதற்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி,
மகிழ்ச்சியெனும் பரிசிலாக இருந்தது.
அது, ஒரு பாடல் மட்டுமே; ஆம்,
பொருளற்றதாய், பயனற்றதாய்!

ஃ ஃ ஃ

# 15. ஈன்றெடுத்தல்

யாருமறியாத,
பெருமூளைப் பிறங்கொளியின்
கதிரொன்று,
வண்ணத்தின் மேல்
வண்ணமாகக்
கதிர்ச்சிதர்வு பெற்றது;
செவிக்கான
ஓர் அணிகலன்!

ஞானி, இதயத்தை மூடியிருந்த
மேலுறையை அகற்றினார்.
"லூசிகா, லூசிகா" என்று அவர் அழைத்து,
நரம்புகள் நிறைந்த சீப்பினைத் தட்டினார்;

"அறிந்திடு - இருந்திடு - பெருகிப்பாய்ந்திடு"-
ஹர ஹர, ஹரி ஹரி!"-
திருகுசுருளாக இயங்கிப்
புவி மீது இறங்கிவந்தது!

"இந்தக் கணமாயினும், அல்லது
பிற எந்தக் கணமாயினும்,
அனைத்தும் ஒன்றே தான்!" என்றார் அவர்.

அங்கே சொல்லானது
வியப்பினில் மூழ்கி,
மௌனத்தின் மடியில் உறங்கியது.

சுவைஞனே வா!
தொடக்கச்சிக்கல் அகற்று.
இருட்டினைக் கொல்.

பகீரதத் தேரின்
வலவனே (சாரதியே), நீதான்!

இப் பயணம் தடங்கலற்றதாகவும்
உடல்நலனுக்கு உகந்ததாகவும்
கடுவிரைவற்றதாகவும் இருக்கட்டும்.
வானத்து மென்மையில்
ஒன்றிரண்டு நடனங்களும் நிகழட்டும்.
உறுதியாக, இது ஒரு
புனிதச் செயலே!

வேள்வி இயற்றுபவர்,
தீயின் புகழ்மொழியைப்
பெறுகின்றார்;
மிதியடிப் பாதை முழுவதும்
நறுமணம் நிறைந்ததாகவுள்ளது.

இது ஒரு கந்தருவப் பொன்னுலகா?
அல்லது மென்னயமற்ற
பேச்சில் தோன்றியதோர்
உலகியல் படைப்பா?

பிறங்கொளியின் இயக்கம்,
பெண்ணொருத்தி ஆடையின்
மடிப்புகளைப் பின்தொடர்ந்து
செல்கின்றது.

அர்த்தமும் சப்தமும்
(பொருளும் ஒலியும்)
சந்தியில் சந்திக்கின்றன,
உயிருடன் இருக்கின்ற
உணர்வினை உருவாக்கிட!

ஃ ஃ ஃ

## 16

நோவினைத் தாங்க வலுவற்ற *பாவ*மானது,
கவிஞனிடத்தும் கவிதையிடத்தும்
சுதந்தரத்தை அனுபவிக்கின்றது!

ஃ ஃ ஃ

## 17

இந்தப் பிச்சைக்காரப் பாடல்கள்
போதும், போதும்!
ராஜ பாடல்களின் ராஜாங்கங்களை
நான் கட்டியாள வேண்டும்;
வேறு எதுவுமே எனக்கு
ஒரு பொருட்டன்று!

ஃ ஃ ஃ

## 18

நீ பாடித்தான் ஆகவேண்டுமெனில்,
நிறுத்தாமல் அடிக்கின்ற
மழையைப்போலப் பாடு!

உன்னாலே முடியுமென்றால், இப் புவியை
முடிவே அற்ற அகல்பரப்பாக மாற்றிவிடு!
நீ விதைத்துத்தான் தீரவேண்டுமெனில்,
நொறுங்கிய விண்மீன்களை விதைத்துவிடு;

ஆனால், முத்துகளையும் இரத்தினங்களையும் விதைத்து
மண்ணைப் பாழாக்கி விடாதே.
தெய்வங்களின் அன்பைப் பெறவும்
அவற்றின் பாராட்டினை ஈட்டவும்,
ஆன்மா, மேகங்களின்
விளையாட்டுவெளியைச்
சென்றடையட்டும்!

ஃ ஃ ஃ

# 19. இந்த அழகிய ஆண் குழந்தை

இந்த அழகிய ஆண்குழந்தை,
யாராக இருக்கக்கூடும்?

தன் மனம்போகும் போக்கிலான மகிழ்ச்சியில்,
அவன் தானாகவே,
எல்லாப் பக்கங்களிலும்
சுற்றிச்சுற்றிப் பார்க்கின்றானே!

1

அவன் சிரிப்போ,
ஒரு மன விளையாட்டு;

அவன் கண்ணோ,
ஒரு மகிழ்ச்சியான தோட்டம்;

நான்காம் பிறைநிலாவுக்கு
இணையாகத் தானும்
ஒரு பிறைநிலாவை
அவன் வைத்திருக்கின்றான்:
கவினார்ந்த அவனுடைய
புருவத்தைக் கவனியுங்கள்!

நான்காம் பிறைநிலா,
கீழ்நோக்கி ஊடாகப் பார்க்கிறது;
இந்த அழகிய ஆண்குழந்தை
யாராக இருக்கக்கூடும்?

2

முடி, அவன் முகத்தில்
வளரத் தொடங்கவில்லை,
ஆம், இன்னும்
வளரத் தொடங்கவில்லை.
அவனுடைய பிஞ்சு இதழ்களிலிருந்து

வழிகின்ற பால்,
இன்னும் துடைக்கப்படவில்லை,
ஆம், இன்னும் துடைக்கப்படவில்லை!
பெண் பித்து, அவனைத்
தொடவில்லை;
ஆம், இன்னும், இதுவரையிலும்
தொடவே இல்லை!

3

அவனுடைய வலக்கரமோ,
மென்தூவி நிறைந்த
ஒரு திண்டினைப் போன்று
மென்மையாக உள்ளது;
நம்பிக்கை என்னும்
எழுச்சி உணர்வைத்
தூண்டுவதாக உள்ளது.

அவனுடைய அகன்ற
மார்பினைப் பாருங்கள்:
பார்த்து, தங்களையே அதன்பால்
இழந்துவிடுகின்ற கண்களுக்கு
அது ஒரு சிறைக்கூடமே!

சொல் நண்பனே!
அவன் காமனே அல்லவா?
அல்லது, இன்னும் பால்குடிக்கின்ற
ஒரு குழந்தையா அவன்?

ஃ ஃ ஃ

இந்த அழகிய ஆண்குழந்தை
யாராக இருக்கக்கூடும்?

தன் மனம்போகும் போக்கிலான மகிழ்ச்சியில்,
அவன் தானாகவே,
எல்லாப் பக்கங்களிலும்
சுற்றிச்சுற்றிப் பார்க்கின்றானே!

ஃ ஃ ஃ

## 20. வண்ணத்துப்பூச்சி

வண்ணத்திற்கு
மேலே வண்ணம்;
நடுவினிலே
ஒரு மயிலிறகின் கண்!

ஃ ஃ ஃ

## 21. சிறகுகள் பற்றி..

பாலேடுபோல் படருகின்ற
காற்றைக் கொண்டு
புனையப்பட்டவையா,
அவை?

ஃ ஃ ஃ

## 22

தோன்றுகிறாய்; ஆனால்
தோன்றுமிடம் எதுவென்று
தெரியவில்லை!
காற்றுடன் இரண்டறக்
கலந்துவிட்டாய்;
இப்போது நீ எங்கே
புறப்பட்டுச் செல்கின்றாய்?
இந்திரனின் நந்தவனத்திற்கா, அல்லது
பொன்னுலகத் தோட்டத்திற்கா?

ஃ ஃ ஃ

# 23. எவரிடமும் நாம் சொல்லவேண்டாம்!

பறக்கின்ற குதிரையொன்றின்
முதுகில் அமர்ந்தே,
நெடுந்தொலைவு, ஆம்,
நெடுந்தொலைவிற்கு நாம் செல்வோம்;
எவரிடமும்
நாம் சொல்லவேண்டாம்!

பூக்களும் கனியும் நிறைந்த
வனப்பான ஒரு தோட்டத்திற்குள்
நாம் நுழைவோம்;
ஆங்கே எதையாவது
நாம் உண்போம்,
அதன் பெயரை
எவரிடமும்
நாம் சொல்லவேண்டாம்!

ஒன்றாகச் சேர்ந்து நாம் ஆடுவோம்;
குதிப்போம்; பறப்போம்; வளைவோம்!
சோர்வே இன்றி விளையாடுவோம்;
ஆனால் எவரிடமும்
நாம் சொல்லவேண்டாம்!

மல்லிகைக் கொடிப்
பந்தரின்கீழ் அமர்ந்து
கன்னத்தோடு கன்னம்
தொட்டுக்கொண்டிருக்க,
மென்மையான இசைஒன்றைத்
தாழ்குரலில் நாம் பாடுவோம்;
ஆனால் எவரிடமும்
நாம் சொல்லவேண்டாம்!

ஆங்கே சிறு பாம்புகளாக
இருப்போம் நாம்;
படமெடுத்தாடுவோம்!
அது யாவுமே, புல்லும்
பூக்களுமாகவே இருக்கும்!
ஆனால் எவரிடமும்
நாம் சொல்லவேண்டாம்!

உறக்கத்தில் நம் உடல்களைக்
கழற்றி எரிந்துவிட்டுக்
கனவுகளின் நகரத்திற்கு
மௌனமாக நாம் செல்வோம்;
எவரிடமும்
நாம் சொல்லவேண்டாம்!

ஃ ஃ ஃ

## 24

நாயொன்று, தன் வயிற்றுவலி
தீர்வதற்காக,
குணப்படுத்தும் தாவரத்தை
அதன் மணத்தால் கண்டுணரப்
போராடுவது போல,
என் உயிர்மூச்சானது,
விளிம்புவரை சூடு நிறைந்ததாய்,
வலியைத் தடுக்கச்
சக்தியற்றதாய்,
கண்மூடிக்கொண்டு,
எதையோ துழாவித் தேடுகிறது!

நாயோ, தரையில் உருண்டு
உருண்டு ஓடுகின்றது.
துயரத்தால் சோர்வடைந்த
என் மனமோ,
மயக்கமடைந்து உறக்கத்தை
நாடுகின்றது!

ஃ ஃ ஃ

## 25

மலரானது அழிகின்றது;
ஆனால் அதன் மணமோ
தங்கிநிற்கின்றது!
இறப்பும் அழகும் எதிரிகளாக
இருக்கவேண்டுமா, என்ன?

வாழ்க்கையிலிருந்து
பிரிக்கமுடியாத அழகிற்கு,
இறப்பு ஒன்றுதான்
இறுதி முடிவா?

உடலின் மண்ணும் காற்றும்,
ஐம்பூதங்களுக்கே
திருப்பிக்கொடுக்கப்பட்ட பின்
எஞ்சிநிற்பது எதுவுமில்லையா?

நம்மையெல்லாம் பிணைக்கின்ற
வாழ்க்கையில், ஒவ்வொரு தனித்த
வாழ்க்கை என்கின்ற 'தேன்'
சேமித்துவைக்கப்படுகின்றது.

ஃ ஃ ஃ

## 26

நண்பனே! அனைத்துப்
படைப்புகளிலும்
நிறைந்திருந்து
நரனின் நாராயணன், நட்பென்னும்
தெய்விக-மெய்ஞ்ஞானப் பாட்டினை
இந்தப் பறவையிடம்
மூச்சாகத் தந்து,
அதன் உயிரை
நிரப்புகின்றார்.

ஓ, கடவுளே! யுகங்களின்
முதிர்ச்சியிலிருந்து
வடித்தெடுக்கப்பட்ட
நட்பு (சினேகம்) என்கின்ற
சாரத்தைப் பற்றி,
எப்போதாவது நாங்கள்
அறிவோமா?

ஃ ஃ ஃ

## 27

நண்பர்களுக்கிடையே,
என் சென்னாவுக்கு இணையாக,
எவரே நிற்க முடியும்?

அவரை விஞ்சுகிறவர்
எவரேனும் உளரெனில்,
அது, அவரே தான்!

ஃ ஃ ஃ

## 28. 'கெலயர கும்பு' — அமைப்பின் சிதைவு பற்றி...

பன்னீராண்டு நோன்பு
போய்விட்டதே;
நாங்கள் கட்டிய
மந்திர மாளிகை,
மறைந்து போயிற்றே!

மனித முயற்சி,
தெய்வச் சோதனையில்
தோல்வியுற்றதே!

ஓர் ஊழிப் பெருவெள்ளம்,
ஆதார நிலத்தையே
அடித்துக்கொண்டு
சென்றுவிட்டதே!

ஃ ஃ ஃ

# 29. கருடிகா (கருடன்)

இது மந்திரம்,
அறிவை எதிர்த்துநிற்கின்ற
சொற்களை நூற்கின்ற
ஒரு தந்திரம் ஆகும்.

சந்தமோ,
தன்னறிவுள்ளதாக,
கண்ணேறு படாததாக,
திசைகளால் ஊறுபடாததாக
உள்ளது.

மூச்சு என்னும் உயிர்ச்சத்தினின்று,
அது செதுக்கி உருவாக்கப்படுகின்றது.
மூச்சு உயிர்க்கின்ற வில்நரம்போடு
பொருத்தப்பட்டுள்ள சிறகானது,
அதன் இலக்கை நோக்கி,
எந்தவிதக் கடுமுயற்சியுமின்றி
நகர்கின்றது.

அது, கருடனைப் போல்
கீழே இறங்குகின்றது.
இது மாயமா, உன்மத்த நிலையா,
நஞ்சா, இறப்பா, உறக்கமா,
வசியமா அல்லது மறதியா?

இல்லை. அது முற்றிலும் தூய்மையான,
வெண்மையான பாலேதான்!

ஃ ஃ ஃ

அட, பாம்பே!
ஊர்ந்தியங்கும் படைப்புயிரே!
உனக்கு இரண்டு நாக்குகள்!
காதுகளோ இல்லை.
உன் பல்லில் நஞ்சு இருக்கின்றது;
காற்றை உண்டு வாழ்கின்றாய்!

நரகத்தில்கூட, உன்னிடமிருந்து
பாதுகாப்பு எதுவும் இல்லை.
இன்று, நீயோ புகழ்ந்து
படமெடுத்து ஆடுகின்றாய்;
ஆனால் நாளையோ,
நீ நஞ்சினைத்தான் கக்குவாய்!

போ, என்னைச் சபி,
அது பற்றி எனக்குக் கவலையில்லை;
என் உள்ளங்கையில் உள்ள
கருட ரேகையை
நீ பார்க்கவில்லை போலும்!

ஃ ஃ ஃ

## 30

விண்மீன்கள், வானத்தில்
தங்கள் முகங்களைத்
தொங்கவிட்டுக் கொண்டுள்ளன.

நீரில் காணப்படும்
ஒரு நிழலைப் போன்று,
ஆன்மாவோ,
இரவின் இருட்டைக்
கண்டு நடுங்குகின்றது.

ஃ ஃ ஃ

## 31

புல் மூடிய நிலம்,
அசைவற்ற நீர்கொண்ட
ஏரிகள்,
வானமும் உடுக்களும்,
இப் பெரிய பிரபஞ்சம் -

இவை அனைத்துமே
தத்தமக்கே உரிய
இசை நயங்களோடு,
நடனமாடுகின்றன.

இந்த நடனத்திற்கு
முடிவே இல்லை;
வரம்பும் இல்லை;
தன் விருப்பப்படி இயங்கும்
உரிமையும் இல்லை!

ஃ ஃ ஃ

## 32

அழகு என்பது, கண்ணினால்
உள்ளுக்குள்
கொண்டுசெல்லப்படுவதன்று,
அது கண்ணிற்குக்
கண்ணாக இருப்பது;
கண்ணுக்குப்
புலப்படாதது!
உருவமும் வடிவமும்
அழகை அளந்து
அறுதிசெய்வதில்லை;
ஏனெனில், இருக்கின்ற
பொருளின் பகுதிகளே,
அவைதாம்!

ஃ ஃ ஃ

## 33

தலைகளை இழக்கின்றோம்;
இதயங்களை வெல்கின்றோம்;
செல்வக் காலத்தும்
அல்லற் காலத்தும்
நாம் நம் வாழ்க்கையை
ஒன்றாகவே கழிக்கின்றோம்.
காதலின் தலையோ, வாலோ,
இரண்டுமே ஒன்றுதான்;
அதை முற்றிலும் அறிந்தவர்
ஒருவரும் இலரே!

ஃ ஃ ஃ

## 34

ஓ, மேகமே! ஓ, உயிரே!
என் வானத்தில்
ஒரு சாட்சிக்காரனைப்போல,
நீ அலைந்துதிரிகிறாய்!
இம் மண்ணுக்கு
இறங்கிவா, ஆம்!
விதைப்புக்குத் தக்கவளான
பூமி அன்னையின் உடலைப்
பழங்களால் நிரப்புவதற்காக!

ஃ ஃ ஃ

## 35

காணப்படுவதற்கும்
காணப்படாதவற்றிற்கும்
இடையே நடக்கும் வணிகம்,
அழகாகவே உள்ளது.
உயிருள்ளவையும், உயிரற்றவையும்
தெய்வத்தினிடம் ஒன்றிணைகின்றன!

ஃ ஃ ஃ

## 36

ஒவ்வொரு மிலாறிலும்
ஒவ்வொரு கிளையிலும்
வேறுவேறு விதமான
ஒரு பூ!
பிறப்பிடம் ஒன்றேதான்;
ஆனால் பெயர்கள்தாம் பற்பல!
'நீ' என்பதும் 'நான்' என்பதும்,
'அவர்கள்' என்பதில்
உள்ளவைதாமே!

ஃ ஃ ஃ

## 37

கதிரவனின் ஆறு,
இதோ, இங்கே இருக்கிறது!
வா, அதில் நுழைந்து
நீயே உன்னைத் கழுவித்
தூய்மையாக்கிக்கொள்!

ஃ ஃ ஃ

## 38

குயிலொன்று
ஒரு மாமரத்தின் உச்சியில்
குந்திக்கொண்டிருந்தது.
அந்த ஆண்குயில் குந்திக்கொண்டு,
பாடிக்கொண்டிருந்தது.
சில வேளைகளில்
பாடுவதை விட்டுவிட்டு,
உன்னை உற்றுப் பார்ப்பதோடு
நிறைவுகொண்டு,
வெறுமனே குந்திக்கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

## 39

மாலைக் கதிரவனின்
தோள்களின் மீது,
வெள்ளி நூலினாலான
மயில் துகில்!

ஃ ஃ ஃ

# 40. பருவங்களின் பாடல்

பகல் - இரவு என்னும்
துலாக்கோல்,
திரைக்குப் பின்னே
திறந்துகொள்கின்றது.
உடுக்கள் உலகத்தின்
ஒப்பனையோ,
மணிகள் பதித்த,
கடவுளின் அணிகலன்கள்.

மலை, சமவெளிகள்,
மரங்களின் உச்சிகள்
- ஆகியவற்றின்மீது
பூக்களின்
மின்னல் வெட்டொளி!
காலைகள் மற்றும்
மாலைப் பொழுதுகளின்
ஒரேமாதிரியான
சிவந்த ஒளிக்கலவை.

மண்ணின் முழுமையான
ஆர்வத் தழுவலில்
பெருங்கடல் விடுகின்ற
நெடுமூச்சு,
கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும்
கொண்டல்நீரைக்
கொண்டுவருகின்ற
காற்றின் வீச்சு.

கூலத்தின் *(தானியத்தின்)*
காதினைப் போன்று
எழுகின்ற,
வீழ்ந்த விதையின் மாயம்.

இங்கேயோ இறப்பு,
ஆனால் பிறிதோரிடத்தில் பிறப்பு.
வாழ்க்கையெனும்
விளையாட்டின்
மூச்சுயிர்ப்பு.

திடுமென, உடல்களின் இணைவில்
ஏறும் காதலின் பித்தமானது,
மல்லிகையானது மலர்ச்சிஎனும்
தன் ஆடையை அணிவதுபோல,
முறுவல்களைச்
சேர்த்துக்கொள்கின்றது.

இனிய முத்தங்களின் அழுத்தத்தால்,
காதலர்களின் உதடுகள் விரிந்திடவும்,
திருமண வாழ்க்கையின்
உயிர்நிலைச் சாரம்,
பனிக்காலத்துப் பசும்இலைகளில்
காட்சியளிக்கின்றது.

முகில்நிறைந்த வானத்தின்
மேற்கவிகை (விதானம்),
எப்போதும்
புதிதாகவே உள்ளது.
கோள் நடனத்தின் ஓசைநயம்,
நிலைபேறுடையதாக உள்ளது.

'புதுக்கு, புதுக்கு!' என்று பகர்கின்றது,
பருவங்களின் பாடல்.
அண்டவெளியின் மௌனமோ,
சாமர்த்தியமாக
அப் பண்ணிசைப்பைப்
பின்பற்றுகின்றது.

ஃ ஃ ஃ

## 41

பூந்தாது பூவாக
மலர்கின்றது;
சிறகுகள் புழுவிலிருந்து
விரிகின்றன;
பக்கங்களை வலிமையால்
தகர்த்தெறிந்தும்,
திரையினைக் கிழித்தும்,
வண்ணத்துப் பூச்சிகள்
தங்கள் விடுதலையைப்
பெறுகின்றன!

ஃ ஃ ஃ

## 42

உயிர்ப்பு நிரம்பிய
பூவிதழ்களும் பூக்களும்,
இப்போது வண்ணத்துப்-
பூச்சிகளாக உள்ளன;

வண்ணத்துப்பூச்சியின்
சிறகுகளோ,
நடனத்திற்குப் பிந்திய
அமைதியுடன்,
தற்போது பூக்களின்
தோற்றத்தைப்
பெற்றுவிடுகின்றன.

ஃ ஃ ஃ

## 43

இது, புவியின் கருப்பையிலிருந்து
கிடைத்திருக்கும் தங்கம்;
நீல நிறமானது, நீரை உறிஞ்சி
பச்சை நிறத்தை உமிழ்கிறது;
உலகமோ, வியப்புடன் இதைக்
கூர்ந்துநோக்குகிறது!

⁂ ⁂ ⁂

## 44

சிராவணாவின் காற்றுகள்,
கடுமையாக வீசுகின்றன!
சூறையாடுவோர், தங்கள் கைகளில்
பெரும் ஊதுகொம்புகளுடன்,
சிவனின் மேளங்கள்மீது
விரைகின்றனர்.
பிணமோ,
மீண்டும் உயிர்பெறுகிறது!

⁂ ⁂ ⁂

## 45

நீயும் நானும்
என்கின்ற ஒருமை நிலையில்,
ஆன்மாவில்
பாடலொன்று
பிறந்தது;
காட்டிலோ,
வெண்மை நிலவொளி
காய்ந்தது!

⁂ ⁂ ⁂

# 46. கனவுகளுக்குள்ளே ஒரு கனவு

"ஆங்கே நிற்கின்ற
நீங்கள் யார், அன்னையே?"
"நீ ஏன் உசாவுகிறாய்?
எனக்காகக் கவலைப்படுபவர் யாருளர்?"

"ஏன் நீங்கள் அவ்வளவு சோர்வுற்றிருக்கிறீர்கள்?
உங்கள் பெயரைச் சொல்லுங்களேன்!"
"பெயரா, முன்பு எனக்கு ஒன்று இருந்தது;
இன்றோ, அவ்வாறு எதுவுமே இல்லை!"

"மங்கலத் தோற்றம் பெற்றிருக்கின்றீர்களே!
உங்கள் மக்கள்தாம் யாவர், தாயே?"
"சுதந்தரமாக வீசுகிறதே அந்தக் காற்றைக் கேள்,
என் மக்கள் யாவரென!"

"உங்கள் சொந்த மக்களென நீங்கள் அழைக்கக்கூடிய
எவரும் உங்களுக்கு இல்லையா, தாயே?"
"அப்படி ஒருவரையும் யான் காணேன்;
அவர்கள் எல்லாரும் மறைந்துவிட்டனர்!"

"உங்களுக்கென தனி அகம் எதுவுமில்லையா?
நீங்கள் பிற நிலங்களிலிருந்து வந்தவரா?"
"அது எப்படிப் பொருந்தும்? என் அகம்(நிலம்),
மற்றவர்களின் கைகளில் அல்லவா உள்ளது?"

"புதிராகப் பேசுகின்றீர்களே, தாயே!
அவையும் நேர்த்தியானவையாகவே உள்ளன!"
"இதில் வியப்பதற்கொன்றுமில்லை, மகனே!
அவை எல்லாம் என்னோடு நான் விட்டுவிட்டு வந்தவைதாம்!"

"தங்களுக்கு அரச குடும்பத்து முகச்சாயல் உள்ளதே,
தங்களிடம் அரசியின் தோற்றப்பொலிவு காணப்படுகிறதே!"
"இருக்கலாம்! இன்றைய நாள்கள்
எனக்கு இருண்ட நாள்களே!"

"ஏதாவது ஒரு நிலத்தின் அல்லது மண்டலத்தின்
இறைவியா, நீங்கள்?
"என்பால் உண்மையான பற்றுக்கொண்டோருக்கு,
அவர்களின் அகக்காட்சியில் நான் ஓர் இறைவியே!"

"ஏன் நீங்கள் வந்தீர்கள்? என்னிடம் தங்களுக்கு
என்ன வேண்டும், தாயே?"
"யோகப்பயிற்சி இல்லாமல், எனக்கு என்னவேண்டுமென்று
உன்னால் அறியமுடியாது!"

"இந்த 'யோகம்' என்பது என்ன அன்னையே?
எனக்கு அவ்வழியைக் காட்டுங்களேன்!"
"முதலுமின்றி முடிவுமின்றித் தியாகம் செய்தலே,
அந்த 'யோகம்' என்று, நான் சொல்வேன்!"

"எதையாவது நான் விட்டுப்பிரிய வேண்டுமென்று,
எனக்குக் கூறுகின்றீர்களா, அன்னையே!"
"நான் கேட்டால், அதை நீ செய்வாயா? சொல்!
முதலில் நான்அதை அறிய விரும்புகிறேன்!"

" 'சரி' என்று நான் சொன்னால், நான் செய்வேன்,
அவ்வாறு நான் சொல்லலாமா?"
" 'செய்யலாம்', 'சொன்னால் செய்வேன்' - இப்படியெல்லாம் சொன்னால்,
நீ எப்படி ஒரு மாவீரனாக இருக்கமுடியும்?"

"அச்சம், என்னைக் கையைப் பிடித்து இழுக்கிறதே,
நான் அஞ்சுகிறேன், அன்னையே!"
"மனஉரம் வாய்ந்தவனாய் இரு, என் மகனே!
முன்னே வா, செயலைச் செய்!"

" 'சரி' என்றும் என்னால் சொல்ல முடியவில்லை;
'முடியாது' என்றும் என்னால் சொல்ல முடியவில்லையே!"
" அறிவுடையோர் ஒருமுறை தான்
தங்கள் நல்வாய்ப்பினைச் சோதித்துப் பார்ப்பர் -
இதை நான் நன்கறிவேன்!"

" சண்டீ, சாமுண்டீ! நான் என்ன செய்தல் வேண்டுமென்று
சொல், தாயே!"
" நீ ஆண் மகனாயிருந்தால்,
உன் உயிரை என்னிடம் கொடு, கொடுப்பாயா?"

- நான் அதிர்ந்து போனேன்;
என் மயிர்க்கால்கள் குத்திட்டுநின்றன;
நான் விழித்துக் கொண்டேன்;

வெளியே பார்த்தேன்;
பொழுது புலர்ந்திருந்தது!

ஃ ஃ ஃ

## 47

இவர்களெல்லாம்
என் பிள்ளைகள்தாமா?
இந்த முப்பத்துமூன்று
கோடிப் பேர்களும்
என் பிள்ளைகள் தாமா?
அவர்கள் உண்மையிலேயே
என் மக்களாக
இருக்கமுடியுமா?

ஃ ஃ ஃ

## 48

சூரியக் கணப்புஅடுப்புகள்
ஒளிமிகுந்து எரிகின்றன;
ஒவ்வொரு வீட்டிலும்
சமையல் நடந்துகொண்டிருக்கின்றது!
'ஓம்' என்னும் ஒலி,
இப்போது ஆலைகளில் மட்டுமே
ஒலித்துக் கொண்டிருக்கின்றது.
சொர்க்கத்தைச் சேர்ந்த
மந்தாகினியும் பாகீரதியும்
நரகத்திற்கு இறங்கிவந்து,
வைதராணி பெருநீர்ப்பரப்பில்
கலந்துவிட்டனர்!

ஃ ஃ ஃ

## 49

உன் திருவாய்,
என் மேனி முழுவதும்
நிறைந்து இருக்கின்றது.
உன் முத்தங்கள் அனைத்துமே,
என்னுடையவையே;
நீதான், மார்பு ஆழம் உள்ள
கொங்கையாகும்;
என் உடல் முழுவதுமே
பால் நிரம்பியதாக உள்ளது!

ஃ ஃ ஃ

# 50. குருட்டுத் தங்கம்

குருட்டுத் தங்கம்
ஆடிக்கொண்டிருந்தது!
அதன் காலடியில் கிடந்த,
அதனால் வென்றடக்கப்பட்டவர்கள் மீது,
வீறாப்பாய்த்
துள்ளி நடந்துகொண்டிருந்தது!

## 1

சவர்க்காரம்போல்
வெள்ளையாக இருந்த,
தாயின் எலும்புகளைக் கொண்டு
செய்யப்பட்ட,
கண்ணுக்குப் புலப்படாத சிலம்புகளை,
அதன் கால்கள் பெற்றிருந்தன!

இறந்த குழந்தைகளின்
சோழிக் கண்களைப் போன்று
உணர்ச்சியற்ற நிலையில்,
அதன் தொண்டையைச் சுற்றிலும்,
கண்டசரம் ஒன்று தொங்கியது!

ஏழைமக்களின் வயிறுகளிலிருந்து
தோன்றும் பெருங்கடல்போலும்
தீயினாலான எரிபந்தமொன்றைத்
தன் கைகளில் அது பிடித்துக்கொண்டிருந்தது!

கண்ணீரைக் குடித்துக்கொண்டு;
அருவருப்பான வாய்களிலிருந்து,
'உதோ, உதோ' என்று
பிரார்த்தனைக் குரலை,
அது எழுப்பிற்று.

அதன் நெற்றியிலோ,
உழைக்கின்ற மனிதர்களின்
தோலிலிருந்து திரட்டப்பட்ட
புனிதச் சுண்ணம் இருந்தது!

## 2

'பணம்'எனும் மணி ஒலிக்கின்ற
அங்காடிகளிலிருந்தும்,
இசை முரலுகின்ற
மாளிகைகளிலிருந்தும்,
கோயில் மணிகளின்
ஒலிப்பிலிருந்தும்,
ஏற்கின்ற பாங்கில்
எதிரொலிகள் வந்தன;
அது இப்போது நிலத்தில்,
தட்டையாகப் படிந்துகிடக்கின்றது.

## 3

உங்கள் தோள்களுக்கு அதைத் தூக்குங்கள்.
அக் குடிபோதை ஆட்டமும்,
பந்தடிக்கும்போது ஆட்டக்காரர் நிற்கின்ற
குரங்குபோன்ற நிலையும்
ஒரேயடியாக அவனை அழித்தேவிட்டன.
பிணமானது, இறப்பில் பாதுகாப்பாக உள்ளது;
மக்கள் தத்தம் இல்லங்களை அடைகின்றனர்.

ஆனால் அவளுக்குள்ள ஒரே ஒரு புகலிடமோ,
ஆழமான குட்டைதான்;
பெண்ணின் ஊழ்விதியோ,
நாயின் 'விதி'நிலையை விடவும்
மோசமானதாகவுள்ளது!

ஃ ஃ ஃ

# 51. கரடி நடனம்

இரும்பு வளையம்,
நடனக் கோல்;
தன் உடலின் மீது
ஒரு கம்பளிப்போர்வை-
அவன்தான், இதோ
இந்தக்கரடிவேட்டைக்காரன்!

பாட்டொன்றை முணுமுணுத்துக்கொண்டு,
வளையத்தை அடித்துக் கொண்டு,
தன் வித்தைகளைச் செய்யுமாறு
கரடியை ஆட்டிப்படைத்துக் கொண்டு
நம் வாயிலில் அவன் நிற்கின்றான்!

தேன் உண்ணும் இக் கரடியை
எந்தக் காட்டிலிருந்து
அவன் கொண்டுவந்துள்ளான்?
"எசமானரின் வாயிலில்
காவல் காத்துக்கொண்டிரு;
உனக்குத் தக்ககூலி
கிடைக்கும்!"
அவன் சொல்வது இதுதானா?

இக் கரடி, திரேதாயுகத்து
இராமனையும்
துவாபரயுகத்து
கிருஷ்ணனையும்
கலியுகத்து
கல்கியையும்
பார்த்திருக்கின்றது.

அந்த ஆண்டவனோ,
கிருதயுகம்
முடிவடைந்தபோது,
'நெரிலே' பழத்தை
உண்டவன்!

ஃ ஃ ஃ

"தாய்மார்களே,
வாருங்கள்!
உங்கள் குழந்தையைக்
கொண்டுவாருங்கள்!
அவன், எல்லாவிதமான
அச்சங்களையும்
கொன்று
தீர்த்துவிடுவான்;

அவனுடைய 'முடி'
ஒவ்வொன்றும்,
வீமனுடைய வலிமையைப்
பெற்றிருக்கிறது.
ஒரு 'முடி'யை
வாங்கிக்
குழந்தைக்கு
அணிவியுங்கள்,
அது போதும்!"

ஃ ஃ ஃ

'ஆடு, மகனே, ஆடு'
என்று அவன் கூறி,
'தனனா தானா
தந்தனா' என்று
தன் பாட்டைப்
பாடுகிறான்.

அக் கரடியும்
இனியதோர்
குழந்தையைப்போல்
அவ்வளவு நேரமும்
செறுமிக்கொண்டு
ஆடுகிறது.

தானே, ஓர் அடிமை
அவன்;
இருந்தும்,
பசித்தோர்க்கு
உணவளிக்க,

அவன் வந்துள்ளான்.
அவன் நின்றுகொண்டு,
"என்னை ஆடவைக்கின்ற
அனைவரும் மகிழ்ச்சியாக
இருக்கட்டும்!" என்று
பிரார்த்திக்கின்றான்!

அனைவருடைய
மனங்களையும்
அறிந்த மனிதன்
நடனமாடுகிறான்;
மற்றவர்களையும்
நடனமாட
வைக்கின்றான்!

கரடியின் பெயரால்
தன் வாழ்க்கையை
நடத்துகின்றான்;
வேறு குறிக்கோள்
எதுவும் அவனுக்கில்லை.

தந்திரமான
மனிதன்தான்!
குரங்குகளும்
பசுக்களும்
அவனுக்காக
ஆடுகின்றன.

மனித சாதியின்
நடனமோ,
கரடியின்
நடனத்தைத்
தோற்கடிக்கின்றது-

இதனை,
இக் கவிஞன்
கண்டிருக்கின்றான்!

ஃ ஃ ஃ

## 52

காணப்படுவதைக் கண்டும்
கேட்கப்படுவதைக் கேட்டும்,
நிழல்களுடன் நான்
நடனமாடினேன்!
நான் உண்டேன்; ஆனால்!
எதை உண்டேன் என்பது,
எனக்குத் தெரியாது,
அவ்வாறு உண்டது,
என்னைச் சோர்வுறச்
    செய்தது,.
ஆனால் பசியோ
    தீராமல்
அப்படியே தங்கிவிட்டது!

ஃ ஃ ஃ

## 53

என் ஆன்மாவின்
    மௌனத்தில்
உன்னை, ஆம்.
உன்னை மட்டுமே
நான்
அழைக்கின்றேன்;
ஏனெனில்
**'வைகறை'**
வரும்போது,
ஒளியானது
அதிக தொலைவில்
பின்னால் இருக்காது!

ஃ ஃ ஃ

## 54

அந்த சக்தியானது,
ஒரு கூர்மென்
கத்தியைப் போன்றது;
இந்த உலகமோ,
ஒரு களைச்செடி
போன்றது.
அதுவரை, அறிதுயிலில்
நாம் பொறுமையைப்
பேணிக்காத்து வருவோம்!

ஃ ஃ ஃ

## 55

ஓ, கிளியே!
செம்பழுப்பான
இளங்காலையில் புலர்கின்ற
கிழக்குத் திசையில்
உன் வீட்டை, நீ கட்டு!

ஃ ஃ ஃ

## 56

உறக்கமெனும் பெருங்கடலில் நான்
தடுமாறிக்கொண்டிருந்தபோது,
ஏழுகன்னியர் என்னிடம் வந்து,
'எழுந்திரு' என்றனர்;
மீண்டும் என்னை,
'எழுந்திரு' என்றனர்.

அந்த வெளியிடத்தில், கோமாதாவைப்போல்
சாய்ந்து நான் நின்றிருந்தேன்;
விளக்குக் கம்பத்தில் எரியும்
தீக்கொழுந்துகளைப்போல,
அக்கன்னியர் தாங்களே அமைவாக,
என்னைச் சுற்றி நின்றுகொண்டனர்.

என் தலையையும் கால்களையும்,
இடையையும், உதடுகளையும்
அவர்கள் தொட்டு
ஒலி எழுப்பியபோது,
என் உயிர்நிலை உறுப்புகளைப்
பற்றியிழுத்ததும்,
கருமமானது, கொதிநிலைக்கு
வந்துவிட்டது.

கல், தோற்றப்படிமம், குழந்தை
- ஆகிய இவை அனைத்தையும்,
ஆம், நான் நம்பிய அனைத்தையும்
வேண்டிநின்றேன்.
பானையொன்றின் அடியில் உருகுகின்ற
வெண்ணெய்யைப் போன்று,
(உயிர்மூச்சு) பிராணம்
உள்ளுக்குள் உருகிற்று.

என் அச்சத்தையும் துயரத்தையும்
நான் மறைத்தேன்;
எனக்குள் நானே பின்வாங்கிக்கொண்டு
தவத்திற்கு ஆயத்தமானேன்;
போரில் நான் வென்றிருப்பதாகவே
எண்ணினேன்.

ஆனால் ஒரு துணித் துண்டிலிருந்து
ஒவ்வொரு துளி நீரையும்
யாரோ ஒருவர்
பிழிந்தெடுப்பது போன்று.
கன்னியரில் ஒருத்தி.
என் தொடையைக் கிள்ளியெடுத்தாள்.

நோவினாலும் குழப்பத்தினாலும்,
உடல் முழுவதும் வாயாக,
நான் கத்தினேன்.

வியர்த்திருந்த என் உறுப்புகளில்,
முடியானது, நிமிர்ந்து
குத்திட்டு நின்றது.

(இசையின்) சுரம், சுரத்திற்குள்
கரைந்து, கலந்தது.
அப் பாடல், வாழ்த்தினை
ஈன்றது.
வெற்று நரம்புகளிலிருந்து,
முழுத்தொனி அமையப்பெறாத
ஓர் ஒலி,
செவியில் கேட்டது.

அணைந்துபோன
தீக்கொழுந்துகளைப்போல,
பாதரசம் போன்ற அக் கன்னியர்
பறந்துசென்றனர்.
அருளற்றவனாக, இற்றுப்போகிற
ஈரமண் தூணாக
நான் கீழே விழுந்தேன்!

அந்த ஏழு கன்னியரும்
நான் விழுந்ததை விரும்பவில்லை;
அவர்கள் ஒவ்வொருமுறை
தொட்டபோதும்,
மகிழ்ச்சியானது, பாலின் ஏடு போல
திண்ணியதாயிற்று.
அந்த நாளில், 'ரச'மானது,
'விரச'மாக மாறிற்று.

ஃ ஃ ஃ

ஓ, கன்னியரே! அவை இரண்டும்
சமநிலையில் சந்திக்கின்றபோது,
என்னுடைய உண்மையான ஆழங்களை
அளந்துபார்ப்பதற்காக,
மீண்டும் வாருங்கள்!

ஃ ஃ ஃ

# 57. ஜோகி

1

பட்டணத்துக் கப்பால்,
மூன்று சாலைகள் முடிந்து
ஆற்றுப்படுகை தொடங்குகின்ற இடத்தில்,
நீரோடை ஒன்று,
பாதி மறைந்து பாய்கின்றது.

திருட்டுக் கால்நடைகள்
சுதந்தரமாக மேய்கின்றன.
அச்சமடைந்த நாடோடிகள்,
இங்கே தங்கள் வழியைத்
தவறவிடுகின்றனர்.

பகலை, இரவென்று
தவறாகக் கருதிக்கொண்டு,
இரண்டு ஆந்தைகள்
அலறுகின்றன.

2

அதன் இடப்புறம்,
இடுகாட்டுக்குச் செல்கின்ற பாதை ஒன்று
கிடக்கின்றது.
காதற்கடவுளால் வீசியெறியப்பட்ட
ஒரு பச்சைவண்ண மேற்போர்வையைப்போன்று,
நீர்ப்பாசிகள்,
குட்டை ஒன்றை மூடியுள்ளன.
கண்ணுக்கு இனிமையாக இருக்கின்றது.
மாசடைந்த நீரோ,
பாசிகளின் பிரிவின்கண்,
அழைக்கின்றது.

3

மேலே,
நமக்கு வலப்புறம்,
காளி அன்னையின் நிலத்தின்
எல்லைக்கு அப்பால்,
ஓர் இருண்ட குன்றம்
நீண்டு கிடக்கின்றது.

அதன் நடுவில் உள்ளது,
ஒரு புளிய மரம்.
ஒரு சிறிய ஏற்றமான
மேட்டு நிலத்தில் அமர்ந்துகொண்டு,
அதன் உச்சியிலிருந்து பார்த்தால்,
பன்னிரண்டு மரங்கள்
உள்ள சோலை ஒன்றை
நீங்கள் காணலாம்.

4

ஆங்கே, பகற்பொழுது முழுவதும்,
வௌவால்கள் அலறுகின்றன;
'கிரீச்' ஒலி எழுப்புகின்றன.
அச் சோலையின் உள்ளேயும் வெளியிலும்
அச்சங்கொண்ட புறாக்கள்
கூட்டங்கூட்டமாகப் பறக்கின்றன.

அங்கே ஓர் அமுதக்கொடி, ஒரு வேம்புவைக்
கோத்துப் பின்னிக்கொண்டு
படர்ந்துள்ளது.
ஆலமரம், தன் பாலைச்
சிந்திக்கொண்டிருக்கின்றது.
அரசமரமோ, தன் தலையை
அசைத்துக்கொண்டிருக்கிறது.

5

கீழே, அத்திமரத்தின்மீது,
பலாவைப்போன்று
கொத்தான சிவப்புப்பழம்
ஒட்டிக்கொண்டிருக்கிறது.
கண்ணில் ஆசையைத் தூண்டி,
தேன்கூட்டிலிருந்து தேன்
கொட்டிக்கொண்டிருக்கின்றது.

குறிக்கப்படாத ஒரு மூலையில்,
மாமரம் ஒன்று வளர்ந்துள்ளது.
அதன் அடியில், எறும்புப் புற்றொன்று,
ஏழுதலைப் பாம்பொன்றுக்குத்
தங்குவதற்கு இடம்
அளித்துக்கொண்டிருக்கின்றது.

*6*

இளவேனிலுக்காக,
மாமரத்தின் மீது தங்கிக்கொண்டு,
குயில், எனக்குக் காதல் அழைப்பு
விடுத்துக்கொண்டிருக்கிறது,
தன் துணைவிக்குச் செய்வதுபோல!
திரும்பத் திரும்ப ஒலிக்கின்ற,
தொழிற்சாலை ஒன்றின்
சீழ்க்கை ஒலியைப் போன்று,
அந்த ஆண்குயில்
என்னை அழைக்கின்றது,
என்னை அழைக்கின்றது;
அது, ஓய்வுக்காகச் சற்றும்
நிறுத்தவே இல்லை!

7

அறியாத மணத்தால் இழுக்கப்பட்டு,
தெவிட்டு நிலையுற்ற வண்டுகள்,
தங்கள் புலன்உணர்வுகளை
இழக்கின்றன.
குறிக்கோள் எதுவுமின்றி அவை
அலைந்து திரிகின்றன.
தாங்கள் செல்லும்வழி
இன்னதெனத் தெரியாத
அளவிற்கு, அளவுக்குமீறிக்
குடித்துள்ளன.
"'இளவேனில்! வந்துவிட்டது இளவேனில்!
குக்கூ! குக்கூ! குக்கூ!
'குக்கூ' என்று அழைக்கிறது குயில்:
"குக்குக் குக்கூ; குக்குக் குக்கூ!"

8

குயிலின் சுரம் மிக உயர்ந்ததாக,
இனிமையானதாக உள்ளது;
ஓ, ஜோகி! நான் சென்று,
அதுஎன்ன நிறம்,
என்ன கண் என்று
பார்த்துவரட்டுமா?
அதன் ஓசைநயத்தின்
அழைப்பைக் கேட்டுத்
தோட்டத்து மலர்களெல்லாம்
மலர்கின்றனவே!

பூக்களெல்லாம்
பழங்களாகின்றனவே;
காய்களெல்லாம்
பழுக்கின்றனவே!

9

நாள் முழுவதும் அது
ஊஞ்சலாடுகிறது;
உயிராசை தீரப் பாடுகிறது!
**ஓ, ஜோகி!** மாம்பழத்தின் இனிப்பில்,
கோடையின் வெப்பத்திலிருந்து
மறைத்துக்கொள்கின்றது!
புல்லாங்குழலோன், தன் புல்லாங்குழலை
வாசிப்பது போல,
"குக்கூ, கூ கூ கூ" என்று அந்த
ஆண்குயில் பாடுகின்றது.

வேறு எதையும் என்னால்
நினைக்க முடியாது;
**ஜோகி**, நான் சென்று
பார்த்தாக வேண்டும்!

10

ஓ, நீ இங்கே தான் இருக்கிறாயா?
நீ வந்துவிட்டாயா?
ஓ! **ஜோகி!**, சரியான கணத்தில்தான்
நீ வந்துள்ளாய்!

நீ எனக்குத் தந்த திருநாமத்தை (**பெயரை**),
இளவேனில் பறித்தெடுத்துக்
கொண்டுபோய்விட்டது.

இளவேனிலின் ஒலி,
என் மூளையின்
நரம்புகளில் இருக்கிறது.
வேறு எதுவும் எனக்குச்
செவியில் விழவில்லை;
மூலைக்கு மூலை
அதுதான் எதிரொலிக்கிறது.

*11*

நான் கோயிலுக்குச்
செல்லும் வழியில்,
'குக்கூ, குக்கூ' என்று என்னை
அந்த ஆண்குயில் அழைக்கின்றது.
தியானத்தின் நடுவே,
'ஓம், குக்கூ' என்கின்ற
அதன்குரல் எனக்குக்
கேட்கின்றது.
கனவில் எனக்கு வருகின்ற
அப்பாடலின் ஒலி,
என்னை ஒரு மாம்பழம்
ஆக்கிடுமோ?
என் மனம் நிலைகுலைந்துள்ளது.
ஓ, **ஜோகி**! சரியான கணத்தில்தான்
நீ வந்துள்ளாய்!

*12*

இது என்ன ஒலி? என்ன குயில்?
என்ன மரம்?
என்ன நோவு? எதனை இடைவிடாது
அழைக்கின்றது?
அக் குரலுக்கு பதில் சொல்லிச் சொல்லியே,
குன்றங்கள் தங்களையே
தேய்த்து அழித்துக்கொண்டுள்ளன.
வெய்யிலின் ஒளியோ, நடனத்தில்
வியர்வை சிந்துகிறது.
காற்றுவெளியோ,
மழைபெய்யும் என்கின்ற நம்பிக்கை
நிறைந்ததாக உள்ளது!

ஃ ஃ ஃ

# 58. சுவரூப தீபம்!

ஒளியானது காதலை
இருட்டாக ஆக்கியபோது,
பகற்பொழுது நழுவிச்சென்றது;
வெறுமையானது,
விண்மீன்களின்
அரண்மனையாக ஆயிற்று.

என் தோளின்மீது கையைப் போட்டு
காற்று இவ்வாறு குசுகுசுத்தது:
"வா, நாம் செல்வோம்!"
-என்று அழைத்தது;
"இப்போது ஏன் இந்த
நெருங்கிய நட்பு?
காலந்தாழ்த்திய இந்த
காதற் சமிக்ஞை ஏன்?"
-என்று, காற்றை நான் வினவினேன்.

தொலைதூர வில்வண்டிகளின்
மணிகளோ,
சில்வண்டின் 'கிரீச்' ஒலியோ,
என்ன சொல்லி அழைத்ததுவோ,
எனக்குத் தெரியாது; இதை
நான் ஆணையிட்டுக் கூறுகிறேன்!

பனிக்காலத்துக் குளிர் என்னை
இறுக்கமாகப் பற்றிக்கொண்டது.
மின்னலடிக்கும் சக்கிமுக்கிக்கல்,
முகத்தைக் காட்டிற்று;
நன்கு தெரிந்த காட்சிதான்.
உடலோடு உடலாகக்
கைகோத்துக்கொண்டு,
விரல்களும் இதயங்களும்
ஆடின!

என் விரலிலிருந்த மோதிரம்
நழுவி விழுந்தது;
பூவோ, செடிக்கு
ஒரு பாரமாக அமைந்தது.
அடையாளம் முக்கியமன்று;
அங்கீகாரம் உண்டா
என்பதே முக்கியமானது;
காதல், வாணிகம் அன்று!

காதோடு காதாகப் பேசும் சொற்கள்,
மோகச் சுருள்களிலிருந்து வந்தன;
நினைவு என்பது, கானரூபம்;
பாவமோ, ஆன்மாக்களை
ஒன்றுடன் ஒன்றாக
இணைக்கின்றது;
சுவரூபம் மட்டுமே,
தீபம் ஆகும்!

ஃ ஃ ஃ

## 59

வெப்பம், வெளிச்சம், ஒளிர்வு -
இப் பிரபஞ்சத்தைக் கவர்கின்ற
காற்றுவெளியின் காந்தசக்தி -
இவை அனைத்தும்
என் மூச்சில் நிறைந்து,
அதை ஒரு கவிதையாக
ஆக்குவது எப்போது?

அப்போது வானம்தான்,
அதன் உடற்பகுதியாக இருக்கும்;
விண்மீன்கள்,
அதன் முடியாக இருக்கும்!

ஃ ஃ ஃ

## 60

வேதத்தைவிடப் பெரியதாக,
வசனத்தைவிடச் சிறியதாக,
சொற்களை எழுப்பிக்
குவியல் குவியலாக வீசமுடியும்!

ஆனால், 'அந்த' வாழ்க்கையை
வாழ்ந்திடாமல்,
அந்த 'அறிவை' அறிந்திடாமல்,
எவ்வாறு
சுருதியானது
வரமுடியும்?

ஃ ஃ ஃ

## 61. நிருத்திய யக்ஞம் (நடன வேள்வி)

குன்றின் உச்சியிலிருந்து,
மயில்,தன் கொண்டையை உயர்த்தி,
இவ்வாறு அழைக்கின்றது:
"மேகங்கள் இங்கே உள்ளன.
அவை நமக்கு மின்னலை, இடியை,
மழையைக் கொண்டுவருகின்றன".

உலகம் புலம்பிக் கொண்டிருக்க, தாண்டவத்தை
வாசிகத்துடனும் சிரிப்புடனும் கலந்தே
மயிலானது, தியானத்தில் மூழ்கித்
தன்னந்தனியாக ஆடிக்கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

எல்லா திக்குகளிலும் இருள் சூழ்ந்திருக்கிறதே,
ஓ, சிகண்டி! ஓ திரிதண்டி!
உங்களோடு உங்கள் தோழியான சாமுண்டி!
இதுதான் உலகத்தின் முடிவோ?
ஊழிவெள்ளமோ? நிலைபேற்றுக் காலத்திய
விடுதலையோ?
'தக்கா தை, தை திக்கி தக்க தா'
இவ்வாறு மழையின் இசைநயம் கேட்கிறதே!

ஃ ஃ ஃ

மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும்
ஆறு நடனமாடுகிறதே!
அதன் ஓசை நயமும் அதுவே!
கட்டியங் கூறப்பட்ட அறுவடையானது,
வளரும் பயிருக்கேற்ப நடனமாடுகிறது.
உயிர்க்குலமனைத்திற்கும்
பருவங்களுக்கு அரசன்
அளித்திட்ட பரிசில் இது!

ஃ ஃ ஃ

ஓ, குமரா! காலந்தாழ்த்தாதே!
வா, வந்து அறுவடையை
நிறை அறுவடையாக்கு!
ஓ, நண்பா!
ஓ, மகிழ்ச்சியான தோழனே!
ஆயிரம் மயில்கள் இங்கே
கார்த்திகை மண்ணின்
கூதிர்ப்பருவ ஒளிர்வுடன்
ஒளிவிடுகின்றன, காண்!

ஃ ஃ ஃ

## 62

கிளிகளின் நெற்றிகளில் நட்பின் ரேகைகள்;
வெவ்வேறு காடுகள், வெவ்வேறு வீடுகள்,
வெவ்வேறு வகைகள், வெவ்வேறு ஒலிகள்.
ஆயினும் இரவுகளைக் காணும்போது,
அவை ஒன்றாக நெருங்கிவந்து
நட்பு கொண்டாடுகின்றன.
அவை திடுமெனப் பறக்கத் தொடங்குகின்றன.
திடுமென அவை கீழே இறங்குகின்றன.
எங்கே முடியுமோ, அங்கே தங்கள்
நாள்களைக் கழிக்கின்றன;
அத்தகைய மக்களை எப்போதேனும்
நான் காண்பேனோ?

ஃ ஃ ஃ

## 63

பாலா, நான் சொல்வதைக் கவனி.
குருவைத் தேடு;
உன் இதயத்தின் உள்ளே,
அவருடைய விருப்பங்களுக்கு இணங்கி நட!
எங்கே இருட்டு இருக்கின்றதோ,
அங்கேதான்
ஒளியின் களஞ்சியமும்
இருக்கின்றது.

நட்பின் பிணைப்பு ஒன்றுதான்,
உண்மையான பிணைப்பு!
நம்முடையதென்று
நாம் உரிமைகொண்டாடுபவற்றைத்
துய்ப்பது போதாது;
எவ்வாறு கொடுப்பது,
எவ்வாறு பெறுவது என்பதை
எவன் அறிந்திருக்கின்றானோ,
அவனே உண்மையான வீரன்!

ஃ ஃ ஃ

## 64

கண்ணாடியில் உங்கள் முகத்தை
உங்களால் பார்த்துக்கொள்ள
முடியவில்லையா? தவறு என்ன?
உங்கள் பார்வையை
நீங்கள் இழந்துவிட்டீர்களா?
அல்லது கண்ணாடிதான்
முழுவதும் தூசுபடிந்ததாக உள்ளதா?

இருட்டிலே உங்களுக்குக்
காது கேட்கவில்லை என்று
ஏன் நீங்கள் சொல்கின்றீர்கள்?
விழிப்பான நிலையில் உள்ளபோது,
ஒளி தேவைதானா?

ஒரு காலத்தில் இருந்த அழகு,
இன்று அங்கே இல்லை;
வாயினை இனிக்க வைக்கின்றனவே
சொற்கள்,
அவையே இனிப்புத் தன்மையனவாகி
விடுவதில்லை!

ஃ ஃ ஃ

## 65

ஓசை நயத்திற்குப் பின்
ஓசை நயமென்று
வளைத்து மடக்கிப்
புதிதாக எதையேனும்
நீ செய்திருக்கிறாயா?

அமர்ந்து, அல்லும் பகலும்
தியானம் செய்.
இருட்டே ஒளியன்று.
ஒளிமட்டுமே, பகற்பொழுதாகி விடாது.

விழித்திருக்கும் நிலையானது,
உறக்கத்தை அறியாது.
விண்மீன்களுக்குக்
கண்கள்-
கண்ணின் மணிகள்-
கண் இமைகள்
தேவையில்லை.

தவறா?
குறையா?
பிழையா?
இல்லை.
எல்லாமே, சரியாகத்தான்
உள்ளன!

# 66. π (பை)

அது, ஏன் எல்லாவற்றையும்
கடந்ததாக உள்ளது என்று
π(பை)யைக் கேட்காதே;

'i' என்பதைக் கேள்வி கேட்காதே!
அதேபோல், ஏன் அது சதுரமாக உள்ளதென்றும்,
மறிநிலை எண் (minus) வகையினதாக
உள்ளதென்றும் கேட்காதே!

'*e*' என்பதோ, அறிவுக்குப் பொருந்தாதது.
ஏன்? காரணம்,
கற்பனையிலும் சரி,
மெய்ந்நிலை எண் - புனைவியல் எண் ஆகியவற்றின்
கூட்டுத் தொகையிலும் (Complex number) சரி,
இந் நிகழ்வுகள் அனைத்திலுமே,
'உண்மை' என்பதே, அடிப்படையாக உள்ளது.

உருண்டோடுகின்ற ஆண்டுகளின் சுழற்சியில்
ஒருவர், 'ஆமாம்', 'இல்லை' என்கிற
பாடலைக் கேட்கின்றார்.
இது, நமக்குப் பெருத்த ஏமாற்றமே!
வாழ்க்கை என்பதைப் பிறப்பு-இறப்பு என்னும்
அடைப்புக் குறிகளுக்குள்
அடக்கலாம்!

ஆனால், உயிரோடு இருக்கின்றோமே, அது,
இசை மூச்சிற்கேற்ப,
தாளகதியில் விரிந்து சுருங்குகிறது.
அதை ஒர் 'அலை' என்றா கூறுகின்றாய்?
நன்றே!
நான் அதை 'ஒலி' என்று கூறுகின்றேன்.

'நீ வாயாடாமல் இருந்தால் நல்லது"
என்று நீ மன்றாடுகின்றாய்!
'நன்றி உனக்கு'! -
நான் ஊமையனாக்கப்படவில்லை;
எனினும் நான் அமைதி
காக்கின்றேன்!

இடைவெளியோ,
ஆழமானதாக இருக்கிறது;
இந்த சமிக்ஞைக்குக்
கொஞ்சம் அர்த்தமிருக்கும்
என்றே நான் கருதுகிறேன்.

'நானும்-நீயும்' என்பது,
ஓர் உயிருருவின்
துணிகர முயற்சி.

ஒரு வட்டத்தில்,
இரண்டு என்பது,
ஒன்றாக உள்ளது!

❁ ❁ ❁

மூலம்: **தத்தாத்ரேய இராமச்சந்திர பேண்ட்ரே** (கன்னடக் கவிஞர்)
ஆங்கில ஆக்கம்: **ஜி.எஸ். அமூர்**
அதன் வாயிலாகத் தமிழாக்கம் வெளிவந்த நூல்: **தத்தாத்திரேய இராமச்சந்திர பேண்ட்ரே** (அம்பிகாதனயதத்தர்), **சாகித்திய அக்காதெமி** வெளியீடு.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| ம.பொ.சி யின் தமிழ் உணர்வு | 40.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ் மொழி-இன-இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |

**Pub.No.446** **தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு** **50.00**